22

# நாஜசீவ - - - -

# - வாதக்கட்டளை.

விசேட விருத்தி உரையுடன்

ா. சாரதா புத்தகசாலை,
. பாளையப்பன் தெரு,
தங்கசாலை போஸ்டு, சென்னை.

R6
N24
18/214

ஓம்
தத்ஸத் பரப்பிரம்ஹ்மனே நமஃ
ஸ்ரீ சேஷாத்திரிசிவனார் அருளிச்செய்த

# நாஞ்ஜீவவாதக் கட்டளை

இஃது
கோடகநல்லூர் தேஜோமயாநந்த சுந்தரசுவாமிகள் பாதசேகரராய
முருக்குமீண்டான்பட்டி ஸ்ரீலஸ்ரீ
அவதூதநமச்சிவாயகுருமூர்த்திகளினது அனுக்கிரகத்தினால்
ஷை சுவாமிகளின் மாணாக்கரிலொருவனாகிய
இளையரசனேந்தல்

## வை. சொக்கலிங்கம் பிள்ளையால்

விசேடவுரையென்னும் இரகசியார்த்ததீபிகை
இயற்றப்பட்டு

கோவில்பட்டி
ஸ்ரீ. க. செண்பகாநந்த முத்துசுவாமிகளால்
பரிசோதித்து

மதுரை புதுமண்டபம் புஸ்தக வியாபாரம்
இ. ரா. ம. குருசாமிக்கோனார்
அவர்கள் விருப்பத்தின்படி

த. ச. துரைசாமி முதலியார்
அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1924. [அணா 8.

ரிஜிஸ்டர் காபிரைட்.

PRINTED AT THE S. A. M. PRESS, MADRAS. 17-7-24.

சென்னைத் தமிழ்ப்புலமை

ஸ்ரீமான், எஸ். வேதமாணிக்கம் பிள்ளையவர்கள் கூறிய

## குளக விருத்தம்.

தத்துவத்தி லயமாகிச் சமாதி கூடத்
தருவழியிற் சேஷாத்ரிச் சிவனர் தந்த
சத்தியமா கியஞான ஜீவ வாதக்
கட்டளையி னுட்பொருளைக் கருத்தா லாய்ந்து
சத்தியத்தை யாவருக்கு முணர்த்த வேண்டித்
தனித்தமிழில் சொக்கலிங்கப் பிள்ளை யென்பார்
சித்தமிகு மநு[illegible]த்தின் ரகசி யார்த்தத்
தீபிகைவி சேடவுரை தீட்டி னாரால். (1)

மன்னுமது ரைப்பதிவாழ் குருசா மிக்கோன்
மனவிருப்ப மீடேறும் வகையாற் சீர்த்தி
தன்னிகரில் லாதொளிர்ஸ்ரீ சார தாபுத்
தகசாலை யதிபரெனுந் தகையின் மிக்கச்
சென்னைநகர் துரைசாமி முதலி யார்தஞ்
சிரமத்தா லச்சிட்டிங் குதவ நின்றார்
துன்னுமிக பரத்துணையா மிந்நூல் தன்னைத்
தொட்டாலு மாநந்தஞ் சுரக்கு மாதோ. (2)

# சென்னை ஐகோர்ட்டு

## டிரான்ஸ் லேட்டர்

## ஸ்ரீமான்,

## R. N. சுப்பிரமணியபிள்ளை அவர்களின்

## அபிப்ராயம்.

வேதாந்த விசாரணை செய்பவர்களுக்கு இன்றியமையாத சேஷாத்திரி சிவனர் அருளிய நானஜீவவாதக்கட்டளை என்னும்பெருநூலின் அருத்த விசேஷத்தை யாவரும் தெளிய உணருமாறு இளையாசனேந்தல் வாசியும் கோடக நல்லூர் சுந்தரசுவாமிகளின் திருக்கூட்ட அடியார்களில் ஒருவருமான ஸ்ரீமான் வை. சோக்கலிங்கம் பிள்ளை யவர்கள் எழுதியிருக்கும் உரையை கண்ணுறுங்கால் கண்ணற்ற ஒருவருக்கு கண் கிடைத்தது போல பிரகாசிப்பதுடன் உரையை விளக்கச்சேர்த் திருக்கும் படங்களும் வெகு ஆனந்தத்தை விளைக்கின்றன. இதனைப் பரிசோதித்த கோவில்பட்டி ஸ்ரீமான் க. செண்பகாநந்த முத்துசாமி யவர்களும் அச்சியற்றிய த. ச. துரைசாமி முதலியார் அவர்களும் வேதாந்த உலகிற்கு அரியபெரிய உபகாரம் இயற்றி யிருக்கின்றனர் என்பது எனது அபிப்ராயம்.

சைதாப்பேட்டை
23—7—24

R. N. சுப்பிரமணியம்பிள்ளை
கந்தரனுபூதி உரையாசிரியரும்
சிவாலயத் தோத்திரமஞ்சரி ஆசிரியரும்.

உ

சிவமயம்.

# நானுஜீவவாதக் கட்டளையின் விசேடவுரை என்னும் இரகசியார்த்த தீபிகை.

## நான் முகம்.

ஸ்ரீ சேஷாத்திரி சிவனார் ஜீவர்கள் யதார்த்த சொரூபத்தை யறிந்து கிருதார்த்த ராகும் வண்ணம் பெருங்கருணையாலருளிச்செய்த தத்துவக்கட்டளை என்று வழங்குகின்ற நானுஜீவவாதக்கட்டளை வசனமானது தன்னை யறிந்த பின் முமுக்ஷுவைக் கிரந்தத்தில் பிரவர்த்திக்கச் செய்கின்ற (அநுபந்த சதுஷ்டயமாவன) ஜீவப்பிரம்ஹ ஐக்கிய மென்னும் விஷயம் சாஸ்திர ஞான மென்னும் சம்மந்தம், அனர்த்த நிவர்த்தி ஆனந்தப்பிராப்தி யென்னும் பிரயோசனம் அந்தக்கரண சுத்தியுடைய அதிகாரி. இஃதறிந்தவர்க்கே யன்றி யேனையோருக்குப் புலப்படாது. அந்தக்கரணத்தில் மல 1 விட்சேப 2 தோஷம் நீங்கி ஏகாக்கிரசித்தனாய் ஆவரணமட்டு முடையவனாய் சாதன சதுட்டய 3மடைந்து அசாஸ்திரப் பிரபஞ்சம் 4 விட்டு விதி நிடேதங் 5 கடந்து காபத்திரயாக்னி 6 யால் வெதும்பி விதிவதுபசனனத்துவ 7 மாய் அஷ்டமந்திர பூர்வக 8 அஷ்டாங்க பஞ்சாங்க சாஷ்டாங்க 9நமஸ்காரத்துடன் நான்கு பணிவிடை 10 யும் செய்து "நானாரோ" வென்று விசாரிக்காநின்ற மாணாக்கனுக்கு மழை யாலங்கட்டியானதுபோல் ஜீவகாருண்யம், 11 ஈஸ்வரபக்தி, 12 பாசவைராக்கியம், 13 பிரம்மஞானம 14

என்னு மிந்நான்குமே யொரு திருமேனியாய்ச் சற்குணசம் பன்னரா 15யெழுந்தருளியிராநின்ற பிரமவித்துப் பிரமமெ ன்னும் சற்குருவானவர் 16 அத்தியாச அபவாதவாயிலாக நீயே சுத்தப் பிரமமென்று அநுக்கிரகிக்கத் தொடங்கினர்.

அந்தக்கரண தோஷ நிவர்த்தி முதல் சதுர்வித ...ணி விடை யீறுயுள்ள நியமந்தவறுத மாணுக்கனே இந்நூலை எளிதிலுணர்ந்து ஞானவைராக்கிய பரனுய் அதன் காரண மான சிரவணமனன நிதித்தியாசனத்தையும் அதன் சொரு பமான தத்வமித்தியா பாவனையையும் அதன் காரியமான வகங்காரக்கிரந்தி நிவர்த்தியையும் அதன் முடிவான பிரஹ் மைவாகம் சிவோஹமென்னும் யதார்த்த ஞானத்தையும் முறையே பெற்று அதன் பலமான மோட்சமடைவான்.

முன்னூலிலுள்ள ஆந்திரா (ரகசியா) ர்த்தத்தை இந் நூலிற் பிரகாசமாய் வெளிப்படுத்து கின்றமையா லிதற்கு ரகசியார்த்த தீபிகை என்னுநாமம் வரலாயிற்று.

இந்நூலின்கண் உதாரணமும் வியாக்கியானமும் தே வையான பல இடங்களில் ஆங்காங்கு இலக்கமிட்டு வேண் டிய மேற்கோள்களையும் வியாக்கியானங்களையும் அவ்விலக் கத்தின்படி தொகுத்து இந்நூலின் முதலிற் சேர்த்திருக் கிறது.

தேனீ பல மலர்களின் மதுவை ஒன்று சேர்ப்பது போல குரு கிருபையால் பல நூல்களில் திரட்டியபொருளை ஆராய்ச்சியினலும் சொந்த யுக்தி அனுபவத்தினலும் இந் நூலில் எழுதப்பட்டது.

நூன்முகம் சம்பூரணம்.

உ

சிவமயம்.

# நானாஜீவவாதக்கட்டளை.

## அரும்பொருள்விளக்க விசேடவிருத்தியுரை.

### 1. மலமாவது.

பூர்வசென்மங்கடோறுந் தொன்றுதொட்டுச் செய்து வந்த அசுத்தவாசனை. அதாவது திடபாவனையினால், முன் பின் எண்ணமின்றி யுண்டாகுங் குரோதாதி யந்தக்கரணத்தினது சூட்சுமாவஸ்தையின் சமஸ்காரம். இன்னும் பதார்த்த (வஸ்து) ஞானத்தினாலே வெளிப்படுத்தப் பட்டதாயும் அந்தப் பதார்த்தத்தை அனுசரித்ததாயும் சித்தத்தினுடைய உற்பத்திக்குகாரணமாயுமுள்ளது; அதில்தேகவாசனை உலகவாசனை, சாஸ்திரவாசனை, அசுரவாசனைஎன, நான்கு. தேகவாசனை யாவது, அழகு, ஆயுள், ஆரோக்கியம், என மூன்று. அழகு, பீதாம்பராதி வஸ்திரங்களினாலும் பொன்னாதியாபரணங்களினாலும் சரீரத்தை யலங்கரித்தல். ஆயுள்: கற்பாதி ஔடதங்களினாலும், உணவாதி யறுசுவைகளினாலுங் காயத்தைவளர்த்தல். ஆரோக்கியம்; சந்தன, புஷ்ப, வனிதாதி விஷயங்களினால் தேகாரோக்கியஞ்செய்தல்.

உலகவாசனை; எல்லாருந் தன்னைப்புகழவேண்டுமென்றும், ஒருவரும் தன்னை நிந்தனை செய்யா திருக்கவேண்டுமென்றும் நினைப்பு.

சாஸ்திரவாசனை; ஆத்மஞான சாஸ்திரங்களை, விட்டு இதரசாஸ்திரங்களைக்கற்று பண்டிதராகவேண்டுமென்னுஞ் சிந்தனை.

அசுரவாசனை: இடம்பம்,கெர்வம்,அகங்காரம், மமகாரம், முதலியவைகள்.

இந்த வாசனைகளானது ஒருமயிர் நுனிப் பிரமாணத்தில், பதினாயிரத்திலொருபங்கா யதிசூட்சுமமாய், கண்டத்தில் ஹிதை யென்னும் நாடியிலடங்கியிருக்கிறது. இவை, ரசோ, தமோகுணங்களினம்சம். இந்த நான்கு வாசனைகளும் நிஷ்காமியகன்ம முதலியவற்றால் நீங்கும். வாசனையென்பது, பற்றுதல், அபிமானம்.

## 2. விக்ஷேபம்.

மனமானது விஷயங்களிற் சென்று சதா சலித்துக் கொண்டேயிருப்பது. இது மூர்த்தியுபாசனை, ஈசுரநாமோச்சாரணம் அசபாமந்திரம், குருசேர்வை, குருத்யானம், இவைகளால் நீங்கும்.

## 3. சாதனசதுட்டயம்.

நித்தியானித்திய வஸ்துவிவேகம், இசமுத்திரார்த்த பரபோக விராகம், சமாதிசட்கசம்பத்து, முமூச்சுத்துவம். இவற்றுள் நித்தியாநித்திய வஸ்துவிவேகம்-பிரமமே நித்தியவஸ்து, மற்றசகத்து முழுவதும், அநித்திய வஸ்துவெனவறிக. இதற்குஎது சித்தசுத்தி.

சொரூபம்; பிரமமாத்திரம் சத்தியம், அன்னியமா யிருக்கிற ஜீவேசுர சகத்தெல்லாம் அசத்தியமென்று சாத்திரவிசாரணையினல் நிக்ஷபிக்கிறது.

காரியம்; அதைத்தானே சதாகாலமும் நானுவிதமாய்ச் சிந்திக்கிறது.

அவதி; பிரமமாத்திரம் சத்தியம்; அன்னியமா யிருக்கின்ற ஜீவேசுரசகத்தெல்லாம் அநித்தியமென் றிருக்கின்ற நிக்ஷயம் ஒன்றினலும் போகாமல் நன்ருய்த் திடமா யிருப்பது.

இகமுத்திரார்த்த பரபோகவிராகம் இகலோகத்தி லுள்ள இச்சையும் பரலோகத்திலுள்ள இச்சையும் விடுதல்.

இதற்கு ஏது இகலோக பரலோகங்களிலுள்ள ஸ்திரீ முதலான விடயங்களில் அசுத்த துக்க அனியத்துவ முதலான தன்மைகளை விசாரித்து வெறுப்பு வருகிறது.

சொரூபம்; அந்த விடயங்களை நாய் தின்று கக்கின அசனம் போலவும் காலாக்கினி நரக முதலானது போலவும் கண்டு விட்டுவிடுகிறது.

காரியம்; விட்டவிடயத்தி லொருபோதும் திரும்ப ஆசைவரா திருத்தல்.

அவதி; தேகத்தைத்தொட்டு பிரமலோக பரியந்தமா யிருக்கின்ற இகலோக பரலோகங்களிலிருக்கிற சகல போகங்களிலேயும் ஆசையில்லாமல் வீதித்திரணம்போல உபேக்ஷையாயிருப்பது.

## 4. சமாதிசட்க சம்பத்து.

சமம் (சாந்தி) தமம் (தாந்தி) விடல் (உபரதி) சகித்தல் திதீச்சை) சமாதானம், சிரத்தை, என 6.

இவற்றுள் சமம் மனோநிக்கிரகம் அதாவது மனதைச் சலியாம லகத்திலடக்குதல்.

தமம்; பாகிய இந்திரிய நிக்கிரகம் அதாவது சுரோத்திராதி ஞானேந்திரிய பஞ்சகமும் வாக்காதி கன்மேந்திரிய பஞ்சகமும் விடயங்களைக் கவராதிருத்தல்.

விடல்; ஈடணாத்திரய தியாக பூர்வமாக சர்வ கன்ம சன்னியாசமாம். (ஈடணை,) மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என 3

சகித்தல். சுகதுக்கங்களை சமத்துவம்பண்ணுதல். அதாவது சுகம்வந்தபோது சந்தோஷமடையாமலும், துக்கம் வந்தபோது சலியாமலும், சமத்துவமாய் நிறுத்துதல்.

சமாதானம்: சடேந்திரியங்களை சிரவணத்தில் நிறுத்துவது. அதாவது பெரியோர்களிடத்தில் சேர்ந்து சிரவணம் பண்ணுகையில் மனது பாகிய இந்திரியங்களில் செல்லாமல் சிரணவத்தின் பேரில் ஏகாக்கிரமாக நிறுத்துவது.

சிரத்தை: பக்தி விசுவாசமென இரண்டு. பக்தி தாய் தந்தை முதலானவர்களிடம் உள்ள பிரியம்விட்டு, செகதீசனிடம் மிகுந்த அன்பு வைத்தல்.

விசுவாசம்: சர்க்குரு வேதாந்த வாக்கியங்களில் மனதை ஏகாக்கிரமாக நிறுத்துவது. இப்பக்தி விசுவாசமே முக்தி வழி கூட்டும்.

இதற்கு ஏது இயம நியமாதி.

சொரூபம்; விடயத்திலே பிரவிர்த்தியற்றிருக்கிற சித்த நிரோதம் (சர்வேந்திரியவர்க்கம் நஷ்டமடைந்து மனோநாசமாகுதல்) இதற்கு அமநஸ்கமென்று பெயர்.

காரியம்:—ஒன்றிலேயும் பிரவிர்த்தியற்ற படியினாலே விவகாரச் செயம்.

அவதி:—பிரவிர்த்தியற்ற படியினாலே சுழுத்தியைப் போலே தேக முதலான விடயங்களை மறந்திருப்பது.

முமுச்சுத்துவம்: மோச்சாபேச்சை. அதாவது சுபேச்சை, விசாரணை, தனுமானசி, என்னும் இம்மூன்று பூமிகளையும் வரிசைக்கிரமமாக அடைதல். இந்த நான்கு சாதனங்களையும் உடையவனே பிரமவிசாரணைக்கு அதிகாரி.

இதற்குஏது சாதுசங்கம் சொரூபம்-தலை ரோமத்திலே நெருப்புப் பற்றிக்கொண்டவன் தடாகத்தைவிரும்புவதுபோல பின்னையொன்றிலேயும் ஆசையில்லாமல் மோச்சமாத்திரத்திலே தீவிரமாக ஆசையுண்டாகிறது.

காரியம் சற்குருவைத்தேடி யடைகிறது. அவதி-சகல கர்மங்களையுந் தியாகஞ்செய்வது. இந்தசாதனங்கள்4-க்கும பலமேதென்றால் இந்த 4-ம் ஒருமித்துக் கூடாமல் வேறு வேறாய் பிரிந்திருந்தால் சுவர்க்காதியாயிருக்கின்ற புண்ணியலோகப் பிராப்தியேபலம். நான்கும் ஒருமித்துக்கூடினால் இங்கேதானே ஆத்மவிசாரபலம்.

## 5. அசாத்திரப் பிரபஞ்சம்.

தீவிரம்-மந்தம்என இருவகை. இவற்றுள்காமக்குரோதாதிகமேதீவிரம், மனோகர்ப்பிதசாதி கன்மாதிகமேமந்தம்.

இந்த அசாத்திரப் பிரபஞ்சமானது ஆத்துமசாக்ஷாத்காரத்துக்கு விரோதமானதால் இவற்றை ஞானப்பியாசத்துக்கு முன்னமேவிடத்தக்கது.

## 6. விதிநிடேதம்.

விதிவிலக்கு-அதாவது சாஸ்திரங்களில் சொல்லியபடி புண்ணிய கன்மங்களை செய்தலேவிதி; சாஸ்திரங்களில் நிசேசித்திராநின்ற பாவகன்மங்களைச் செய்யாதிருப்பதே நிடேதம்.

## 7. தாபத்திரயாக்கினி.

ஆதியாத்மீகப், ஆதிபௌதீகம், ஆதிதெய்வீகம் என மூன்று.

இவற்றுள் ஆதியாத்மீகமாவது; அரசர் மிருகம் பசுபக்ஷிமுதலியவற்றால் வருந்துன்பம்.

ஆதி பௌதீகம்: பிரிதிவி முதலிய பூதங்களால் வருந்துன்பம்.

ஆதி தெய்வீகம்: தேவதைகளால் வருந்துன்பம் இன்னும் அந்தக்கரணம் ஞானேந்திரியம் கன்மேந்திரியம் என்னும் 14-மே ஆதியாத்மீகம்.

அதன் விஷயங்கள் 14-ம் ஆதிபௌதீகம் அதன் தேவதைகளே ஆதிதெய்வீகமாம்.

இஃதே ஞாதுரு, ஞானம் ஞேயம் என்னும் திரிபுடி.

## 8. விதிவதுபசனனத்துவமாவது.

விதிப்படி சரணமடைவது அதாவதுசற்குரு சிஷ்யருடைய மத்தியில் யாதாமொரு அதிகாரி தாபத்திரயாக்கினியால் வெதும்பி வியாகுலசித்தனாய் நானூரோ எனக்கிந்த சம்சாரம் எக்காரணத்தால் வந்ததோ இதுயாவர் முகத்தால் நிவிர்த்தி யாமோவென்று விசாரித்து சகலபிரபுத்துவமும் விட்டு பத்திரபுஷ்பலாதி சகபாணியாய் தசாவஸ்தைகளுண்டாய் தேகபுளகாங்கிதனாய் வித்தியாவினய வைராக்கியாதி சற்குண சம்பன்னரான ஸ்ரீ குருவையடைதல்.

## 9. அஷ்டமந்திரம்.

[சுலோகம்: குருகீதை] சைதந்யம் சாஸ்வதம் சாந்தம்வியோமாதீதம்நிரஞ்சனம் நாதபிந்துகலாதீதம் தஸ்மை ஸ்ரீகுரவே நமஹா.

## 10. அஷ்டாங்க பஞ்சாங்க சாஷ்டாங்கம்.

இவற்றுள்:அஷ்டாங்கம்.இரண்டு கரங்களும் இரண்டு பாதங்களும் இரண்டு புயங்களும் மார்பும் சிரசும் இவையெட்டுத்தானங்களும் நிலத்திலழுந்த நமஸ்காரம் செய்தல்.

பஞ்சாங்கம்; இரண்டு பாதங்களும் இரண்டுகரங்களும் சிரசும் இவை 5-ம் நிலத்தில் பட வணங்குதல். இஃது ஸ்திரீகளுக்கு முறை.

சாஷ்டாங்கம்; தடிபோல் தரையில் விழுந்துவணங்குதல்.

## 11. நான்கு பணிவிடை.

ஆப்தம் அங்கம் தானம் சத்பாவம் என நான்கு. இவற்றுள் ஆப்தம் குருவுக்கநுகூல விர்த்தியே ஆப்தம்.

அங்கம்:–குருபாதப் பிரச்சாளனுதியே அங்கம்.

தானம்:–குருவின் கிரகச் சேத்திராதி ரக்ஷணையே தானம்.

சத்பாவம்:–ஸ்ரீ குருவை சாக்ஷாத் பரமசிவ மென்னுமுள்ளன்பே சத்பாவம்.

## 12. ஜீவகாருண்யம்.

கொலை செய்யாமை; இம்சை செய்யாமை குருமொழி மறவாமை.

## 13. ஈஸ்வரபக்தி.

திரிகரண சுத்தியுடனே ஜெகதீசன் பேரில் மனம்பற்றுதல்.

## 14 பாச வைராக்கியம்.

பிரமலோக பரியந்தம் துரும்பா யெண்ணுதல் தியாகஞ் செய்யும் இச்சை அல்லது இச்சை யில்லாமை.

## 15. பிரமக்ஞானம்.

தனக்கன்னியமாக ஒன்றுமில்லை யென்றும்தானேயெங்கும் நிறைந்தவனென்றும் அறிதல். இன்னும் எது ஞானவடிவமாய் சகல கடாதிப் பிரபஞ்சங்களையு மறிகிறதோ எதை அன்னியமாகிய மன இந்திரியாதிக ளறியமாட்டாவோ அது ஆத்மசொரூபமே ஆனந்தமென்றறிவது. இன்னும் நான் சின்மாத்திரனென்பது.

## 16. சற்குண சம்பன்னர்.

ஞானம், வைராக்கியம், பலம், ஐஸ்வரியம், கீர்த்தி, ஸ்ரீ, இவ்வாறும் பொருந்தியவர்.

## 17. சற்குரு.

வேதாந்த சாஸ்திராப்பியாசஞ் செய்து அதன் பொருளை உள்ளவாறறிந்து ஜீவப்பிரம்ம ஐக்கிய நிஷ்டைத்தால் ஆத்ம (பிரம்ம) ஞானியா யிருப்பவரே.

பிரமச்சாரி:—காயத்ரீ - ப்ராஜாபத்ய - வைதிக-நைஷ்ட்டிக பிரமச்சாரி என நான்கு.

கிரகஸ்தன்:—வார்த்தாவிருத்தி - சாலீனவிருத்தி-யாயவரன்-கோரன்யர்சி ஆக நான்கு.

வானப்பிரஸ்தன்:—ஔதும்பரன் - கேநஸன்-சம்பிரக்ஷாலீ-பௌரணமன் ஆக நான்கு.

சந்நியாசி:—குடீசகன் - பகூதகன் - அம்சகன்-பரமஹம்சகன்-என நான்கு.

## விவர்த்தம் மூன்றுவகை

ஆரம்போபாதானம் பரிணமோபாதானம், விவர்த்தோ பாதானம் என மூன்று.

1. துணிக்குநூல் ஆரம்போ தானம்.
2. தயிருக்கு பால் பரிணமோப தானம்.
3. கயிற்றினிடத்தில் பாம்பென்கிற தோற்றமுண்டானது ஆனல் வாஸ்தவத்தில் கயிறு பாம்பாகவு மில்லை. கயிற்றில் பாம்புமில்லை. அப்படியுண்டான தோற்றம் தப்பாயிருந்தாலும் பிரமையிருக்கிறவரை வாஸ்தவ மாய் பாம்பென்றே நம்பப்படுகிறது. இப்படி யுண் டான பிரமைக்கு ஆதாரம் கயிறுதான். ஆகையால் கயிறு விவர்த்தோபாதானம்.

## ரிபுகீதையிலுள்ளஉபமானஉபமேயம்.

1. மலடிமகன் போல.
2. பரியின் கோடுபோல.
3. மனுடக் கொம்புபோல.
4. கானல் நீர்போல.
5. கந்தர்வ நகர்போல.
6. ககன நீலம்போல.
7. சுத்தியில் ரசிதம்போல.
8. ரச்சு சற்பம்.

9. ககன குசுமம்.
10. அக்கினிப் பிரகாசம் துன்றுவது.
11. இருளினால் சித்ரதீபம் குன்றுவது.
12. விருட்சம் வித்தில்லாமல் உண்டாவது.
13. அரம்பக் கட்டையினால் பாகசித்தி யுண்டாவது
14. அதிமூடனுக்கு குறைவில்லாசுகம் உண்டாவது
15. அறிவுடையோர் மனதை அஞ்ஞானி அறிவது.
16. இன்று பிறந்த குழந்தை பாகசித்தி செய்வது.
17. இன்றுபிறந்த குழந்தையின் சேர்க்கையால் போகசுகமுண்டாவது.
18. புழுதியால் சிங்குநீர் சுவருவது.
19. ஆதித்தன் சந்நதியில் அந்தகார மிருப்பது.
20. இரதத்தினால் இரும்பு சுவர்ணமாகாது போவது.
21. மறித்தோன் பிழைப்பது.
22. வனந்தரத்தில் போனகம் கிடைப்பது.
23. பசுவில்கரந்தபால்மறுபடியும்முலைக்கண்வழியேறுவது
24. சடைந்தமோர் பாலாவது:
25. மஹாமேருவை தாமரை நூலால் அசைப்பது.
26. வாரிதியை தரங்கத்தால் பிணிப்பது.
27. கூர்மரோமத்தால் மத்தமாவைப் பிணிப்பது.
28. உசுவாசத்தினால் ஒங்குஞ்சைலம் அசைவது.
29. மஹாமேரு பத்மவிதையி லொடுங்குவது.
30. வன்னியிடத்தில் பதுமமுண்டாகி வளர்வது.
31. சிறுமசகம் சிங்கத்தைச் சங்கரிப்பது.

32 வண்டு மேருவை கனியைப்போல் உண்டுமிழ்வது.

33. அணுவின் உதரத்தில் அனந்தகோடி பிரமாண்டங்களிருப்பது.

34. கனவில்கண்டபொருள் நனவில்இருப்பது.

35. விரைவான நதியின் வேகம் நலியாதிருப்பது.

36. பிறவிக் குருடனுக்கு மணியின்நேர்மை தெரிவது.

37. வருத்தவிதை விருக்ஷத்துக் கேதுவாவது

38 முயற்கொம்பினல் மதமாதங்கமுயிர் நீங்குவது.

39. தரித்திரன் செல்வவந்தனின் பதத்தை யடைவது.

40. அன்னத்தைப்போல் காகம் நடப்பது.

41. சிங்கத்தோடு வேசரி சண்டை செய்வது.

42. இந்துசம்பந்தமின்றி ராகு வெளியாவது.

43 மலடிக்கு கருவுண்டாகி அதற்கு நாமமுண்டாவது.

44. நபுஞ்சகனுக்குரிய மைந்தனுண்டாவது.

45 நபுஞ்சகருக்குரிய மாதருக்கு போக சுகமுண்டாவது.

46. சுனகத்தின் விந்துவினல் சிங்கமுண்டாவது.

47. சுனகத்தால் சாகரநீர் பருகப்பட்டு பெறுக்கறுவது.

48. தாருசிலை அன்னம் புசிப்பது.

49. ஆகாயம் ஜனங்களின்மேல் விழுவது.

50. பெரிதாகிய ஆகாசம் பூமியில்விழுவது.

51. விண்மலரைச் சூடிக்கொண்டு வேசியைச்சேர்வது.

52. ககனத்தைக் கயிற்றினல் சுருக்கிப் பிணிப்பது.

53. ககனத்தின் பதிபிம்பம் மெய்யாவது.

54. மேடத்தின்வயிற்றில் யானைபிறப்பது.
55. மஹாமேருற்ற புவியில் யாரும்நடப்பது.
56. முகூர்த்தத்தில் நிகழ்வுமிகும் பிரதிபிம்பம் நிலைபெற்றிருப்பது.
57. நிகழ்சனலில் பஞ்சு சாம்பலாகாதிருப்பது.
58. மூடருக்கு மேலான வஸ்துவின் நிலைதெரிவது.
59. அகண்டாகார விருத்தியின் பரப்பிரம்மம் திகழ்வது.
60. அகண்டபரஞானமின்றி மோக்ஷமுண்டாவது.
61. அத்துவிதசுருதியின்றிமற்றச்சுருதியால்பொருளாவது
62. வஸ்துஞானமின்றி மற்றஞானத்தால் பாவம்நீங்குவது
63. உத்தமயோகமின்றி உளம் ஆசையாதிருப்பது.
64. பரமசிவம் கருணையன்றி போகமோக்ஷம் கிடைப்பது.
இவைகள் உண்மையில்லாததுபோல சகத்துமித்தை.

## 18. பிரபஞ்ச வொடுக்கம்.

பிரபஞ்ச வுற்பத்திக்கிரமத்தில் கடைசியிலுற்பத்தியானவைகளாகிய பஞ்சீகிருத ஸ்தூலபூதங்களாகிய தேகேந்திரிய அந்தக் கரணாதிகளை அபஞ்சீகிருத காரண பூதங்களாகிய தன் மாத்திரைகளில் லகிக்கச் செய்து அந்தப் பஞ்ச பூதங்களில் பூமியை ஜலத்திலும், ஜலத்தை அக்கினியிலும், அக்கினியை வாயுவிலும், வாயுவை ஆகாசத்திலும், ஆகாசத்தை அகங்கார தத்துவத்திலும், அகங்கார தத்துவத்தை மகத்துவத்திலும், மகதத்துவத்தை மூலப்பிரகிருதியாகிய

அவ்வியக்தத்திலும், அவ்வியக்தத்தை புருஷனிலும் லயிக்கச் செய்கிறது. இது முத்திகோபநிஷத் 2-வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

சிவமயம்.

# நாஞஜீவவாதக் கட்டளையின் விசேடவுரை என்னும் இரகசியார்த்த தீபிகை.

## சொரூப வணக்கம்.

காப்பு-வெண்பா.

ஓதுநா ஞஜீவ வாதவுய் ரொண்ணுகலை
தோதுறுவி சேடவுரை சொல்லவே—யாதுமொளிர்
சத்தியமாய்ச் சித்தாய்ச் சதானந்த மாயிலகு
முத்தியாய் நிற்குமதே முன்.

## உபாசனுமூர்த்தி வணக்கம்.

கலி-விருத்தம்.

அண்ட வாணற் கசுரற் றடிந்தவன்
தொண்டர் வல்வினை தூரத் துறந்தவன்
புண்ட ரீக வரைப்பரி பூரணன்
தண்ட பாணிச ரோருகப் பாதமே.

## குருமரபின் வணக்கம்.

அறுசீர்விருத்தம்.

சதுரயுகந் தனில்முதலிற் றனிமுதலே
கபிலதபோ தனராய் வந்து
புதினவிரண் டாமுகந்தத் தாத்ராய
முனிவராய்ப் போந்த மூன்று
விதிசெயுகந் தனில்வேத வியாசரா
யத்துவிதம்விளங்க நாவி
லதிதசிவ சங்கரரா யவதரித்த
குருமரபிற் கன்பு செய்வாம்.

## குருவணக்கம் அவையடக்கம்.

கலிவிருத்தம்.

சுந்த ரகுரு தூய மலரடி
எந்த னுள்ளும் புறமு மிலகுக
விந்த நூலுக் கியானுரை யோதுவ
தந்தரத்தையுண்பே னெனுமாமைபோல்.

## நாஞ்ஜீவவாதக்கட்டளையின் நூல்வரலாறு.

இந்த நாஞ்ஜீவவாதக் கட்டளைக்குள்ள விசேடஅரு த்தமாவது; இருக்கு, யெஜுர், சாமம், அதர்வணம், என்னும் இந்நான்கு வேதத்தினுள் மூன்றும் வேதமாகிய சாம

வேதத்தின் முடிவான, சாந்தோக்கிய வுபநிடதத்தில் கூறப்பட்ட தத்துவமசி, என்னு மகாவாக்கியத்தின் அருத்தத்தைச் சொல்வது.

## நானுஜீவவாதக்கட்டளை யென்பதற்குப்பொருள்.

வாதம்பலவிதம், அதனுள் அசாதவாதம், அவச்சேதவாதம், ஆபாசவாதம், சிருஷ்டி திருஷ்டிவாதம், திருஷ்டி சிருஷ்டிவாதம், ஏகஜீவவாதம், பிம்பப் பிரதிபிம்பவாதம்; நானுஜீவவாதமென எட்டு வாதங்களை மாத்திரம் இந்நூலில் அங்கீகரிக்கப் பட்டது.

இவற்றுள் அசாதவாதமென்பது:—சொரூபமே எப்போதுமுள்ளதென்றும், ஜகத்து ஒருக்காலு முண்டாகவேயில்லையென்றும் கூறுவது. இது முடிந்தநிலை பரஞானிகளனுபவம்.

அவச்சேத வாதமென்பது:—அந்தக் கரண அவச்சின்ன (அந்தக் கரணத்தில் அளவிடக் கூடிய) சேதனமொன்றேயொழிய இரண்டில்லை யென்றும், அந்தக் கரணமசைந்தாலும் ஜீவன் அசையாவிடில் அஃதே சிவம் எனக் கூறுவது.

ஆபாசவாதமென்பது:—வியவகார திசையில் அந்தக் கரண பிரதிபிம்ப ஆபாசனை ஜீவசேதன மனந்தமுண்டு, அவனுக்கே சகலவியவகாரமே யல்லது சாக்ஷியாகிய தனக்கில்லை யெனக் கூறுவது.

சிருஷ்டி திருஷ்டிவாத மென்பது:—ஜகத்துப் பூர்வ மிருந்துதான் தோற்றப்படுகிறதெனக் கூறுவது.

திருஷ்டி சிருஷ்டிவாத மென்பது:—எப்போது திருஷ்டியுண்டாகிறதோ அப்போதுதான் ஜகத்துண்டாகிறது, பூர்வ மிருக்கவில்லை யெனக் கூறுவது.

ஏக ஜீவவாத மென்பது:—இந்தச் சேதனு சேதன பிரபஞ்ச முழுவதும் ஒரு ஜீவனுடைய கற்பனை எப்படி யெனில்; சொற்பனத்தில் காணப்பட்ட சேதனு சேதனப் பிரபஞ்ச முழுவதுஞ் சொற்பன புருடனை யன்றி மற்றொரு புருடனால் எப்படிக் கற்பிக்கப்பட வில்லையோ அதுபோல ஜாக்கிரத்திலுள்ள சேதனு சேதனப் பிரபஞ்சமுழுவதும் ஒருஜீவனுடைய கற்பனையெனக் கூறுவது.

பிம்பப் பிரதிபிம்ப வாத மென்பது:—பிம்பத்தைத் தவிர ஆரோபமே யில்லை யென்றும் கூறுவது.

நானாஜீவ வாதமென்பது:—மாயை, அதின் குணம், அதின் காரியமாகிய ஜீவேஸ்வர ஜகத்துக்க ளென்னும் நானாஜீவர்களை யேற்பி ஏகரூபமா யிருக்கின்ற வஸ்துவைத் தெரிவிக்கிறதற்கு சோபான (படி)க் கிரமமாயிருக்கின்றதால் நானாஜீவவாதம். இன்னும் நான் கர்த்தா, போக்தா, ஞாதா வென்கிற நானாவித ஜீவபேத வேறுபாடுகளை நான் அகர்த்தா, அபோக்தா, அசங்கன், சின்மாத்தி

திரன் என்கிற தத்துவ ஞானத்தால் வாதித்து ஏக சொரூபமா யிருக்கிற வஸ்துவைத் தெரிவிக்கிறதில் சோபானக் கிரமமா யிருத்தலின் நாஞஜீவவாதம்.

வாதம் முற்றுப்பெற்றது.

சுத்தமாவது:—தெய்வ மருந்துபோல கலப்பில்லாத பால்போல, மாயை அதின் குணம், அதின் காரியமாகிய ஜீவேஸ்வரஜகத்துக்களென்னும் முப்பத்தைந்து தத்துவங்களுக்குள்ள அசுத்த மில்லாதிருப்பதுவேயாம்.

அசுத்தம்:—35 தத்துவங்களுள் ஜீவனுக் கசுத்தம், ஜாதி, வருணம், ஆச்சிரமம் தன்மர்தன்மம்; அதன்பலனை சுவர்க்க நரகம், அதன்சேடமான அனந்தங்கோடி ஜனன மரணாதி சமுசாரமுதலானதில் தொடக்குற் றலைவதேயாம்.

ஜாதியாவது:—மஹாராஷ்டிரம், கன்னடம் ஆந்திரம், திராவிடம் எனநான்கு.

வர்ணமாவது:—பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென நான்கு. இந்நான்கு வருணமும் முன்சொன்ன ஒவ்வொரு ஜாதியிலுமுண்டு.

ஆச்சிரமம் 17:—பிரம்மசாரி, கிருகஸ்தன் வானப்பிரஸ்தன், சந்நியாசி எனநான்கு. இந்த ஆச்சிரமங்களொவ்வொன்றிலும் நான்குவிதமுண்டு.

ஈசுரனுக்கசுத்தம்:—கிருபை, அவதாரம் பஞ்சகிருத்தியம் முதலானவைகளும் இன்னும் சிவானந்த சுவாமிகள் வியாக்கியானத்தில், தான்தோன்றற்கு மாயையே காரணமாகவும் அதிஷ்டான ஆசிரய ஆபாச சங்காதமே சொரூபமாகவும் சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்களே காரியமாகவும் பிரஹ்மாத்ம ஐக்கியஞானத்தால் மாயைகெடும்போது பிரஹ்மத்திலயமாதலே யவதியாகவும் பிரஹ்மவிஷ்ணு ருத்திராதி மூர்த்தமாக, ஆவிர்ப்பவித்தலே பலமாகவு மிருத்தலாம்.

மாயைக்கசுத்தம்:—ஜகத்துக்குக் காரணமாய் சங்கோச விகாசங் (சுருங்குதல்விரிதல்) களாய்ச் சத்துவசமஸ்காரமாய்ப் பிரம்மத்தினிடத்தில் (யதார்த்தத்தில்) கற்பிதம் முதலானவைகளேயாம்.

அவித்தைக்கசுத்தம்:—அறியாமை, அசுத்தவாசனை, அதிஷ்டானத்தை மறைத்தல். தத்துவஞானத்தால் கெடுதல் முதலானவைகளேயாம்.

ஸ்தூலசரீரத்துக்கசுத்தம்:—வாதம் பித்தம் சிலேத்துமம்; நவத்துவாரம், ரோமத்துவாரங்களில் மலமொழுகுதல், பிறத்தல். வளர்தல், இருத்தல் பரிணமித்தல் (பருத்தல்) மெலிதல், காலாந்தரத்தல் பிணமாகுதல் முதலானவைகளேயாம்.

சூட்சுமசரீரத்துக் கசுத்தம்:— இராகத் துவேஷாதி பதின்மூன்று குணங்கள். துர்ப்பலம், ஊமை, செவிடு,

குருடு, மூடம், முதலானவைகளேயாம். அதாவது, குருடு, செவிடு, மூடம் இவைகளுக்கு அந்தமந்தப் படுத்துவமென்றும் பெயர்.

பதின்மூன்று குணங்களாவன:—இராகம், துவேஷம், காமம், குரோதம், உலோபம் மோகம், மதம், மாற்சரியம், ஈரிஷை, அசூயை, டம்பம், தர்ப்பம், அகங்காரம், எனப் பதின்மூன்றுமேயாம். இவற்றுள் இராகம்-பரதாரம்விரும்பல் (உ-ம்.) இராவணன் சீதையை யிச்சித்து இராகவனால் தன்குலமுழுமையும் நாசம.

துவேஷம்:—பதிலுபகாரம்செய்தல் (உ-ம்.) இரணிய கசிபன் தன் தமையனைக்கொன்ற துவேஷத்தால் நாராயணனை யெதிர்த்து நாசம்.

காமம்:—ஐஸ்வரியத்தை மென்மேலும் விரும்புதல. (உ-ம்.) நரகாசுரன் லக்ஷம் ஸ்திரீகளை விவாகம்செய்ய இச்சித்துப் பதினொராயிரத் தறுநூறு ராஜ ஸ்திரீகளைச் சிறைபிடித்துவர அவர்கள் வேண்டுகோளின்படி பகவானால நாசம்,

குரோதம்:—தான்சம்பாதித்த பொருளுக்கு விக்கினஞ்செய்தவர்பேரில் சீறுதல் (உ-ம்.) பகாசுரன் தனது புசிப்புக்கு விக்கினஞ்செய்த பீமராஜனைச்சீறி அவனால் நாசம்.

உலோபம்:—ஒருவருக்கும் ஈயாமை, (உ-ம்.) துர்யோதனன் பாண்டவர்களுக்கு வசித்திருக்கக்கூட ஓர் வீடும் கொடுக்கமாட்டேனென்றதால் அவன் நாசம்.

மோகம்:—பிரியம், மோதம், பிரமோதம், நினைத்தல் கிடைத்தல், அனுபவித்தல், தனதாரபுத்திர விருப்பம், (உ-ம்)தசரதன் இராகவன்பேரில்பெரும்பிரியத்தால்அவன் காட்டிற்செல்லத் தான் நாசம்.

மதம்:—கிருத்தியா, கிருத்தியம் தெரியாமை (உ-ம்.) கார்த்த விரியார்ச்சுனன் நாரதபகவானை யுபசரியாததால் பரசுராமனால் நாசம்.

மாற்சரியம்:—தன்செல்வத்தினும் மற்றவன் அதிகம் பெற்றால் பொறாமை (உ-ம்)சிசுபாலன் தருமராஜன்செய்த ராஜசூய யாகத்தில் பகவானுனுக்குச் செய்த பூஜையைச் சகியாமல் பொறாமையால் நாசம்.

ஈரிசை:—பிறர் துன்பமடையவும் தான் அத்துன்பமடைய லாகாதெனவும் விரும்பல் (உ-ம்.) அருணகுஷதன் தனக்குவந்த துன்பம் தன்னிஷ்டனை வரணசுரக்கு வரட்டுமென்று நினைத்ததால் தான் நாசம்.

ஆசூயை:—தனக்கு வந்த சுகம்போல் பிறர்க்கு வரலாகாதென்பது, (உ-ம்.) பௌண்டரீகவாசுதேவன் என்ற பெயரிருப்பதுபற்றி அவரோடு (பகவானோடு) எதிர்த்து யுத்தஞ்செய்து நாசம்.

டம்பம்:—தான் செய்கின்ற தருமத்தைப் பார்த்து யாவரு மெச்சவேண்டுமெனல் (உ-ம்.) நபூர்வமஹாராஜன் தான்செய்த யாகத்தைப்புகழ்ந்து கொண்டது பற்றித் துர்வாசமுனிவரால் ஏவப்பட்ட பூதத்தால் நாசம்.

தீர்ப்பம்:—நானே செல்வத்தில் பெரியவன் எனக்குச் சரியொருவருமில்லை யென்பது (உ-ம்) ஐஸ்வரியத்தால் செர்வித்துச் சதகண்ட ராவணன் தேவர்களை உபத்திரவம் செய்ய அதைநாரதமுனியால் இராகவனுக்கறிவிக்கச் சீதையால் நாசம்.

அகங்காரம்:—பிடிவாதம். (உ-ம்) மது-கைடவர்என்ற இராக்ஷதர்கள் மகாவிஷ்ணுவோடு பதினைபிர வருஷம் யுத்தம்செய்து தோல்வியடைந்த விஷ்ணுவானவர் அவர்களைப் பார்த்து நீங்கள் மகாபராக்கிரமசாலிகள் என்றும் வேண்டும்வரம் தருகிறோமென்றும் சொல்ல அதற்கு அவர்கள் நகைத்து தோல்வியடைந்த நீயாயெங்களுக்கு வரங்கொடுக்கிறது நாங்களுனக்கு வேண்டும் வரந் தருகிறோ மென்று சொல்ல அவர்களுடைய உறுதிமொழியை அறிந்து கொண்டு உங்களிருவர் உயிரையும் கொடுங்களென்று கேட்க அதனாலவர்கள் நாசம்.

ஆனதால் இப்பதின்மூன்றும் சூட்சுமசரீரத்தின் தொழிலானதால் அசுத்தம். இவைதவிர, இச்சை, பக்தி, சிரத்தை, இம்மூன்று குணங்களும் சூட்சுமசரீரத்தின் அசுத்தமென்றே சொல்லப்படும்.

அஃதெப்படியெனில்-இச்சையென்பது சிரவணமுதலியவைகளில் விருப்பம்.

பக்தியென்பது-சிரவணப் பொருளில் மனம்பற்றுதல்.

சிரத்தையென்பது - ஈஸ்வரன் குருநூல் இவைகளில் அன்பு (விசுவாசம்) இம்மூன்றும் மோட்சசாதனமாயிருப்பினும் முடிவில் இல்லாமையால் அசுத்தம்.

பஞ்சபூதங்களுக்கு அசுத்தம்:—பிருதிவிக்கு; மலம், மூத்திரம், குப்பை, சேரி, மசானம், உவர், கடினம், ஐந்திணை (மருதமுதலிய நிலங்கள்) ஐந்திணைக் கருப்பொருள், அப்புவில் கரைந்தொடுங்குதல் முதலானவைகளேயாம்.

அப்புவுக்கு; அலை, திவலை, குமிழி, நுரை, பிண்டீகரணம் செய்தல் (இழுத்தல்) சேறு, கலங்குதல், பாசிபடலம், அக்கினியிற்சுவறி யொடுங்குதல் முதலானவைகளேயாம்.

தேயுவுக்கு, புகை, பொரி, மூடல், பாகஞ் செய்தல் சுடர் விடுதல், வாயுவிலணைந் தொடுங்குதல் முதலானவைகளேயாம்.

வாயுவுக்கு, நற்கந்தம், துர்கந்தம், மிசிரகந்தம் புழுதிபடலம், சலிதல், ஆகாயத்திலோய்ந் தொடுங்குதல் முதலானவைகளேயாம்.

ஆகாயத்துக்கு, அவகாசம் (இடங்கொடுத்தல்) திக்கு இடி, மின்னல், குமுறல், மேகபடலம், குவிதல், விக்ஷேபசத்தியிலொடுங்கல, முதலானவைகளேயாம்.

இப்படி அசுத்தமாயுள்ள 35-தத்துவங்களுக்கு விலக்ஷணமாயும் சாக்ஷியாயுமுள்ள பிரஹ்மமானது இவைகளோடு கூடியிருந்தும் இவைகளின் அசுத்தங்கள் பற்றுததிலுைம் இவைகள்விவர்த்தம் (ரஜ்ஜுவிற் சர்ப்பம்போல) ஆனபடியினுலும் 36-ஆம் தத்துவமாகியபிரஹ்மமேசுத்தம்.

∴ பிரஹ்மமாவது:—பெரிதுக்கெல்லாம் பெரிதாயும், நித்த, சுத்த, புத்த, முத்த, சத்திய, பரமானந்த, அத்வைத, இலக்ஷணங்களையு முடையதுவே. இதில் பெரிதாவது, அண்ட, புவன அகிலாண்ட, பிரமாணடாதிகளைப் பார்க்கப்பெரிதாயிருப்பதால் பெரியோர்களால் பிரஹ்மமென்றும், மங்களமாயிருப்பதால் 23 நாமங்களால் சிவமென்றும், அதாவது 1 சிவன் 2 மஹாதேவன் 3 ஈசுரன் 4 சங்கரன் 5 நீலகண்டன் 6 திரிநேத்திரன் 7 சந்திரசூடன் 8 கங்காதரன் 9 கபர்த்தி 10 பகவன் 11 திரியம்பகன் 12 திரிபுராரி 13 காலாரி 14 கிரீசன் 15 மிருகதரன 16 பசுபதி 17 சாம்பன் 18 கிரிசன் 19 நடேசன் 20 கௌரீசன் 21 காலபைரவன் 22 உன்மத்தசேகரன் 23 சரபன் இந்த இருபத்துமூன்றும் சிவமென்றும் தானும்மங்கள கரமாயிருந்து கொண்டு தன்னை யடைந்த அடியார்களையும் மங்களமாக்குபவன் சிவன்.

மங்களம் (சச்சிதானந்தம்) சுகம், வியாபகமா யிருப்பதால் வைணவர்களில் 21 நாமங்களால் விஷ்ணு வென்றும் அதாவது 1 நாராயணன் 2 அச்சுதன் 3 கோவிந்தன் 4 பத்

மநாபன் 5 மாதவன் 6 மதுசூதனன் 7 கேசவன் 8 அனந் தன் 9 வாமனன் 10 இருஷிகேசன் 11 இராமன் 12 திரி விக்கிரமன் 13 கிருஷ்ணன் 14 ஜனர்த்தனன் 15 தாமோ தரன் 16 பங்கசாக்ஷன் 17 நரசிம்மன் 19 வராகன் 19 மச் சயன் 20 கூர்மன் 21 கற்கி இவ்விருபத்தொன்றும் விஷ்ணு வென்றும், பிரமவாதிகளால் பிரமனென்றும், கர்மவாதிக ளால் இந்திரனென்றும், தத்துவவாதிகளால் அச்சரனென் றும், பிரகிருதி புருஷவாதிகளால் பரமனென்றும், பக்தி வாதிகளால் பகவான் சுராட்டு (நன்ருக வழங்குகிறவன்) என்றும் பின்னும் பலபல மதங்களாலும் அதததற்குரிய பற்பல நாமங்களாகவுங் கூறப்பெற்றது.

இன்னும் ஓர் கிரகத்தைப் பார்க்க ஊர்பெரிது அதனி னும் தேசம் பெரிது அதனினும் கண்டம் பெரிது அதனி னும் தீவு பெரிது அதனினும் சப்த சமுத்திரமும், சப்த தீவும், சப்தகுல பர்வதமும், ஈரேழுலகமும், மகாமேரு வும், சக்கரவாளகிரியும், சந்திர சூரியாள் உதித்தொடுங்கு கின்ற முதலியதோர் அண்டம் பெரிது அதனினும் இப்படி 1008 அண்டங்க ளடங்கிய வொரு புவனம் பெரிது. அத னினும் இப்படி 224 புவனங்க ளடங்கிய வொரு அகிலா ண்டம் பெரிது, அதனினும் அகிலாண்டம் கோடிகொண்ட ஒரு பிரமாண்டம் பெரிது, அதனினும் அநந்தங்கோடி பிர மாண்டங் கொண்ட நவகோடி பிரமாண்டம் பெரிது. அத னினும் விட்சேப சக்திபெரிது, அதனினும் மாயைபெரிது.

அதனினும் மூலப்பிரகிருதி பெரிது, இந்தப் பிரகிருதியும் பூதாகாசத்தி லேகதேசத்திற் சலிக்கின்ற வாயுவைப்போலும் சமுத்திரத்தி லேகதேசத்திற் றோன்றுகின்ற அலையைப்போலவும் ஒரு சரீரத்திலேக தேசத்திற் றோன்றுகின்ற மருவைப்போலவும் மச்சரேகையைப் போலவும் சிதாகாசமான பிரஹ்மத்திலேகதேசத்தில் தோன்றுகின்றபடியால் பிரஹமமே பெரிதிற் கெல்லாம் பெரிதாம்.

நித்தமென்பது:—பிராகபாவம், பிரத்தொம்சா பாவம், அன்னியோன்யாபாவம், அத்தியந்தாபாவம், இந் நான்கு பாவமுமின்றிச் சதோதயமா யிருப்பதுவேயாம். இவற்றுள்; பிராகபாவமாவது சிருஷ்டிக்குமுன் ஜகத்தில்லையென்பது. அதாவது மண்ணுக்குமுன் கடமில்லையென்பது போல.

பிரத்தொம்சா பாவமாவது:— உண்டாகிய ஜகத்து அழிந்தபின்பு யில்லையென்பது-அதாவது உண்டானகடம் உடைந்தபின்பு இல்லையென்பதுபோல.

அன்னியோன்னியா பாவமாவது:— எப்படி கடத்தில்படமும் படத்தில் கடமும் அன்னியோன்ய மாகவிருந்தும் பிரிகிறகாலத்தில் கடம்வேறு படம்வேறு ஆகிறதோ அதுபோல பிரமத்தில் பிரபஞ்சமும், பிரபஞ்சத்தில் பிரமமும் அன்னியோன்யமாயிருந்தாலும் பிரமத்திற்குரியசச்சிதானந்த லக்ஷணத்தையும் பிரபஞ்சத்திற்குரிய அனிர்த ஜட துக்க லக்ஷணத்தையும் விசாரிக்கிறகாலத்தில் பிரமம்

வேறு பிரபஞ்சம் வேறு ஆகிறபடியா லன்னியோன்யாபா வமாம்.

அத்யந்தா பாவமாவது:—இப்படி திரிகாலத்திலும் ஜகத்து வாதிக்கப்பட்டு அசத்தாகிறபடியினால் அத்யந்தா பாவமாம்.

இந்நான்கு சுபாவமுமின்றி என்றும்சத்தாமாத்திரமா யிருப்பதால் நித்தமாம்.

சுத்தமென்பது:—பிரகிருதி முதலான மலமில்லாதி ருப்பதுவே.

புத்தமென்பது:—அந்தக்கரண வறிவைப் போலத் தோன்றித்தோன்றி மறையாமல் என்றும் ஒரேபடித்தா யிருப்பதுவேயாம்.

முத்தமென்பது:—அஞ்ஞானம் அதன் காரியமான சகல பாசபந்தங்களும் விடுபட்டிருப்பதுவேயாம்.

சத்தியமென்பது;—கலை, காஷ்டை, வினுடி, நாழிகை, முகூர்த்தம் நாள், வாரம், பக்ஷம், மாதம், அயனம், வருஷம், யுகம், முதலிய கர்ப்பாதி காலங்களுக்கும், அக்காலங் களிலுள்ளஜனனங்கடோறும் வாராநின்ற அவஸ்தாத்திரய பிரபஞ்சங்களிற் றோன்றப்பட்ட பஞ்சபூத பௌதிகங்க ளுக்கு வேருகியும் அவைகளுண்டாகிறதற்கு முன்னும் உண்டாகி யழிந்தபின்னும் கொடாமல் ஒரேபிரகாரமாயி ருப்பதுவேயாம்,

பரமானந்த மென்பது:— எதைக் கைவிட்டாலும் தன்னை (ஆத்மாவை) கைவிடாமல் அதிபிரியமாயிருப்பது வேயாம்.

அத்வைதமென்பது:—ஏகமே வாத்துவிதம் பிரமமென்னும் வாக்கியப்படி சுஜாதிக, விஜாதிக, சுவகத, பேத ரகிதமாயிருப்பதுவேயாம்.

இவற்றுள் சுஜாதிகமென்பது; மரத்துக்கு மறுமரம் சுயஜாதியில்பேதம். அதாவது ஆலமரம், கல்லாலமரமென்பதுபோல. விஜாதிகமென்பது; பாஷாணம் (கல்) விஜாதிகம்(வேறுபேதம்) சுவகதபேதமென்பது; மரத்துக்குப் பத்திரபுஷ்பமுதலியன (ஒன்றில்லாமல் பலபேதமாம்) இது போல சத்துக்கு வேறு சத்தில்லாமையினுல் சுஜாதிகபேதமும் சித்திரக்காரனுடைய சித்திரசக்தி எப்படிச் சித்திரக்காரனுக்கு வேருகத் தோற்றப்படவில்லையோ அதுபோல மாயையும் பிரமத்தில் வேருகஇல்லாமையால் விஜாதிகபேதமும், நிரவயமாயிருப்பதால் சுவகதபேதமுமின்றி ஏகமாயிருப்பதால் அத்வைதமாம்.

மேலேகூறிய நித்தமுதலிய, இத்தியாதி லக்ஷணங்களையுடையதுவே பிரஹ்மம்.

ஏகமே வாத்துவிதமென்பது:—ஏகம்-ஒன்று-ஏவம்-தேற்றம், தெளிவு, அத்துவிதம்-துவிதவிலக்கு.

சர்வசாக்ஷியென்பது:—சாமவேதத்தின் சாந்தோக்கியவுபநிடதத்தில் கூறப்பட்ட "தத்துவமசி" மஹாவாக்கி

யத்திலுள்ள தற்பதம் துவம்பதம், அசிபதம், ஆகிய இம் மூன்று பதத்திற்கும் சாக்ஷியாயிருப்பதால் சர்வசாக்ஷி. இவற்றுள் துவம்பதத்துள் வாச்சியார்த்தமாயுள்ள ஸ்தூல சூக்கும காரணமாகிய சீரத்திரயமும், விசுவ தைஜச பிருக்ஞனென்னும் அபிமானத்திரயமும், சாக்கிரம் சொற்பனம் சுழுத்தியென்னும் அவஸ்தாத்திரயமுமாகிய இவ்வொன்பதுக்கும் விலக்ஷணமாகியும், சாக்ஷியாகியுமுள்ளலக்ஷியார்த்த கூடஸ்தபிரஹ்மமும் தற்பதத்தில் வாச்சியார்த்தமாயுள்ள விராட்டு இரணியகர்ப்பம், அவ்வியாகிருதம் (மாயை) ஆகிய சீரத்திரயமும், வைசுவானரன், சூத்திராத்மா அந்தரியாமி என்னும் அபிமானத்திரயமும், சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரமென்னும் அவஸ்தாத்திரயமுமாகிய இவையொன்பதுக்கும் விலக்ஷணமாயுள்ள லக்ஷியார்த்தப் பிரமமும், அசிபதத்தில் வாச்சியார்த்தமாயுள்ள சத்துரூபசத்தி, சித்துரூபசத்தி, ஆனந்த ரூபசத்தி யென்னும் சீரத்திரயமும், பரன் பரிபூரணன், பரமானந்தன் என்னும் அபிமானத்திரயமும், சர்வவியாபகம் சர்வப்பிரகாசம் சர்வானந்தமென்னும் அவஸ்தாத்திரயமும் ஆகிய இவ்வொன்பதுக்கும் வேறாகியும்சாக்ஷியுமாகிய லக்ஷியார்த்தப் பரப்பிரஹ்மமும் ஆகிய இம்மூன்றுக்கும் சாக்ஷியாயிருக்கிறபடியால் சர்வசாக்ஷி.

இன்னும் பிரம்மாமுதல் பிபீலிகா (எறும்பு) பரியந்தமுள்ள சீவசிதாபாசர்கள் சீரங்களிலுள்ள அந்தக்கரணங்களேதோறும் ஆங்காங்கு சாக்ஷியாயுமிருப்பதால் சர்வசாக்ஷி

## அக்கினியிற் சூடுபோல என்பதற்குப்பொருள்.

அக்கினிக்கு உஷ்ணம் இயற்கையாகவிருக்க மாந்த்ரீக வலிமையால் அந்தச்சூடானது எப்படித் தகிக்காமலிருக்கிறதோ வதுபோல பிரஹ்மத்தில் தனக்கு வேருகாமல் இயற்கையாகவே வல்லபம்உண்டு. அஃதே அபின்ன (அருள்) சத்தியாம். அதுபிரதானம், பிரகிருதி, மாயை, அவித்தை, தபசு முதலிய பற்பல விகாரங்கள் அடையாமலடைந்து அவ்வதீதப் பிரஹ்மத்தில் அடங்கி யிருக்கும்போது அதற்கு சுத்தப்பிரஹ்மமென்று பெயர்.

## அதீதமென்பதற்குப்பொருள்.

வாக்கினுல் வசனிக்கப்படாமலும், மனத்தினுல் சிந்திக்கப்படாமலும், இருப்பதுவேயாம். அதாவது ஜாதி, நாமம், ரூபம், குணம், கிரியையின்றி நிர்ஜாதி, நிர்நாமம், நிர்ரூபம் நிர்க்குணம்நிஷ்கிரியையாயிருப்பதால் வாக்குக்கு விஷயமாகாமையும் (எட்டாமையும்) ஜடமின்றி நிர்விஷயமாயும் சுயம் சித்தாயும், மனதிற்கு அகோசரமானதால் அதீதமாம்.

## விசிரிம்பித்து வியாபித்தல் என்பதின் பொருள்.

சுவாசிரய சுவவிஷயத்தால் பிரமமாகிய தன்னை யிடங்கொண்டு தன்னை மறைத்தலால் கூறப்படும். அதாவது நெருப்பினிடத்தில் தூமமு (புகையு) ண்டாகி அந்த நெருப்பை மறைப்பதுபோலும், ஆகாயத்தை யாசிரயித்துக் கட

மடாதிகள் தோன்றி யவ்வாகாயத்தையே மறைத்துக்கொண்டது போலும், ஒருவித்தில் விருக்ஷமுண்டாகி அவ்வித்தையே மறைத்தது போலும், சொரூபத்தை யாசிரயித்து (இடங்கொண்டு) அதிலிருந்து விசிரிம்பித்து (விகாரமாகி) அச்சொரூபத்தையே வியாபித்தல் (மறைத்தல்) விசிரிம்பித்து என்பதற்கு அதிக்கிரமித்து என்றும் வெளிப்பட்டு என்றும் பொருள்படும்.

## உதாரணச் செய்யுள்.

செய்யபெய ருருவமிலா திரண்டற் றொன்றாய்ச்
சிறந்தசுத்தப் பிரமசர்வ சாட்சி தன்னில்
வெய்யநெருப் பினிற்சூடொத் தபின்ன மாயோர்
விளங்குசத்தி யுளததுதான் சுழுத்தி தன்னில்
நொய்யகுணத் திரயங்க ளடங்கு மாபோல்
நுவலதீ தத்துறைய வந்த வேலை
செய்யலற நிற்கையிலச் சொருப நாமந்
திகழ்சுத்தப் பிரமமெனத் தெரிப்பர் மேலோர்.

பரப்பிரமம் என்பதன் பொருள்:—நாம் நித்திரை தெளிந்து சாக்கிரத்தில் ஒருகுணம் வெளிப்பட அதன் வடப்பட்டு நமது சுயரூபமாகிய நிர்க்குணத்தை மறந்து விகாரமானதுபோல அவ்வபின்ன சக்தி வெளிப்பட்டு அந்தப் பிரஹ்மத்தை வியாபிக்கும் காலத்து அப்பிரமம் அப்பரை வியாபகத்துள் ளடங்கினபடியால் அதற்கு சுத்தப்பிரஹ்மமென்கிற பெயர்நீங்கி பரப்பிரமமென்கிற பெயர் வந்தது.

### உதாரணச் செய்யுள்.

உறைசுழுத்தி போய்த்தொளிரு நனவு தன்னி
லோர்குணந்தா னேங்கிடநம் முருவம் வேறுய்க்
குறையடைதல் போலபின்னு சத்தி தோன்றிக்
குறித்தபிர மத்தைவியா பிக்கும் போது
நிறைவுறுமச் சொரூபமது பரையிற் குள்ளே
நிற்கையிற்சுத் தப்பிரம மெனும்பேர் நீங்கி
அறைகின்ற பரப்பிரம மாகு மென்றே
யாகிமறை நூலறிந்தோ ரறைவர் மாதோ.

### இலக்ஷண சூன்யமென்பதின் பொருள்.

அனுதி அதாவது காரணமில்லாது காரியப்பட்டு சொரூபத்திற்குரிய சச்சிதானந்த லக்ஷணமில்லாமல் ஜட மாயிருப்பதுவே லக்ஷண சூன்யம்.

புருஷ சமுகத்தில் ஸ்திரீக்கு இன்பம் ஜனித்தாற் போல பிரமசந்நிதானத்தில்:—என்பதின் பொருள். ஸ்திரீ புருஷர்களிருவரும் கலவியிற்சேர்ந்து அகமுகமா யநுப வித்த சுகத்தில் அவ்விருவ ரெண்ணத்திலு மில்லாத சிசு எப்படி ஜனித்ததோ வதுபோல பரப்பிரம சந்நிதானத் தில் லக்ஷணசூனியமாயிருக்கின்ற வப்பரையின் வியாபகத் துள் பரப்பிரஹ்மம் சேருங் காலத்தில் பரிசுத்தமான அவி கிருத (சுத்த) சாத்மீகம் சுத்தராஜதம், சுத்ததாமதம், என்னு முக்குணங்களுண்டாயின. இம்முக்குணங்களுக்கு

முறையே ஆனந்தரூபசத்தி, சித்ரூப சத்தி, சத்ரூப சத்தி என்றுபெயராம்.

## உதாரணச் செய்யுள்.

மாதருஞ்சே ராடவருங் கூடுங் கால
  மகிழ்வரென் ணுதகருத் தரிக்கு மாபோல்
ஓதருமச் சத்திவியா பகத்திற் பிரம
  மொளிர்போதிற் சாந்த்ரசோ தமங்க ளென்னும்
நீதமுறு தூயகுண மூன்று சேர்ந்து
  நிசழ்கின்ற வானந்த ரூப சத்தி
சாதமுறு சித்ருவ சத்தி யோடு
  சத்ருவ சத்தியெனத் தயங்கு மாதோ.

## சுத்தசாத்மீகமென்னும் ஆநந்தரூப சத்திக்குப் பொருள்.

சுத்த சாத்மீக மென்பதும் ஆனந்த ரூபசத்தி யென்பதும் ஒருபொருட் சொற்கள். ஆனந்தரூப சத்தியுடனே பரப்பிரமம்கூடி காரண சரீரமாகிய சர்வாநந்த சுழுத்திய வஸ்தை (காலத்தை) யடையும்போது பரப்பிரஹ்மமென் கின்றபெயர்போய் பரமானந்த ரென்கின்ற பெயர்வந்தது.

கவி.

சொல்லுமா னந்தரூப சுத்தமாஞ் சத்தியென்னும்
நல்லசாத் வீகமோடு நவில்பரப் பிரமஞ் சேர்கால்

தொல்லையிற் சருவானந்த சுழுத்தியை யடையுமப்போ
தெல்லையிற் பரமானந்தப் பெயரென வியம்புவாரே.

சுத்தராஜத மென்பதும் சித்துரூப சத்தியென்பதும் ஒருபொருட் சொற்கள். அந்தச் சத்தியுடனே சேர்ந்து சூட்சும சரீரமாகிய சர்வப் பிரகாசமென்னும் சொற்பனுவஸ்தையைச் சேரும்போது பரமானந்த ரென்கின்ற பெயர்போய் பரிபூரணரென்ற பெயர்வந்தது.

கவி

நவிலுறு பரமா னந்த னிராசத குணம தான
துவறறு சித்து ரூப சத்தியைத் தொடர்ந்து நீங்கா
தவிர்செயுங் கனவ தான வவத்தையை யடையுங் காலம்
நுவல்பரி பூரணன்று னென்ன நூ லுரைக்கு மன்றே.

சுத்ததாமத மென்பதும் சத்ரூப சத்தி யென்பதும் ஒருபொருட் சொற்கள்:—அச்சத்தியுடனே கலந்து தூல சரீரமாகிய சர்வ வியாபகமென்னும் ஜாக்கிரா வஸ்தையை நேருங்காலம் பரிபூரணரென்கின்ற பெயர்போய் பரனென்கின்ற பெயர் வந்தது.

கவி.

தகமைசேர் சத்துரூப சத்தியாந் தாம தத்தை
மிகபரி பூர ணன்றுன் மேவிய வேலை தன்னில்
விக்சித மான சர்வ வியாபகச் சாக்கி ரத்தில்
திகழ்தரு போதி தன்பேர் செப்புவர் பரனென்றே.

சர்வானந்த சுழுத்தியென்பது, சந்திரனிடத்தில் அநு திகளங்கமானது அச்சந்திரனை யாசிரயித்து அதனை மறை யாமல், அச்சந்திரனல் எப்படி விளங்குகின்றதோ அது போலும் நான்என்னை யறியேனென்று மூலகப்பிரசித்த வியவகாரத்தில் ஆத்மனையடுத்து அவனைமறையாமல் அவ் வாத்மனல் அறிவித்துக் கொள்வது போலும் ஒரு ஜீவ னுடைய சுழுத்தி யவஸ்தையில் அன்னமயனும் பிராண மயனும் மனோமயனும் விஞ்ஞான மயனும் லீனமாய் ஆன ந்தமயனு யவ்வஞ்ஞானத்தையும் விளக்கி தானும் சுகசொ ரூபமாய் விளங்குவதே ஒரு சுழுத்தி, அதை யனுபவிப்ப வனே பிராக்ஞன், அவ்வனுபவமே ஆனந்தம். ஆனதால் ஈக்ஷணமுதல் அநுப்பிரவேச பரியந்தமுள்ள சர்வான்மாக் களும் தனித்தனியே யடைகின்ற சுழுத்தியின் சமட்டியே சர்வானந்த சுழுத்தியாம். சர்வானந்தமாவது, மேற்சொல் லிய சுழுத்தி யவஸ்தைகடோறும் ஜீவர்கள் தனித்தனி யே யனுபவியாநின்ற வானந்த சமட்டியே சர்வானந்தம்.

சர்வப் பிரகாசமென்னும் சொர்ப்பனமானது:—ஒரு ஜீவனுடைய சொர்ப்பனவஸ்தையில் அன்னமயன் லீன மாய்ப் பிராணமயன் மனோவிஞ்ஞானமயனும் ஜாக்கிரத் தைப்போலச் சூரியாதிப்பிரகாச சாதனந்திரங்களில்லா மல் தன்னுடைய தேஜஸினலே சொற்பனப் பிரபஞ்சத் தையும் விளக்கித்தானும் பிரகாசித்துக்கொண்டிருப்பதே வொரு சொர்ப்பனம். இதனபிமானியே தைசதன், சர்வ

ஜீவர்களும் தனித்தனியே அடையாநின்ற சொர்ப்பனவஸ்தையைச் சமட்டியாய்த் தன்னுடைய பிரகாசத்தினல்விளங்குவதே சர்வப்பிரகாசமென்னும் சொர்ப்பனவஸ்தை.

சர்வ வியாபகமென்னும் ஜாக்கிரமாவது:—ஒருஜீவனுடைய ஜாக்கிராவஸ்தையில் சர்வ விந்திரிய வியவகாரங்களையும் சம்பூரணமாய் விளக்கித் தானும் பிரகாசித்துக் கொண்டிருப்பதே வொரு ஜாக்கிரம். இந்த ஜாக்கிரவபிமானியே விசுவன். இப்படிச்சர்வஜீவர்களும் தனித்தனியே அடையாநின்ற ஜாக்கிராவஸ்தையைச் சமட்டியாகத்தன்னுடைய பிரகாசத்தினல் விளக்குவதே சர்வவியாபகமென்னும் ஜாக்கிராவஸ்தை.

துவம்பத சிருஷ்டியாவது, கூடஸ்தனுமனதி (நித்தியன்) பதி, பசு, பாசமும் அனதி யென்று கூறும்.

தற்பதசிருஷ்டியாவது:—பிரமமே உள்ளதென்றும் பதி, பசு, பாசம், மூன்று மித்தை (பொய்) யென்றும் சொல்லும்.

அசிபத சிருஷ்டியாவது:—சிவசத்தியின் லீலையாய் விளங்கும் இம்மூன்று பதங்களும் பின்னசத்தியின் ருெழில்களாம்.

க வி.

## சுத்தசாதகம்.

முன்பதசிருட்டி பசுபாசமூன்றையு மறுதியாய் நீறுவும், பின்பத சிருட்டி சகமித்தையந்தப் பிரமமே யுளதெனநிறுவும், சின்பத மான வசிபத சிருட்டி சிவசத்திலீலையா நிற்வும், மன்பதமூன்றும் பின்னையபின்னையுமாசறு சிவமும்மென்றுணர்வாம்.

ஜீவன் வாச்சியார்த்தம் நீங்கினவுடனே கூடஸ்தனாகிறான், அக்கூடஸ்தனே தற்பதத்தில்பிரமத்துடன்றாதாமியமடைந்து, அதாவது பிரமமே கூடஸ்தனைக் கூடஸ்தனே பிரமமாய்ஆகிறான். அக்கூடஸ்தபிரமம் அசிபதசிவத்துக்கு அங்கமாகின்றது. இம்மூன்றுபதங்களையும் அடைந்தால் பரமுத்திபடைந்ததுவாகும், இவற்றில் ஏதாவது பாக்கியிருந்தால் முத்தியல்ல.

க வி.

## சுத்தசாதகம்.

முன்பதமான தொம்பதப் பசுவை மூடிருணீங்கிச் சுத்தமதாய்ப், பின்பதமான தற்பதவருளில் பிறங்குதா தான்மிய மடைந்தே, சின்பத மான வசிபதசிவத்தைச் சேர்ந்ததற் கங்கமாய்நின்றால், மன்பரமுத்தி முடிந்ததுவாகு மற்றவை தனில்நிற்கில் குறையே.

நரன் துவம்பத லக்ஷியார்த்த கூடஸ்தனென்றிருந்தால் இச்சை யொடுங்கும். தற்பத லக்ஷியார்த்தப் பிரம

மென்றிருந்தால் ஞானம் ஒடுங்கும். அசிபத லக்ஷியார்த்த பிரமமென்றிருந்தால் கிரியை யொடுங்கும். இச்சை யென்பது பிரகிருதியின் ரஜோகுணமாகிய அவித்தை. ஞானமென்பது பிரகிருதியின் சத்துவகுணமாகிய மாயை. கிரியையென்பது பிரகிருதியின் தமோகுணமாகிய விக்ஷேப சக்தி. இப்படி வரிசைக்கிரமமாய் அடையாத பட்சத்தில் மறுபடியும் ஜன்மமெடுத்துத் தீரும்.

க வி.

சுத்தசாதகம்.

சுத்தமாய் நின்று லிச்சைசித் தியதாந் தொல்லிஷ்டானமாய் நின்றால், சித்தமாய்ஞானஞ் சித்தியதாகும் சிவத்தினுக் கங்கமாய் நின்றால், மத்தமாங் கிரிகை சித்திய தாகும் வகுத்தவிம்மூன்று மவ்வொழுங்கே, சித்தமாய்ச் சித்தியி லாவிடில் மீட்டுந் தேகமொன் றெடுக்குமென் றுணர்வாய்.

அபின்னசத்தியே யாதொரு தொழிலுமின்றிய சர்வ சாக்ஷியாகிய சுத்தப் பிரமம்.

இன்னும் ஒருவிதம்:—யாதொன்றிலும் சம்பந்தப்படாத சுத்தப் பிரமத்திற்குத்தான், செயலொன்று மில்லையென்று செவ்வென வெளிப்படுகிறதே அந்தப் பிரமம் இப்படி அகண்டா கண்டமா யிருக்கிற உலகங்களை எப்படி சிருஷ்டிக்கத் தொடங்கிற்று என்று வினவில், இந்நூலின்

தலைப்பில் வரைந்துள்ள பிரம நியமப்படத்தைப் பார்த்தால் இவ்வுலக தோற்றமாகிய ஜட ஜீவேஸ்வர ருற்பத்தி, பட்டபகற்போல் தெளிவதாகும். அதாவது யாதொரு களங்க ரகிதமான சிவசைதன்னியமாகிய சுத்தப்பிரம்மென்னும் சர்வசாக்ஷியினிடத்தில் அக்கினியிற் சூடுபோலவும் சலத்தில் சீதளம் போலவும் புஷ்பத்தில் வாசனைபோலவும் மனதினினைப்புப்போலவும் கண்ணுடியிற் பிம்பம் போலவும் வித்தினுள் முளையைப்போலவும் முளையினுள் பயிரைப்போலவும் அபின்னமாக ஒருசத்தியுண்டு. அந்தச் சத்திக்கு யாதொரு செயலின்றி அச்சர்வசாக்ஷியினிடத்திலடங்கி யிருக்கும்போது அதையே சுத்தப் பிரமமெனச் சொல்லலாகும். அந்தச் சத்தி விசிரிம்பித்து பிரமத்தை சூழ வியாபிக்கும்போது அப்பிரமம் சத்தி வியாபகத்திற்குள்ளானதால் அதை சுத்தப்பிரமமெனச் சொல்லாமல் பரப்பிரமமெனப் பெயர்வர லாயிற்று.

இப்படிக்கான பிரம்ம சந்நிதானதில் சுருப்பிற்கு அலரியின்பங் கண்டது போலும் ஸ்திரீக்கு புருஷனிடத்தியின்பம் பயந்ததுபோலவும் விகிர்தசூனியமா யிராநின்ற அந்த சத்தியினிடத்தில் அவிகிர்த சத்துவம் ரசசு தமசு என்னு முக்குணங்கள் ஜெனித்தன. அந்தச் சுத்தசத்துவத்திற்கு ஆனந்தரூப சத்தியென்றும் சுத்தராஜசுக்கு சித்ரூப சத்தி யென்றும் சுத்த தமசுக்கு சத்ரூப சத்தியென்றும் மூன்று சத்திகளுண்டாயின. அப்படிக்குண்டான மூன்றில்

பிரதமமான ஆனந்தரூப சத்தியை அப்பிரமம் கலந்து ஆனந்த சுழுத்தியைப் பெறுங்கால் பரமாநந்தன் என்றும் அப்பரமாநந்தன் மேலே சொன்ன சித்ரூபசத்தியுடனே கூடி சர்வப்பிரகாச சொர்ப்பனத்தையடையுங்காலம் பரிபூரணன் என்றும், அந்தப் பரிபூரணன் மேற்கண்ட சத்ரூப சத்தியுடனே சேர்ந்த சர்வவியாபக சாக்கிரத்தையுடையுங்கால் பரனென்றும் விளங்கலாகும். இங்ஙனம் சொற்றதுக ளெல்லாம் குணபேதகத்தாற் பெயரும் வேறுபட்டன வென்றும் பிரம்மமே பரமாத்மா, சத்தியே சரீரமென்றும் அறிக. இப்படி அசிபத லட்சணம் சொல்லப் பட்டது.

அகண்டமாவது:—ஒன்றினாலும் கண்டிக்கப் படாதது. உலகினர் நிர்ணயமும் உலோகாயுதர் நிர்ணயமும் அருகர் புத்தர் ஆகமங்களினால் கண்டிக்கப்படும். அவையும் தேவ கந்தருவ ராகமங்களினால் கண்டிக்கப்படும். அவையும் பிரமாகமத்தில் கண்டிக்கப்படும். அவையும் விஷ்ணுவாகமத்தினால் கண்டிக்கப்படும். அவையும் பதினெண் புராணங்களினால் கண்டிக்கப்படும். அவையும் இதிகாசங்களினால் கண்டிக்கப்படும். அவையும் வேதாகமங்களிலுள்ள கன்மகாண்டத்தினால் கண்டிக்கப்படும். அவையும் உபாசனகாண்டத்தினால் கண்டிக்கப்படும் இவையெல்லாம் வேதாந்தவுபநிடதத்தினால் கண்டிக்கப்படும். இப்படிப்பட்ட வுபநிடதங்களினால் நிர்ணயஞ் செய்யப்பட்ட சச்சிதானந்த பிரம்ம சொரூபத்தை வேறொன்றினாலும் கண்டிக்கக் கூடாமையி

னும் அப்படிக் கண்டிக்க வேணுமானாலும் உபநிஷத்துக்கு மேலான பிரமாணமில்லாத படியினாலும் சகல பிரமாணங்களுக்கும் உபநிஷதமே கொடுமுடியாய் விளங்குகிற படியினாலும் உபநிஷதத்தினால் பிரதி பாதிக்கப்பட்ட பிரமமே; அகண்டம்.

இன்னுமொருவிதம்:—தேச கால வஸ்து, இம்மூன்றினாலும் பரிச்சேதம் (எல்லை) அற்றது.

ஒன்றுக்கு மூன்று விசேடமெதற்கெனில் தேசப்பரிச்சேதமற்றது. பூரண மென்னுமிடத்தில் ஆகாசம் சர்வதேசத்தும் வியாபகமா யிருப்பதால் அவ்வாகாயத்துக்குப் பூரணத்துவம்வரும், அதை நிராகரிக்கும் நிமித்தம் காலப் பரிச்சேதமற்றது, பூரணமென்றும் 2-வது விசேடம் வரலாயிற்று. ஆயின்காலத்தினால் ஆகாசத்துக்கு அபரிச்சின்னத்துவ மின்றோவெனில்; ஆகாசம் சிருட்டிகாலத்துண்டாய்ப் பிரளயகாலத்தி லழிதலால் பூரணத்துவமின்று. இவ்விரண்டு விசேஷத்தோடு நில்லாமல் மூன்றும் விசேடமெதற்கோவெனில் காலத்துக்கு தேசத்தினாலும் ஆகாயத்தினாலும் பரிச்சேதம் கூடாமையின் அபரிச்சின்னத்துவம் வரும். அதைநிராகரிக்கும் நிமித்தம் மூன்றுவதான விசேடம் வரற்பாலதாயிற்று. அப்படியாயின் காலத்துக்கு வஸ்துவினால் அபரிச்சின்னத்துவ மின்றோவெனில்; காலமும் ஆகாசாதிகளும் வஸ்துவாகாமையினால் பூரணத்துவமில்லை-வஸ்துவில்காலம் உற்பத்திலயமாகையால் வஸ்துவுக்குப்பூர

ணத்துவ முண்டோவெனில்; வஸ்துவும் பிரம்ம சன்னிதானத்தில் விளங்கி, பிரமத்தினிடத்திலே ஐக்கியமாவதாலும் வஸ்துவாகிய பிரகிருதிக்குப் பூரணத் தன்மையில்லை-பிரமமேசர்வ வியாபகமானதால் தேசப்பரிச் சேதமும் நித்தியமாதலால் காலப்பரிச்சேதமும் சர்வான்மகமாதலால் வஸ்துப் பரிச்சேதமுமின்று. ஆதலால் பிரஹ்மமேஅகண்டம்.

பரிபூரணமாவது:—எப்படி யொருகடத்தை ஜலத்தால் பூரிக்கப்படுகின்றதோ வப்படிப்போல ஒன்றையொன்றால் நிரப்பப்படுகிறது. அதாவது அன்னமயத்தைப் பிராணமயத்தாலும் பிராணமயத்தை மனோமயத்தாலும் மனோமயத்தை விஞ்ஞானமயத்தாலும் விஞ்ஞானமயத்தை ஆனந்தமயத்தாலும் ஆனந்தமயத்தை அவித்தையாலும் அவித்தையை மாயையினாலும் மாயையை பிரமத்தினாலும் பூரிக்கப்பட்டிருப்பதால் பிரமமே பூரணம்.

சத்து லக்ஷணமாவது, எப்படிப்பழுதையி (கயிற்றி) னிடத்தில் பாம்புதோன்றுவதற்கு முன்னும் தோன்றியழிந்தபின்னும் விளங்குகிறதுமானகாலத்திரயத்திலு முள்ளதாய் சர்ப்பத்தைப்போலத் தான்தோன்றினும்வாதிக்கப்படாமல் ஏகரூபமாயிருக்கின்றதோ அதுபோல ஜகத்துண்டாவதற்கு முன்னும் உண்டா யழிந்தபின்னும் விளங்குவதுமான காலத் திரயத்திலுமுள்ளதாய் ஒன்றினும் வாதிக்கப்படாமல் ஏகரூபமாயிருப்பதுவே சத்து.

சித்துலக்ஷணமாவது:— சூரியனானவன் தீபாதி அன்னிய சாதனாந்தரங்களை யபேட்சியாமல்தானே பிரகாசரூபமாயிருந்துகொண்டு பிரபஞ்சத்திலுள்ள கடமடாதி சர்வ விஷயங்களையும் விளக்கிக்கொண்டிருக்கிறானோ அப்படியே சித்து சூரியாதி அஷ்டப்பிரகாசங்களையும் அதாவது சூரியன், சந்திரன், நக்ஷத்திரம், அக்கினி, மின்னல், இந்திரியம் (நேத்திரம்) மனம் (புத்தி) ஜீவனாகியவைகளை யபேட்சியாமல் சுயம்பிரகாசமா யிருந்துகொண்டு சர்வத்தையும் பிரகாசிக்கின்றதெதுவோ அதுவேசித்து.

ஆனந்தலக்ஷணமாவது:—நித்திய, நிருபாதிக, நிரதிசய சுகசொரூபமாயுள்ளதுவே பிரமானந்தம், அப்பிரமானந்தத்தைப் பிரமநிஷ்டாள் பிரமநிஷ்டையிலிருந்து அனுபவிப்பதாகையால் முமுட்சுக்களுக்கு அனுபவமில்லாமையினாலவர்களுக்கு ஆனந்தலட்சணமறிவிக்கும் நிமித்தம் சுழுத்தியானந்தத்தால் தெரிவிக்கப்படுகின்றது. அதாவது சுழுத்தியின் கண்ணுள்ள பிரமானந்தம் ஜாக்கிரத்திலுள்ள விஷயானந்தத்தைப் போலக் கெடாமையின் நித்தியமென்றும், அன்னாதி யுபாதியின்மையின் நிருபாதிகமென்றும், அப்சர அரம்பா ஸ்திரீமுதலிய வதிசயமின்மையின் நிரதிசயமென்றும் சொல்லப்படுவதாலானந்தம்.

சுத்தியிலிரசிதம்போல:—பின்பக்கத்தில் நீல்நிறமாயும் திரிகோணமாயுமுள்ள முத்திப்பியில் தூரதிருஷ்டியினாலும் சூரிய கிரணத்தினாலும் தோற்றப்பட்ட வெள்ளியை, சத்

தென்றால் ஆபரணத்துக்குதவவேண்டும் அசத்தென்றால் தோற்றாது போகவேண்டும். இப்படிச் சத்தென்றாவது அசத்தென்றாவது சொல்லப்படாமல் யாதொரு வஸ்துவா னது உற்பத்திக்குமுன்னும் நாசத்திற்குப் பின்னும் நில்லாமல் மத்தியிற் றோன்றுகிறதோ அது அத்தியந்தாபாவ, அநிர்வசனீய (மித்தியாரூப) மென்று சொல்லப்படும்.

மூலப்பிரகிருதியாவது:—சர்வ ஜகத்துக்கும் காரணமாயிருப்பதால் மூலமென்றும், உற்பத்திக்கு ஸ்தானமாயிருப்பதால் பிரகிருதியென்றும் சொல்லப்படும். இன்னொருவிதம். பிர-சத்துவம், கிரு-ரஜசு, தி-தமசு, பிரகிருதி மாயை, அவித்தை, தமசு அஞ்ஞானம் இவ்வைந்தும் ஒரு பொருட் சொற்கள். அது சகல பிரபஞ்சத்தையும் தன்னிடத்தில் தோற்றுவிப்பதால் சக்தி.

அந்த மூலப்பிரகிருதியும் விகிர்தகுணமாகிய முக்குணத்துடனே கூடியிருக்கும். விகிர்தகுணமாவது; வேறுபாடுள்ள குணங்கள், அதாவது பிரகாசம் பிரவிருத்தி, மோகம், என்னும் சத்துவ, ரஜசு தமசு என்னும் ஒன்றுக்கொன்று வேறுபாடான உருவங்களையுடையது.

கவி.

திகழ்பூன்ற சச்சிதா னந்தப் பிரமத்
திடத்திப்பி தனில்வெள்ளி தெரிவ தேபோல்
நிகழ்மூலப் பிரகிருதி யெனுமோர் சத்தி
நேரிதன்பே ராதிபிர கிரதி யோடு

புகழ்மூலம் விந்துதத்வ மாதி மூலம்
பொருமகங் காரமூல வகங்கா ரந்தான்
மகிழிந்தியங் காலதத்வ மவ்வி யக்த
மகாதத்வ மாமினும்பே ரனேக மாமே.

மாயையாவது:—அகடித, கடித, சாமர்த்தியத்தை யுடையது. அதாவது கூடாததைக்கூட்டிவைப்பது. அன்றியும் ஆகாசாதி பூதங்களையும் உண்டுபண்ணுவது. இன்னும் சத்து, அசத்து, சதசத்து, (சத்தாகவும் அசத்தாகவு மிருப்பது) சாவயவ(அவயவமுடையது) நிரவயவ (அவயவமில்லாதது) சாவயவநிரவயவ (அவயமுள்ளதாகவுமில்லாததாகவும் தோற்றுவது) பின்னம் (வேறுபட்டது) அபின்னம் (வேறாகாதது) பின்னாபின்னம் (வேறானதும் வேறாகததுமாகத்தோன்றுவது) என்னும் இவ்வொன்பது விதத்தினாலும் நிர்ணயிக்கக் கூடாதெதுவோ அதுவேமாயை. சத்தென்றால் பழுதைப்போலக்காலத்திரயத்தினும் கெடாதிருக்கவேண்டும். தத்துவஞானத்தால் கெட்டுப்போகிறபடியால் அசத்தென்றும் அசத்தென்றால் முயற்கொம்பைப்போலக்காலத்திரயத்திலும் இல்லாமற் போகவேண்டும்.

அகம் (நான்) அஞ்ஞானி யென்னும் அனுபவமிருப்பதால் அசத்துமன்று. சத்தசத்தென்றால் ஆதித்தனும், அந்தகாரமுமொன்று யிருப்பதுபோல விருத்த மானதால் சத்தசத்துமன்று.

சாவயமென்றால் அவயவசகிதமா யிருக்க வேண்டும், இந்திர ஜாலககாரனுடைய சக்திக்கும் தீப்பொறியை யுண்டாக்குகிற சக்திக்கும் எப்படிச் சொரூப மில்லையோ வது போல ஜகத்துக்குக் காரணமாயிருக்கிற சக்திக்குச்சொரூபமில்லாமையினால் சாவயமுமன்று.

நிரவயமென்றால்:— ககனாரவிந்தம் (ஆகாச தாமரை) போலத் தோன்றாமல் போகவேண்டும்; ஜீவேஸ்வரஜகத்தாகத் தோன்றுவதால் நிரவயமுமன்று.

சாவயவ நிரவய மென்றால் ஸ்திரீயும் புருஷனும் ஒன்றாயிருக்கின்றார்க ளென்பதுபோல விருத்தமானதால் ஒன்றுக்கிரண்டு பக்ஷங்கூடாது. ஆதலால் சாவயவ நிரவயவமுமன்று.

பின்னமென்றால் பிரமத்திற்கு வேறாகத் தோற்ற வேண்டும். அப்படிச் சொன்னால் அத்துவிதம் என்றுசொல்லுகிற சுருதிக்கு ஹானிவரும் ஆனதால் பின்னமுமன்று.

அபின்ன மென்றால் (வந்தால் வரட்டும்) அப்படிச் சொன்னா லென்னவென்றால் மாயையென்று சொல்லாமல் பிரமமென்றே சொல்லவேண்டும். அப்படிச் சொன்னால் பிரமநாமத்துக்கு விருத்தமாக அஞ்ஞானமென்றும் மாயையென்றும் பொய்ரூபிஎன்றும் தமசென்றும் மோகமென்றும் அநேகநாமங்கள் சுருதிகளில் கூறப்படுவதால் அபின்னமுமன்று.

க வி.

பந்தமாகியதோர் மூலப் பகுதியின் விகிர்த தத்வ
முந்திய சாத்துவீக முடனிரா சதந்த மந்தான்
சிந்தைசெய் காலே வெண்மை செந்நிற நீல மென்பர்
அந்தமின் மறைக டன்னே யாய்ந்தமே லவர்கண் மாதோ.

சர்வஞ்ஞ வுபாதியென்பது:—சர்வஞ்ஞத்துவாதி கல்யாண குணங்களை யுடைய சற்குண வைஸ்வரிய சம்பன்னரான ஈசுரபிரதி பிம்பத்துக்கு ஹேதுவா யிருத்தலின் சர்வஞ்ஞ வுபாதியென்றும், சற்குணமாவது சர்வஞ்ஞத்துவம். சர்வேசுரத்துவம், சர்வாந்திரியாமித்துவம், சர்வகாரணத்துவம், சர்வநியந்திரத்துவம், சர்வசக்தித்துவ மென்பன.

அவற்றுள் சர்வஞ்ஞத்துவமாவது சர்வான்மாக்களுடைய பாவபுண்ணிய கருமங்களையும் ஒருங்கேயறிந்து அந்தந்த கருமங்களுக்குத் தகுந்த சுகதுக்க ரூபமான போகங்களை ஊட்டுவிப்பதுவே யாம்.

சர்வேஸ்வரத்துவமாவது:—சர்வாத்துமாக்களை (ஜீவர்களை) யும் சிருஷ்டித்தும் தன்னே சிருஷ்டிக்க வொருவருமில்லாமையினாலும் அவரால் சிருஷ்டிக்கப் பட்டவைகளை மாறுபடுத்த முடியாமையினாலும் அணிமாதி சர்வ சம்பன்னரா யிருக்கிற படியினாலும் சர்வேஸ்வரத்துவம்.

## வியாக்கியானம்.

இயற்கை ஞானம், பேரருள், முடிவிலாற்றல், வரம்பிலின்பம், வரம்பில்காட்சி, முதலின்மை, அணிமாமகிமா,

கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம் வசித்துவங்களோடு தூயவுடம்பு, மக்கள், பொன், மணி, அடிமை வாகனங்களாதிய சகல ஐசுவரியங்களு முளவாந் தன்மையெனவறிக.

சர்வாந்திரியா மித்துவமாவது:—சர்வ ஆன்மாக்களுடைய அந்தக் காரணங்களுள்ளிருந்து நல்வினை, தீவினைப் பிரகாரம் அசைப்பிக்கிறபடியால் சர்வாந்திரியாமித்துவம்.

சர்வகாரணத்துவமாவது:—சர்வான்மாக்களுடைய சரீரமுண்டாகி நசித்தாலும், தான் நசியாதிருத்தலின் சர்வ காரணத்துவம்.

சர்வ நியந்திரத்துவமாவது:—இரவியாதி கிரகங்களும் இந்திராதி திக்குபாலர்களும் சமுத்திர முதலானவைகளும் தங்கள் தங்கள் நியமந்தவறும லிருக்கும்படி செய்வதால் சர்வ நியந்திரத்துவம்.

சர்வ சத்தித்துவமாவது:பிரம்மா முதலிய ஈஸ்வரர்களையும் விரித்தொடுக்கும் சக்தியுடையவராகையால் சர்வ சத்தித்துவம்.

ஈஸ்வரகாரண சரீரமாவது:—அவரது தூல சூக்கும சரீரத்துக்கு ஏதுவாயிருப்பதுவே.

சத்துவ குணம்:—வெள்ளை நிறம். (சுத்தம்)

ரஜோகுணம்:—சிவப்பு.

தமோகுணம்:—நீலம்.

வித்தை யென்பதும் ஞானமென்பதும் ஒன்று.

கவி.

வீயதோர் பகுதி தன்னின் முதற்குண விகிர்த சத்வ
மாயகற்பி னைக்கோ வீச னரியகாரணச ரீரம்
மாயைநல் வித்தையேசர்வ ஞ்சனி னுபாதி யென்ன
தூயபே ரீரி ரண்டாய்ச் சொல்லுவர் தூயர் மாதோ.

நிர்மல சலப்பிரதி பிம்பமாவது:—பரிசுத்தமான ஜலத்தில் பூரணசந்திர னுடைய பிரதிபிம்பம் எப்படித் தெளிவாய்த் தோன்றுமோ அப்படிப்போல மாயையினிடத்தில் பிரம்மம் சலட்ண (சுயலக்ஷண) மாகத் தோன்றும் இந்தப் பிரதிபிம்ப சைதன்யத்தை சர்வஞ்ஞனுகிய ஈசுரரென்று சொல்லப்படும்.

சத்துவத்திற் சத்துவமாவது:— ஈஸ்வர பிரதிபிம்பத்துக்கு ஹேதுவாயிருக்கிற முதற்குணமாம் - சத்துவத்திலி ராஜதம், அவருடைய பிரதிபிம்பத்துக்கேதுவான இரண்டாங்குணம். சத்துவத்திற்றமதம் அவர் பிரதி பிம்பத்துக் கேதுவான மூன்றுங்குணம். இம்மூன்றுகுணத்தில், சிருட்டிதிதி சங்காரம்என்னும் முத்தொழிற்குரிய விஷ்ணுபிரமர் உருத்திரன் என மும்மூர்த்திகள் தோன்றினர்.

சிருட்டி யென்பது பிரபஞ்சவுற்பத்தி; திதியென்பது பிரபஞ்சத்தை இரட்சித்தல், சங்காரமென்பது சாக்கிரம்

சொற்பனமாகிய விரண்டு பிரபஞ்சத்தையும் சம்மாரஞ் செய்வது; அன்றியும் பிரம்மாவுக்குத் தொழில் சிருஷ்டி யொன்றே, விஷ்ணுவுக்கு சிருஷ்டியும் திதியும், உருத்திர னுக்கு சிருஷ்டி-திதி-சம்மாரம் மூன்றும். உருத்திரனென் பது சமுசாரசாகரத்தி னின்றும் கரையேற்றுபவன். கற் பனையாவது காலத்திரயத்திலும் இல்லாதவஸ்து எதுவோ அது. ஆரோபம்அத்தியாசம் கற்பனை இவைமூன்றும் ஒரு பொருட்சொற்கள். இப்படி மூலப்பிரகிருதியின் சத்துவ குணகற்பனை சொல்லப் பட்டது.

கவி.

குளகம்.

சுத்தசலந் தனின்மதியின் பிரதி பிம்பந்
தோற்றலென முன்னுரைத்த மாயை தன்னில்
நத்துபிர மஞ்சலட் சணம தாக
நவில்பிரமச் சாயைபிறங் கிற்ற தன்பேர்
நித்தியசர் வக்கிபனு மீசரன்று
னிகளீசன் காரணமா மாயை யின்பால்
தொத்துசத்து வத்தின்சத்து வங்கள் மூன்றுந்
தொடருங்கால் மூவரதிற் றோன்று மாதோ.

ஈசன்பாற் சத்துவத்திற் சத்து வந்தா
னிசையவரும் விண்டிந்த வுலகைக் காப்பன்
நேசன்பாற் சத்துவத்தி லிராச தந்தான்
நேரவரும் பிரமனு லகைப்ப டைப்பன்

தேசன்பாற் சத்துவத்திற் றூம தந்தான்
 றிரியவரு முருத்திரனிவ் வுலக ழிப்பன்
பேசரிய பிரகிருதி முதற்கு ணத்தின்
 பெருமைதனை யிதுவரையும் பேசி னேமே.

இன்னும் மேலுரைத்த பிரமத்தி னிடத்தில் சுத்தி னிடத்தில் ரசிதம்தோன்றினல் போலும் தீபத்தினிடத்தி னிழல் தோன்றினற் போலும் மூலப்பிரகிருதி என்னும் ஓர் சத்தியுண்டாயிற்று. இதற்கு முறையே சாந்தவிருத்தி கோரவிருத்தி மூடவிருத்தி என்றும்பெயர். அதையே பிரமத்திலோர் அணுவென்றஞ் சொல்லத்தகும். அந்தமூலப் பிரகிருதி விகிர்தசத்துவம் ரஜசுதமசு என்னுமூன்று குணங் களுடனே யுள்ளது. அஃமுக்குணங்களில் பிரதமமான சத் துவகுணமே சுத்தமாயையென்று சொல்லப்படும். அம்மா யையினிடத்தில் நிர்மல ஜலப்பிரதிபிம்பம்போல பிரமம் சுலட்சணமாய் பிரதிபிப்பிக்கும். அந்தச் சைதன்னியத்தி ற்கு சர்வஜனஞகிய ஈஸ்வரன் என்றுபெயர். இவ்வீஸ்வர னுக்கு மேற்சொன்ன சுத்தமாயையே காரணசரீரமாம்;

அந்தச் சத்துவகுண சுத்தமாயையி னிடத்தில் சத்து வத்திற்சத்துவம் சத்துவத்திற் ரஜசு சத்துவத்திற் தமசு என்னு முக்குணங்களுண்டு. அதிற்சத்துவத்திற் சத்துவஞ் சிலா கியமாம்போது அதிற் பிரதிபிம்பித்த ஈசுவரனுக்கு விஷ்ணு என்றுபெயர். சத்துவத்தில் ரஜசு பிரதானமாம் போது அதிற் பிரதிபிம்பித்த ஈசுவரனுக்கு பிரமாவென்று

பெயர். சத்துவத்தில் நமசுசிரேட்டமாய்போது அதிற்பிரதிபிம்பித்த ஈசுவரனுக்கு ருத்திரன் என்றுபெயர். இப்படி மூலப்பிரகிருதியின் சத்துவகுணகற்பனை சொல்லலாயிற்று. இனிமேல் மூலப்பிரகிருதியின் ரசோகுணகற்பனை சொல்லப்படும்.

அவித்தையாவது:—மூலப்பிரகிருதியின் ரஜோகுணம் வித்தையி, (ஞானத்தினால்) கெடுவதாயிருப்பதாலும் மலினவுபாதி யானதாலும் (மலினம் கலக்கம்) ஜீவன் பிரதிபிம்பத்திற்கு ஏதுவானதாலும் அவித்தை.

ஜீவகாரணசரீரமாவது:—ஜீவனுடைய காரிய சரீரமான தூல சூக்குமமிரண்டையும் விரித்தொடுக்குகிறதற்கு இந்த அவித்தை யேதுவாயிருத்தலின் ஜீவகாரணசரீரம்.

ஒன்றற்கொன்று தாரதம்மியமாவது:—ஜீவர்கள்வெவ்வேறு பேதமாகவிருத்தலின் தாரதம்மியம் (ஏற்றக்குறைச்சலாயிருப்பது) வெள்ளை, சிவப், கருப்பு இம்மூன்று நிறங்களையுடைய நூல்களாலாகியகயிற்றில் மூன்றுநிறங்களும் கலந்து நிற்பதுபோல, ஜீவர்களிடத்தில் முக்குணங்களும் கலந்துநிற்கும்.

கவி.

அந்தவவ் வியத்தி ரண்டாங் குணமதே யவித்தை சீவ
பந்தகா ரணச ரீரம் பகர்திரி நூல்சேர்ந் தாற்போல்
உந்தவே யுலகி லேயுற் பவித்தொன் றற் கொன்றெவ் வாத
வந்தமி லுருவம் வெவ்வே றனபேதங்க ளாமே.

மலினஜலப்பிரதி பிரம்மமாவது:—அவித்தையினிடத்துப் பல ஜீவர்களாகத் தோற்றுவித்தல்.

கிஞ்சிக்ஞனாவது:—அற்பஞான முடையவனும் முன் பின்னென்றையுமறியாமல் தேகாதிகளில் நானென்றும், அதன் அபிமானகாரனும் துக்கஜீவனம் பண்ணிக்கொண்டிருக்கிறபடியால் கிஞ்சிக்ஞன்.

கவி.

கலங்கள் ரதனிற் றேன்றுங் கலைமதி யொளியைப் போல
பலமுறு மவித்தை தன்னிற் பிரமத்தின் பிரதி பிம்பம்
இலகிடும் போது பேரோ விரிசிதா பாச ஜீவர்
நலமில்கிஞ் சிஞ்ஞ ரென்று நவிலுவர் நல்லோர் மாதோ.

சிதாபாசனாவது:—சித்தைப்போலத்தோன்றியும்சிந்துக் குரிய சச்சிதானந்த லக்ஷணமில்லாமையால் சிதாபாசன்.

பிராஞ்ஞனாவது:—மிகுந்த ஞானத்தை யுடையவனும் கரணேந்திரியங்களின்றி, சுழுத்தியவஸ்தையிலுள்ள பிரமானந்தத்தை சூட்சும விருத்தியாலனுபவிப்பவன். இராசதத்தில் சத்துவமாவது - ஜீவன் பிரதி பிம்பத்துக்கு முதல் குணம்.

இராசதமாவது 2-வது குணம்.
தாமதமாவது 3-வது குணம்.

தத்துவஞான நிஷ்டனாவது:—பிரம்மை வாகம்,என்று அர்த்தாவத், பிரம்மமே நான்; என்று சொரூபத்திலழுந்தி யிருப்பவன். இதற்கு விசேட அருத்தமாவது 35 தத்துவங்களும், ஓரோரவஸ்தையில் நசித்தலின், அதத்துவமென்றகன்று 36-ம் தத்துவமாகிய பரதத்துவமே தானென்று அனுபவித்து நிற்றலினாலும் துவித, விசிட்டாத்துவித ஞானமின்றி, அப்பிரதிபந்த அபரோக்ஷ சாக்ஷாத் காரமாயும் ஜீவேஸ்வரஜகத்து, மலடிமகன் முதலிய 64 திருஷ்டாந்தங்களில் 19 மித்தை யென்றும், சின்மாத்திரமேயுண்மை யென்றும் அறிந்தவனேயாம்.

கவி.

குளகம்.

சொல்லிய வவித்தை யென்னத் தொடரிரா சதகு ணத்தில்
நல்லசாத் துவித மாதி நவில்குணஞ் செறிய வத்தால்
வல்லகா ரியமாஞ் சீவர் மருவுமுக் குணத்திற் றோன்றி
யெல்லையிற் பேத மாகு மென்பர்நூற் றெரிந்த மேலோர்.

இன்னும் ஸ்திரீ புருஷர்கள் இராசதத்தில் சாத்துவித குணத்தை வகித்துப் புணருங்கால முண்டான கருவிற் றோன்றியவன் தத்துவஞான நிஷ்டன்.

காமக்குரோத பரனை கன்மநிஷ்டனாவது; பாவபுண்ணிய கருமத்தில் அழுத்தமுற்றிருப்பவனே, மாதா பிதாக்கள் இராசதகுணத்தை வகித்துக் கூடுங்காலம் உண்டான

கருவின்கண் ணுதித்த சிசுக்கள் காமக்குரோதாதி குணங்களை யுடைய கர்மிஷ்டராகிறார்கள்.

சோம்பல் நித்திரை மயக்கங்களை யுடையவனாவது:— இராகத்து வேஷாதி 13 குணங்களை யுடையவனே யாம். பெற்றோர்கள் இராசதத்தில் தாமத குணத்தை வகித்துப் புணருங்காலம் உண்டான புதல்வனே. கொலை, களவு, கள், காமம், குருத்துரோக முதலிய பஞ்சபாதகங்களை யுடையவனாகிறான்.

கவி.

காதல்சே ராணும் பெண்ணும் கலவிகள் செய்யுங் காலம்
நீதிசே ரசசிற் சாந்த நிகழவக் கருவே ஞானி
யோதிய ரசசி லோரா சதமுறு கருவே காமி
சோதனை ரசசி லேதா மதமிசை கருவோ சோம்பி.

இப்படி மூலப்பிரகிருதியின் ரசோகுண கற்பனை சொல்லப்பட்டது.

இனி மூலப்பிரகிருதியின் தமோகுண கற்பனை சொல்லப்படும்.

ஈஸ்வரானுக்கிரகத்தினாலே சர்வ ஜீவர்களுக்கும் போகபாக்கிய முண்டாகும் பொருட்டு மூலப்பிரகிருதியின் தமோகுணமாகிய வஞ்ஞானத்தினின்று ஆவரணசத்தி, விட்சேபசத்தி, என இரண்டு சத்திகளுண்டாயின.

ஆவரணம்—மறைதல், மூடல்.

விட்சேபம்—நினைத்தல், தோற்றல்.

கவி.

பொங்குமா யாவிநோத பூரண னருளி னாலே
தங்குபூ வுயிர்கட் கெல்லாஞ் சகலபோ கமுமுண் டாக
மங்குதா மதகு ணத்தில் வருமிரு சத்தி தோன்று
மிங்கிதா வரணந் தோற்ற மீதிலா வரணஞ் சொல்வாம்.

ஆவரண சத்தியாவது, ஜெகதீசனையும் பிரத்தியே காத்ம சொரூபமான தன்னை சுருதியுக்தி யனுபவத்தா லறிந்துகொண்ட பிரம்ம நிஷ்டர்களையுந் தவிர இதரஜீவர்களனைவருக்கும் நாஸ்தி (பிரமமில்லை யென்றும்) நபாதி (பிரம மிருந்தாற் றெரியாதா என்றும்) இவ்விரு விருத்தியினால் அவர்கள் ஞானத்தை யபகரித்து, விட்சேபசத்தியா லுண்டான, உலகதேவ தத்துவங்களாகிய தூலசூக்கும காரண சரீரங்களின் பேதமும் சிதாபாசன் சைதன்னியஞ் சாக்ஷி யென்பதின் பேதாபேதமும் தெரியவொட்டாமல் மறைக்கும்.

கவி.

ஈசுரன் றனையும் தன்னை யெய்துஞா னியையு மன்றி,
பாசமாக் குவதற் கான பகர்நாஸ்தி நபாதி யென்று, பே
சியசீவர்க் குள்ள பேரறி விழக்கும் வண்ணம், மாசில்விண்
டறைதிக் கெல்லா மறையிருள் மழைபோன் மூடும்,

இப்படி ஆவரண சத்தியினுல் மறைபட்ட ஜீவர்கள் 29 தத்துவங்களேயும் ஒருமைப்பாடாக நானென் றபிமானிப்பர். இதனே அசங்கார கிரந்தியென்றும் சம்சாரபந்தமென்றும் சொல்லப்படும்.

29. தத்துவங்களுக் குள்ளபேதம்; தூலசரீரத்துவம் 6. சூக்குமசரீரத்துவம் 20 காரண சரீரத்துவம் 2 மகாகாரண சரீரமாகிய சாக்ஷி 1. ஆகதத்துவம் 29-ல் 28-ம் சாக்ஷியா லறியப்பட்டபடியால் அனுத்மாக்க ளென்றும் சாக்ஷியாகிறதன்னே ஆத்மாவென்றும், 28-ம் வேறுவேருகயிருக்கிறபடியால் பேதமென்றும் சாக்ஷிதானுக விருப்பதால் அபேதமென்றும், 28-ம் அனுத, ஜடதுக்கமென்றும், தான்சச்சிதானந்த சொரூபமென்றும் எக்காலத்தும் யாவராலும் தான்சாக்ஷியென்னும் திடம் மாருதிருப்பதே பேதம் அறிவது.

அகங்காரகிரந்தியாவது:—27-தத்துவங்களேயும் கூட்டிக்குழப்பிக்கொண்டு நான்என்பதாயும் சற்குருகடாக்ஷமின்றி அவிராததாயுமுள்ள வகங்காரமாகிய வேர்முடிச்சாம்.

சம்சார பந்தமாவது:—ஜனன மரணமே சம்சாரம், அதனில் கட்டுப்பட்டிருப்பதே பந்தம்.

சற்குருவென்பது:—சத்ரூபத்தைப் போதிக்கிற படியாலும், தான்சத்தா யிருக்கிறபடியாலும் சத்தாம். -சிட

னுடைய(கு,)என்னும்அந்தகாரத்தை(ரு,)என்னும்ஞானத்தால் நிக்கிரகம்பண்ணுகிற படியால், குரு இன்னும்-கு-அஞ்ஞானம் ரு-ஞானம். ஆகவேஞானத்தால் அஞ்ஞானத்தை நிவர்த்தி செய்பவரே குரு. இன்னும்-கு-குணதீதம் ரூ-ரூபாதீதம், ஆகவே குணரூபமில்லா திருத்தலால் குருவெனப்படும், இன்னும்-கு-மாயையாதி குணங்களை விளக்குவது ரு-மாயாமயக்கத்தினைக் கெடுக்கும் பரப்பிரமம் ஆகவே குரு.

கவி.

எங்குமாம் பிரமத் திற்கு மிசைபுற விகாரங் கட்கும்
பொங்குகூ டத்த னுக்கும் புகலகவிகாரங் கட்கும்
தங்கிய பேத மேதும் தான்றெரி யாது மூடி
இங்கது பவமுண் டாக்கு மினிவரு தோற்றஞ் சொல்வாம்.

விட்சேபசத்தியின் தன்மையைக் கூறல்:— இனிவிட்சேபசத்தியி னிடத்திலுஞ் சத்ததன் மாத்திரையான சூக்குமஆகாசம்பிறந்தது-ஆகாசத்திலும் பரிசதன்மாத்திரையான சூக்குமவாயுபிறந்தது. அவ்வாயுவில் ரூபதன்மாத்திரையான சூக்கும அக்கினி தோன்றிற்று, அவ்வக்கினியில் ரசதன்மாத்திரையான சூக்கும அப்புதோன்றிற்று, அவ்வப்புவில் கந்ததன்மாத்திரையான சூக்கும பிருதிவிதோன்றிற்று. இவ்வாறு தோன்றிய சூக்குமபஞ்ச பூதத்திற்கு உபாதானமா யிருக்கின்ற (காரணமாயிருக்கின்ற) அவ்விட்சேபசத்தியினிடத்தில் தமசில்சத்துவம், தமசில்ரஜசு, தம

சில்தமசு, என்றமுக்குணங்களும் தோன்றி அதன்காரிய மாகவே மேற்கண்ட பஞ்சபூதங்களு முண்டாயின-இப்ப ஞ்ச பூதங்களைத் தன்மாத்திரைகளென்றும் சூட்சுமபூதங்க ளென்றும், முக்குண பூதங்க ளென்றும், அபஞ்சீகிருத பூதங்களென்றும் சாத்திரங்களிற் சொல்லப்படும்.

சத்ததன்மாத்திரையாவது:—சத்தம்-ஓசை, தன்மாத் திரை நொய்யபூதம் (தன்னித்யகுணம்) இந்த முக்குணத் தோடுகூடிய பஞ்சபூதங்களைந்தும் நொய்யதாகவும் யோக சாதன சரீரத்துக் கேதுவாகவு மிருக்கும் தன்மாத்திரை யென்பது, ஒன்றோடொன்று சேராதிருத்தல். இஃதீசுரா னுக்கிரகத்தினுல் மூலப்பிரகிருதியின் தமோகுணத்தி லுண் டானவைகள்.

சூட்சுமபூதமென்பது நேத்திரத்துக்குப் புலப்படா மல் பிருதிவி தூசியாகவும் அப்பு நயப்பாகவும் தேயுவெப் பமாகவும், வாயு பலவீனமாகவும் இவை நான்கும் ஆகாய த்திலிடம் ஐக்கியமாய் அவ்வாகாயமும் சத்தரூபமா யிரு த்தல் கொண்டு இவற்றை சூட்சும பூதங்க ளென்றும் இவ்வைந்தும் தனித்தனி யற்பமா யிருப்பதால் நொய்ய பூதங்களென்றும பஞ்சீகரிக்கப் படாமையால், அபஞ்சீகி ருத பூதங்களென்றும் இப்பூதங்களும் அவ் விட்சேபத்திக் குண்டான முக்குணங்களுடனே கூடியிருப்பதால் முக்கு ணபூதங்களென்றும் பெயர், விட்சேபத்தி: (இல்லாததை யுண்டுபண்ணத் தக்கது) முடிவில் முத்திக்கு வழிகாட்டு

சூட்சுமபூதங்களின் சத்துவகுண ரஜோகுண அம்சமான 20 தத்துவங்களாலேற்பட்ட இலிங்கசரீரமாகிய

# சூட்சுமசரீரபாவனை.




சர்வாங்கத்திலுமுள்ள அகங்காரம்-பிருதிவியம்சம். 5.
துவக்கு வாயு-அம்சம். 7.
வியானன் வாயு அம்சம். 11.

இந்தச்சரீரம்
பிராணமயம் மனோமயம்
விஞ்ஞானமயம் என்னும்
3. கோசங்கட்குட்பட்டது.

வது. இப்பூதங்களுக்கு அதிதேவதைகள் முறையே சதாசிவம், மகேசுரன், உருத்திரன், விஷ்ணு, பிரம்மா ஆகிய இவர்கள் இன்னும் விட்சேபசத்தி யென்பதே ஈஸ்வர சங்கற்பமா யிருத்தலால் அதின் காரியமும் ஈஸ்வரனுக் கன்னியமல்ல; சூக்குமபூதத்திற்கு காரணமாயிருந்தது விட்சேபசத்தியி னினைப்பேயாம். பிறவும் மாயா காரணமாகிய காரணபூத மென்பர்.

அதாவது ஞானமாகிய அக்கினியைப் பிரகாசிக்க விடாமல் மக்கனஞ்செய்து கொண்டிருக்கிற ஜலரூபமாகிய அக்ஞானத்தினிடமாய்ப் பிரணவமாகிய விந்தைப்பிரம்மன் மகிமைப் படுத்தியவுடனே அங்ஙனம் விட்சேபசக்தி யுதயமாக ஓர் கருவாய் திரண்டது. அக்கரு பூரணமெய்தியது தெரிந்து இரகசியத்தைவிட்டுப் பகிர்முகப்படுத்தியபோது அது சாத்வீக ராஜததாமத மென்னும் முக்குணங்களுந் தோன்றக் கெடாத சூட்சும பஞ்சபூதங்களு முறையே அச்சக்தியினிட மிருந்துண்டாயின.

க வி.

19\. இந்தவிட் சேபந் தன்னி லிலகிய விண்ணும் விண்ணில்
வந்தது காலங் காலில் வருநெருப் பாநெ ருப்பிற்
றந்தது நீரா நீரிற் றரையதா மப்பூ தங்கள்
சந்தது நொய்தாம் போக சாதன தனுவுண் டாகும்.

சூட்சும சரீரபடம்.

சூட்சுமசரீரமாவது:—விருத்திபூர்வயாக ஜீரணிக்கிறது. அதாவது அகந்தை, மமதாகாரமாய் பரிணமிக்கிறதே. விரு

த்திகளின் விகாசமும் விருத்திகளின் சங்கோசமும் விகாசம்—விரிவு சங்கோசம்—சுருங்குதல் விருத்தி வளர்தல் சூட்சும சரீரதத்துவம் 20 அதாவது அந்தக்கரணம் 5 ஞானேந்திரியம் 5 கன்மேந்திரியம் 5 வாயுக்கள் 5 ஆக 20 இவைகளைப் படத்தில்பார்க்க.

கவி.

20, மாயையி லுதித்த வீசன வித்தையில் வந்த ஜீவற்
காயபல் போகஞ் செய்ய வைம்பூதச் சற்குணத்தை
பேயதோரீரி ரண்டாக் கியவொற்றிற் கரண மைந்துந்
தூயதோர் பகுதி ஞானேந் திரியமாய்த் தொகுத்தார்
[தூயார்

அந்தக்காணமாவது. உள்ளம் மனம்புத்தி சித்தம்அகங்காரமென 5 இவைகள் முறையே தரித்தல் அதாவது சகல பூதங்களுக்கு மிடங்கொடுத்தல் விடயங்களைப்பற்றிய லைதல் ஒவ்வொருபொருளையும் விளக்கிக்காட்டல் விடயங்களி விழுத்துச்செல்லல் நானென் றபிமானித்துக் கடினமாய் நிற்றல் முதலிய குறைகளையுடையன.

இவ்வந்தக்கரணங்களுக் கதிதேவதைகள் முறையே. சேத்ரக்யன் (ஜீவன்) சந்திரன் பிரம்மா. விஷ்ணு ருத்திரன், இவைகளுக்கு கோளகை (இடங்)கள் முறையே புருவமத்தி கண்டம் இருதயம் நாபி மூலம் தீபச்சுவாலையைப் போல அனேகவித பரிணமத்திரவிய பேக்ஷிகிய ரூபமே அந்தக்கரணமாம்.

காரணசரீரமாவது: சூக்குமகாரண சரீரங்களான விருத்திகளின் விகாசமும் சங்கோசமும் எங்கே காணப்படுகின்றதென்னில் மூடர்களினிடத்தில் விகாசமும்முமூக்ஷுக்களிடத்தில் சங்கோசமும் காணப்படுகிறது. ஆகையால் இவைகளுக்கு சரீரமென்று பெயர்.

தேகம், தகிக்கப்படுவதால் தேகம். பூதாக்கினியால் தூலசரீரமும் இராகத் துவேஷாதிகளால் சூட்சுமதேகமும் ஞானத்தினுல் காரணதேகமும் தகிக்கப்படுகிறபடியால் தேகமென்று பெயர்வந்தது சூட்சுமசரீரத்துக்கு லிங்கசரீரமென்று பெயர் வந்ததாவது ஜீவனுக்கு பாகியாந்தரத்திலுள்ள சத்தாதிவிஷயங்களை யறிவிக்கிறபடி யினுல் இலிங்கசரீரமென்று பேர்வந்தது.

ஞானேந்திரியமாவது: சுரோத்திரம் (செவி) துவக்கு (தோல்) சட்சு (கண்) சிங்ஙுவை (நாக்கு) ஆக்கிராணம் (நாசி) இவ்வைந்து.

சுரோத்திரம்: ஆகாசத்தின் சத்துவகுணத்தி னிரண்டாவது பகுதியிலுண்டானதால் ஆகாயத்தின் குணமான சத்தத்தைமாத்திரம் அறியும்.

துவக்கு: இது வாயுவின் சத்துவகுணத்தி னிரண்டாம் பகுதியிலுண்டானபடியால வாயுவின் குணமாகிய பரிசத்தைமாத்திர மறியும்.

சட்சு: அக்கினியின்சத்துவகுணத்தி னிரண்டாம் பகுதியி லுண்டானபடியால் அக்கினியின் குணமாகிய ரூபத்தைமாத்திர மறியும்.

சிங்nுவை: அப்புவின் சத்துவகுணத்தி னிரண்டாம் பகுதியி லுண்டானபடியால்அப்புவின் குணமான இரசத்தைமாத்திர மறியும்.

ஆக்கிராணம்: பிருதிவியின் சத்துவ குணத்தி னிரண்டாம்பகுதியி லுண்டானபடியால் பிரிதிவியின் குணமான கந்தத்தைமாத்திர மறியும்.

ஆகாயத்துக்கு தன்னித்தியகுணம் சத்தம்-1. வாயுவிற்கு தன்னித்தியகுணம் பரிசம். சேர்க்கை குணம் சத்தம் ஆக2. தேய்வுக்கு தன்னித்திய குணம் ரூபம் சேர்க்கைக் குணம் சத்தம் பரிசம் ஆக 3. அப்புவுக்கு தன்னித்திய குணம்-ரசம் சேர்க்கைக்குணம் சத்தம் பரிசம் ரூபம் ஆக 4.பிருதிவிக்கு தன்னித்தியகுணம் கந்தம் சேர்க்கைக்குணம் சத்தம் பரிசம் ரூபமரசம் ஆக 5.அதிதேவதைகள் முறையே திக்கு, வாயு, சூரியன்,வருணன், அசுவினி.

கோளகை (தானம்) முறையே, காது, உடம்பு, கண், நாக்கு. மூக்கு. இவற்றிற்கு தொழில் முறையே கேட்டல் பரிசித்தல் காணல் ருசித்தல் முகர்தல்.

பஞ்சவாயுக்களாவன 1. வியானன் 2. பிராணன் 3. அபானன் 4. சமானன் 5. உதானன் இவைகள் பஞ்சபூதத்

தின் ரசோகுணத்தின் முதற் பகுதியிலுண்டானவை இது சமட்டி (சேர்க்கை)

உசுவாசமாவது:—பிராணவாயு உள்ளே பிரவேசித்தல். அது புறம்போதல் நிசுவாசமாம். அன்றியும் இப்பிராணவாயு ஒன்றே நாசிகாந்தத்தின்வழியே பன்னிரண்டங்குலம் வெளியேபுறப்பட்டு நாலங்குலம்கழிந்துபோக எட்டங்குலம் உள்ளே போகிறது. அதாவது உட்கார்ந்திருக்கும் போது 12 அங்குலமும், நடக்கும் போது 16 அங்குலமும், நித்திரை பண்ணும் போது 40 அங்குலமும் ஸ்திரீயைப் புணருங்காலம் 64 அங்குலப் பிரமாணமும் பிரவேசித்து இரண்டு பங்குள்ளும் ஒரு பங்குபுறமும் உலாவிக்கொண்டிருக்கின்றன. அன்றியும் நாழிகை யொன்றுக்கு முன்னூற் றறுபது சுவாசமாக நாளொன்றுக்கு 21600 சுவாசம் நடக்கும். இவ்வைந்து வாயுக்களும் பிராணவாயு விளம்சங்கள்.

இப்படி உசுவாசம் நிசுவாச மாகின்ற பிராணயுவை மேலுங் கீழும் போகாமல் சுழிமுனைவாயிலாகச் செலுத்தி. அகார. உகார மகார மென்னு மந்திரத்தினல் பிரமகபாலத்தில் நிறுத்துவதே யோகம்.

யோகமாவது:—அப்பிரார்த்த மாதல் அதாவது முன்னடையாததை யடைதல்.

இதை நிலைநிறுத்தல் சேமம் இஃது அடையோகம். ஞானயோகம் அறிவென்னும் மயிற்பாலத்தின் வழியாய

விடயங்க ளென்னும் நெருப்பாற்றைக் கடப்பது ஞான யோகம்.

நாகனுதி யுபவாயுக்கள்வாக்காதி கன்மேந்திரியங்களை தொழிற் படுத்துவதற்கு காரணமா யிருக்கின்றன. அல்றி யும் வைரவன் முக்கியன் பிரபஞ்சகன் அந்தரியாமி,மகாப் பிராணன் என்று ஐந்துவாயுக்களுண்டு. இவைகள் ஜீவசம் பந்தமாய் அந்தக்கரணத்தை தொழிற் படுத்துபவைகள்.

வியானுதி வாயுக்கள் அப்பியந்தர வாயுக்களென்றும், நாகனுதி வாயுக்கள் வாகிய வாயுக்களென்றும் வைரம் பனுதிவாயுக்கள் ஜீவசம்மந்த வாயுக்களென்றும் பக்கவா யுக்களென்றும் சொல்லப்படும்.

கன்மேந்திரியமாவது:—சூட்சும பஞ்சபூத ரசோகுண வியஷ்டியிலுண்டாகி வசனுதியைந்து தொழில்களையும் நட த்துதற்கு காரணமானது.

இவ்வைந்தும் ஆகாசாதி பஞ்சபூதங்களின் ரசோகுண வியஷ்டியானதால், ஒன்றன்தொழிலை யொன்றுசெய்யாது தத்தம் தொழிலேயே செய்யும் ஒன்ருய்க்கூடினது சமட்டி தனித்தனியானது வியஷ்டி உதாரணம்-அநேக மரங்கள டர்ந்த வனத்திற்கு சமட்டி என்றும் ஒவ்வொரு மரங்க ளாய்க் கூறுவது வியட்டி என்றும் சொல்லப்படும். பஞ்ச வாயுக்களைந்தும் சமட்டியாம் கன்மேந்திரியங்களைந்தும் தனித்தனி வியஷ்டியாம்.

இதுபோல ,அந்தக்கரணமைந்தும் சமட்டி. ஞானேந் திரியங்களைந்தும் தனித்தனி வியஷ்டி, இந்த 20 தத்துவ

மும் பஞ்சபூதங்களினது சாத்மீக ரசோகுணத்தின் சமட்டி வியட்டிகளான சூக்குமசரீரம்.

கன்மேந்திரியம்பத்துக்கும் அதிதேவதைகள் முறையே.

| | |
|---|---|
| (1) விசுவயோனி | (6) அக்கினி |
| (2) விசிட்டன் | (7) இந்திரன் [ (சூரியன்) |
| (3) விசுவகர்த்தா | (8) வாமனன் (விஷ்ணு) |
| (4) ஜயன் | (9) மிருத்யூ (யமன்) |
| (5) அஜன் | (10) பிரஜாபதி (பிரமன்) |

சூட்சுமசரீரம்:—அருவுடம் (நுண்ணுடம்) பெனவும் படும் பத்துவகை இந்திரியவுணர்வோடும் ஐவகை வாயுக்க ளோடுங்கூடி நல்வினை தீவினைகளைச் செய்ய சங்கற்பிக்கும் மனம் நுண்ணுடம்பு சூட்சும சரீரதத்துவம்20-ல ஞானேந் திரியமைந்தும் அந்தக் கரணமைந்தும் ஆகப்பத்தும் ஞான சாதனங்கள். கன்மேந்திரியமைந்தும் வாயுக்கள் ஐந்தும் ஆக பத்தும் கிரியா சாதனங்களாம்.

சேடித்தது—மீதமானது.

சூட்சுமசரீரம் வாங்காத ஜீவர்களுக்கு இன்னொரு சிரு ட்டிக் காகட்டுமென்பது. சூட்சுமசரீரம் தத்துவஞானத் தால் கெடாத ஜீவர்களுக்கு இன்னொரு சிருட்டிக் காகட்டு மென்று தமோகுண அம்சத்தை ஈசுரன்நிறுத்திவைத்தார். அதாவது சூக்மசரீரம் நீங்கிய ஞானிகள் தவிர மற்ற ஜீவர் களுக்கு.

கலி.

21. பூதங்க ளைந்திற் கோரம் பொருந்தவீரி ரண்ட தாக்கி
பாதியி லைந்து வாயு பகுத்தமற் றொருபா கத்தி
லோதிய சரும விந்திரிய முடன்பத்துங் கிரிகை யாகு
மாதலா லிருப துஞ்சூட் சுமதனு வுயிர்க்கா மன்றே.

பஞ்சீகரணமாவது:—ஒரு பூதத்தினுடைய பாகத்தை மற்றொரு பூதத்துக்குக் கொடுப்பது. அதாவது சேதித்து நின்ற தமோகுண பூதங்கள் ஐந்தையும் ஒவ்வொன்றையு மிரண்டாக்கி அவற்றிலொரு பாதியை நன்னான்காகப்பிரித்துஅரைக்காலரைக்கால் மாத்திரை யாக்கி, முதற் பாதியில் தன்னம்சம் அரையுடனே மற்ற நான்கு பூதங்களின் அரைக்காலரைக்கால் மாத்திரை யெடுத்துக் கூட்ட தூல பூதமாயிற்று.

அதாவது பிரிதிவியின் தன்னம்சம் பாதி அஸ்தி (எலும்பு) பிரிதிவியிலப்பு அரைக்கால்பங்கு கூடினது மாமிசம்; பிரிதிவியில் தேயு அரைக்கால்பங்கு கூடினது தோல், பிரிதிவியில் வாயு அரைக்கால் பங்கு கூடினது நரம்பு, பிரிதிவியி லாகாயம் அரைக்கால் பங்கு கூடினது மச்சை (உரோமம் அல்லது மூளை)

அப்புதன்னம்சம் பாதி மூத்திரம் பிரிதிவி அரைக்கால் பங்குகூடினது. வாய்நீர் தேயுவு அரைக்கால்பங்கு கூடினது வேர்வை, வாயுவு அரைக்கால் பங்குகூடினது இரத்தம், ஆகாயம அரைக்கால்பங்கு கூடினது சுக்கிலம்.

அக்கினி தன்னம்சம் பாதிபசி, பிரிதிவி அரைக்கால் பங்குகூடினது நித்திரை, அப்பு அரைக்கால்பங்கு கூடினது தாகம், வாய்வு அரைக்கால்பங்குகூடினது சோம்பல், ஆகாயம் அரைக்கால்பங்கு கூடினது சங்கமம் (சேர்க்கை).

வாய்வு தன்னம்சம் பாதி ஓடல், பிரிதிவி அரைக்கால் பங்குகூடினது படுத்தல், அப்பு அரைக்கால்பங்கு கூடினது நடத்தல், அக்கினி அரைக்கால்பங்கு கூடினது இருத்தல், ஆகாயம் அரைக்கால்பங்கு கூடினது தாண்டல்.

ஆகாசம்தன்னம்சம் பாதி மோகம், பிரிதிவி அரைக்கால்பங்கு கூடினது இராகம், அப்புஅரைக்கால் பங்குகூடினது துவேஷம், வாய்வு அரைக்கால்பங்குகூடினது பயம், அக்கினி அரைக்கால்பங்குகூடினது வெட்கம், இவை 25-ம் தூலசரீர தத்துவங்கள் இவற்றுள் மாமிசத்தில் ரத்தம்உண்டாகி 6-தத்துவங்களாம். மூளையில் சுக்கிலம் உண்டாகி 7 தத்துவங்களென்றும் சிலசுருதிகள் சொல்லுகின்றன.

க வி.

குழகம்.

22. பஞ்சபூ தமும்பத் தாக்கிப் பாதியை நன்னான் காக்கி
மிஞ்சவே பாதிநீக்கி மிகுநான்கி னன்குஞ் சேர்க்க
தஞ்சமாந் தூல பூதந் தருமகா பூத மீதில்
விஞ்சமீ ரிரண்டாந் தூலமெய்யண்ட புவன போகம்.

23. நாடிய தூல பூதநரம்புதோ லிறைச்சி யத்தி
யோடியன் மச்சை சோரி யுடனுறு தத்து வங்கள்
கூடிய தோற்ற மேழுங் குறித்திடு சாதி மூன்றுய்
பாடிய தூல மென்றே பகருவர் பனுவ லோரே.

நால்வகைப்பிறப்பாவது. சராயுசம். அண்டசம். சுவேதசம் உத்பீசம். இவற்றுள் சராயுசம் கருப்பை யினின்றும் பிறப்பன, சராயு—பை. சம்—பிறப்பு. அண்டசம்-முட்டையில்பிறப்பன. அண்டம்—முட்டை. சம், பிறப்பு, சுவேதசம்-வியர்வையில் பிறப்பன சுவேதம்—வியர்வை. சம்-பிறப்பு-உத்பீசம்—விதத்திற் பிறப்பன. உத்பீ-வித்து; சம்—பிறப்பு. உத்பீச மென்பதை பூமியிலிருந்து பிறப்பனவென்று சிலநூல்கள் கூறுகின்றன.

கவி.

24. புணர்செயீ ரிரண்டாம் யோனி புகல்சரா யுசத்தோ டண்டம், இணைசுவே தசமுத் பீச மிவற்றினுக் குரியதாக, உணர்பையே முட்டை வேர்வை யுடன்விதை யாகுமான்கில், கணமிகு வுயிர்க ளியாவுங் கருத்தரித் துதிக்குமாதோ.

எழுவகைத்தோற்றமாவது: தேவர்-மனிதர்- விலங்கு. பட்சி-நீர்வாழ்வன - ஊர்வன-தாவர முதலியன. தோற்றமாவது; ஜீவர்களின்பேதம். தேவர். 11-லக்ஷம்-மனிதர் 9-லக்ஷம-விலங்கு 10-லக்ஷம்-பக்ஷி 10-லக்ஷம்-நீர்வாழ்வன

10-லக்ஷம்-ஊர்வன 13-லக்ஷம்-தாவரம் 21-லக்ஷம்-ஆக ஜீவபேதம் 84 லக்ஷம்.

கவி.

25. தோற்றமோ ரேழ தாகுஞ் சுரர்நரர் விலங்கி னோடு
போற்றிய பரவை நீரிற் பொருந்திய தூர்வ வின்னும்
ஆற்றலிற் றுவரத்தோ டாகிய வுயிர்கள் யாவுஞ்
சாற்றுநால் யோனிதன்னிற் சனித்ததென் றுரைக்குநூலே.

மூவகைச்சாதியாவது:—உத்தம மத்திம அதன்ம சாதிகள். இவற்றுள், தேவர் மனிதர் உத்தமஜாதி, திரியக்கு அதாவது குருக்கு யோனியுடைய பரவை விலங்கு முதலியன மத்திமசாதி. அன்றியும் திரியக்கு என்பது சத்துரு வருமோ வென்ற பயத்தால் பார்க்கும் பார்வையுடையதென்றும் பொருள்படும், திரி திரிதல் அக்கு கண். தாவர முதலிய மற்றவை அதமசாதி.

சாதியென்பது பலவற்றைத் தொடர்ந்து ஒன்றாய்த் தோன்றும் தன்மையது. சாதி தன்மை திவப்(ஒன்றல்லாதது) என்பன ஒரு சொற்பொருள்கள் (உ-ம்) தேவசாதி மனுடசாதி மிருகசாதி என்பதுபோல.

தேவர் மனிதர் உத்தமசாதி, பசுபக்ஷி முதலியவை மத்திமசாதி, மரங் கொடி செடி முதலியவை அதமசாதி, இதுபோல புவர்லோக சுவர்லோக தவலோக சனலோக மகாலோக முதலிய லோகங்களிற் றோற்றுகின்ற நக்ஷத்திரம் சந்திரன் முதலான பிதிர்களும் சூரியாதி தேவர்களும்

கந்தர்வர் சித்தர் முதலானவர்களும் இன்னும் இவைபோல பலவும் உத்தம ஜாதிகள், காமதேனு அன்னம் கருடன் இவைபோல்வன பிறவும் மத்திமசாதிகள், கற்பகம் அரிச்சந்தம் சந்தம் மந்தாரம் பாரிசாதம் முதலிய இவைபோல பிறவும் அதமசாதிகள், இன்னும் சீவர்கள் பரிசியவறிவையுடைய புன் மர முதலியன ஓரறிவுயிர்கள், பரிசம் இரசம் இவ்விரு வறிவுடைய நத்தை சங்கு முதலியன ஈரறிவுடையனவெனவும், பரிசம் ரசம் கந்தம் இம்மூன்று அறிவுடைய கரையான் எறும் பாதிகள் மூவறி வுடையன வென்றும், பரிசம் ரசம் கந்தம் ரூபம் இந்நான்கறிவினையுடைய தும்பி வண்டாதி முதலியன நான்கறிவுடையவை யென்றும், பரிசம் ரசம் கந்தம் ரூபம் சத்தம் இவ்வைந்தையு மறியும் விலங்கு புள்ளாதிகள் ஐந்தறிவுடையன வென்றும், வானவர் மக்கள் நரகர் பகுத்தறிவாகிய ஆறுவித அறிவோடு கூடி ஆறறிவுடையவர்க ளென்றும் சொல்லப்படும். நரகர் என்பது பிசாசு முதலியன.

பகுத்தறிவென்பது இம்மைப் பயன் மறுமைப் பயன் வீட்டின் பயன் என்னும் மூன்றையு மறியுமறிவு.

வீடென்பது:—மோக்ஷம். அதாவது பந்தம் விடுதலென்பது. இவ்வித ஜீவர்கள் புண்ணியம் பாவம் மிசிரமென்னும் மூன்று கர்மங்களின் பயனால் தாம் செல்லும் கதிகளாகிய தேவகதி மனுடகதி மிருககதி தாவரகதி இந்நான்கு கதியை யுடையவர்கள் புண்ணிய உத்கிருஷ்டம்

மத்திபம் சாமான்யமென மூன்றுவகை. புண்ணிய உத்கிருஷ்ட முடையவர்கள் தேவகதியை யடைவார்கள். புண்ணிய மத்திபம். அயிராவதம் அன்னம் கருடன் முதலிய மத்திம தெய்வீக விலங்கின் கதியை யடைவார்கள். புண்ணிய சாமான்யம் கர்ப்பகதரு முதலிய தெய்வீக தாவரகதியை யடைவார்கள்.

இவ்விலங்கின் கதியும்தாவரகதியும் தேவகதியின் அந்தர்பூதம (அடக்கம்). இதுபோல் பாவகன்மத்திலும் உத்கிருஷ்டம் மத்திமம் சாமான்யமென மூவகை. இவற்றுள்ளடங்கிய தாவரதிரியக் காதிகளும் மிசிரகன்மததில் உத்கிருஷ்டம மத்திமம் சாமான்யமென மூன்றுவகை. இவற்றுள்ளடங்கிய இருடிகள் தவசிகள் முதலானவர் களும் இராசாக்கள் முதலான செல்வர்களும் அடிமைத்தொழில் சண்டாளத்துவ முடையவர்களும்.

கவி.

26. மூவகைச் சாதி தன்னின் முதலிக பரத்துண்மோகர்
தேவரு நரருமேமத்திமமிகத் திச்சை கொள்ளும்
ஆவல்சேர் பறவை யாதியதமமவ் விரண்டு மில்லாத்
தாவர மாகு மென்றே சாற்றுவர் தக்கோர் மாதோ.

கோசமாவது வாளை (கத்தியை) உறை மறைத்தால் போல அகம் சத்தார்த்தமாகிய ஆன்மாவாகிய தன்னைத் தான் பசிதாகமுடையவன், நான் பலவான், நான் பலவீனன்

நான் வசஞதி கிரியையுடையவன் என்பனவாதியான அத்தியாசத்திஞல் மறைத்தலின் கோசம். இதுவும் என்பிராணன் என்பசி என்தாகம் என்வசஞதிகிரியை என்று தன்ஞலறியப் படுகிறபடியால் தானல்லவென்பது.

பஞ்சகோசமாவது: ஆத்மா பஞ்சகோசத்திற்கு வேறென்றுசுருதி சொல்லுகின்றபடி பஞ்சகோசங்களை பகுத்தறியாமல் அவைகளுக் கன்னியமாகிய ஆத்மசொருபத்தை யறியக்கூடாது.

ஆகையால் பஞ்சகோசமாவது அன்னமயம். பிராணமயம் மஞேமயம் விஞ்ஞானமயம் ஆனந்தமயமென ஐந்து.

தூலசரீரமே அன்னமயம் எப்படியென்ருல் மாதா பிதாக்களுடைய அன்னசாரமான சுக்கில சுரோணித மானது பிதாவயிற்றில் இரண்டுமாதம் கருத்தரித்து பின் பத்துமாதம் மாதாவயிற்றிலிருந்து ஜனனமாய் பிரேதம் போல ஸ்தூலமாய் கரசரஞதி அவயவாகாரமாய் சட்பாவ விகாரமாய் பஞ்சபூதகாரியமாய் கடகுட்டியம் (மண்பாண்டம்-சுவர்) போல சடபாத்திரமாய் நாலுமுள மட்டாய் வாதபித்த சிலேத்பனத்தா லுண்டான 4448. வியாதிக்கும் ஸ்தானமாயுள்ள இத்தூலசரீரமே அன்னமயகோசம்.

அகம் சத்தார்த்தமான ஆத்மாவாகிய தன்னை நான் பிராமணஞதி வருண முடையவ னென்றும் நான் பிரமச்சரியாதியாசிரம முடையவனென்றும் நான்கன்னடமாதிசாதி

யுடையவனென்றும் நான்மனிதன் நான்பிறந்தேன் நான் வளர்ந்தேன் நான்பருத்தேன் நான்இளைத்தேன்நான் ஆண் நான்பெண். கருவல்சிவலை நான்கட்டயன் என்பன வாதியான அத்தியாசத்தினால் மறைத்தலின் கோசம்.

என்ஜாதி என்வருணம் என்னாச்சிரமம் பிறந்தது. வளர்ந்தது பருத்தது இளைத்தது என்று தன்னால் அறியப்பட்டமையால் இதுவும் தானல்லவென்பது பிரதிக்ஞை நியாமம் அன்னிய விகாரமென்பது ஏது (காரணம்) கடத்தைப் போலவென்பது திருஷ்டாந்தம்.

பிராணமயகோசமாவது:—பிராணனும் கன்மேந்திரியமும் கூடியது. உசுவாச நிசுவாசமாயிருப்பதே மய (வடிவ)ம் இதன் அத்தியாசம் நான் பசிதாகமுடையவன் நான் பலவான் நான் பலவீனன் நான் வசனாதிக்கிரிகைகளையுடையவனென்றும் மறைத்தலின் கோசம். இதுவும் என் பிராணன் என்பசி என்தாகம் என்வசனாதிக்கிரிகை என்று தன்னாலறியப்படுகிறபடியால் பிராணமய கோசம். தானல்ல (ஆத்மாவல்ல) வென்பது பிரதிக்ஞை. சூட்சுமபூதரசோகுண காரியமென்பது ஏது. குட்டியம்போல வென்பது திருஷ்டாந்தம்.

மனோமயகோசமாவது:—மனமும் ஞானேந்திரியமுங் கூடியது. மயமாவது சங்கற்ப விகற்ப சம்சய சஞ்சல முத

லிய சொரூபமாயிருப்பது. அதாவது வடிவம். கோசமாவது. பசரிக்காய்ப்பைபுழுவை மறைத்தாற்போல அகம்சத்தார்த்தமான ஆத்மாவாகிய தன்னை நான் சங்கற்பவான், விகற்பவான், சம்சயன், சஞ்சலன், சுகி, துக்கி, போகி, மோகி, ரோகி, குரோதி என்பன வாதியான அத்தியாசத்தினல் மறைத்தலின் கோசம். இதுவும் என் மனம் என் சங்கற்பம் என் விகற்பம் என் சஞ்சலம் என் சம்சயம் என் சுகம் என் துக்கம் என் போகம் என் ரோகம் என்குரோதம் என் மோகமென்று தன்னாலறியப் படுகிறபடியால் மனோமயகோசம், தானல்லவென்பது பிரதிக்ஞை. சூட்சுமபூத சத்வகுண காரியமென்பது ஏது. குசூலம் போல என்பது திருஷ்டாந்தம். குசூலமென்பது தாமபிராதி தாதுக்களாலான குதில்.

விஞ்ஞானமயகோசமாவது:—புத்தியும் ஞானேந்திரிய பஞ்சகமும் கூடியது. மயமாவது நிக்ஷபார்த்த வாத்மகமான விசேஷக்ஞானமே சொரூபம். கோசமாவது வீணையைக் கௌசனை மறைத்தாப்போல அகம் சத்தார்த்தமான ஆத்மாவாகிய தன்னை நான் நிக்ஷபவான் நான் ஏகசந்தக் கிராகி (ஒருதரத்திலறிபவன்) நான் சத்தாதி விஷயங்களை யறிபவன் என்பன வாதியான அத்தியாசத்திஞல் மறைத்தலின் கோசம். இதுவும் என் புத்தி என் நிச்சயம் என் கண் என் காது என் மூக்கு என் நாக்கு என தன்னாலறியப்படுகிறபடியால் தானல்ல. கர்த்தாரூபமான விஞ்ஞான

மயகோசம் தானல்ல வென்பதே பிரதிக்ஞை, சூட்சுமபூத குணகாரிய மென்பது ஏது. ஸ்தம்பப்போல என்பது திருஷ்டாந்தம்.

ஆனந்தமயகோசமாவது:—சுளுத்தியில் சொரூபானந்தத்தை அனுபவிக்கும் அவித்தையா விருத்தியும் சாக்கிரம் சொற்பனங்களிலுள்ள இஷ்டவஸ்து தரிசன போகத்தால் உளதாகும் பிரியம் மோதம் பிரமோதரூப அந்தக்கரண விருத்தியுங்கூடி பிம்பப் பிரதி பிம்பானந்த சொரூபமாதலின் ஆனந்தமயம். பிரிய மென்பது, ஒன்றைக்கண்டபோதுண்டான சந்தோஷம். மோதமென்பது கிடைத்தபோதுண்டான சந்தோஷம். பிரமோத மென்பது அனுபவித்த போதுண்டான சந்தோஷம்.

கவி.

27. கோச மைந் தனங்கூறும் பிராணனே
டாசி லாமன விஞ்ஞான மானந்தம்
பேச னந்தூலம் பின்மூன் றுஞ் சூக்கும
மாசிற் காரண மானந்த மாகுமே.

கோசமாவது; புளியம்பழத்தைத் தோடு மறைத்தால் போல அகம் சத்தார்த்தமான ஆத்மாவாகிய தன்னைநான் பிரிய-மோதன் - பிரமோதன் - நான்சுகமாய்த் தூங்கினேனென்றும் நான்-சடன்-நான்மூடன்—நான்ஒன்றுமறியேன் என்பன வாதியான அத்தியாசத்தால் மறைத்தலின் கோசம். இவவும் என்னஞ்ஞானம் என்ஜீவன் என்னறியாமை என்பிரியமோத பிரமோதமென்று தன்னாலறியப்படுகிற

படியால் தானல்ல, சுசுரூபமான ஆனந்தமய கோசம் தானல்ல வென்பது பிரதிக்ஞை. ஒருகால் உளதென்பது எது. மேகம். போலென்பது திருஷ்டாந்தம்.

இவ்விதம் ஆன்மாவாகிய தான் பஞ்சகோசங்களில் மறைபட்டு அசத்து, சடம், துக்கம், அநித்தியம், கண்டம், அபாவமா யிருக்கிற படியால் சத்து, சித்து, ஆனந்தம், நித்தியம், பரிபூரணமான தனது எதார்த்த சொரூபம் வெளிப்படும நிமித்தம் பஞ்சகோச விசாரஞ் செய்வது அவசியமானதால் சுயபுத்தி யுடையவன் ஏகாந்த ஸ்தானத்தி லிருந்துகொண்டு மேற் கூறியபடி பஞ்சகோச லட்சணங்களை யூகித்தறிந்து இதுவும் தானல்லவென்று நன்ருய் நியதி செய்து அப்பால் காணுகின்ற சூனியத்தையுந் தள்ளி பஞ்சகோசங்களையும் பஞ்சசூனியங்களையும் காணுகின்ற அறிவேநான், அந்தநானே அவஸ்தாத்திரய சாக்ஷி, சரீரத்திரய விலக்ஷணன், பஞ்சகோச வெதிரிக்தன், அகஞ் சத்தார்த்தன் என்பது விளங்க இப்படிப் பஞ்சகோசவிசாரம்சொல்லப்பட்டது இனி அன்னுவய வியதிரேகயுக்தியினுலும் தன்னை நிர்ணயித்துக் கொள்ளும்விதம் தானுகவிளங்கின தூலசரீரம் தோன்ருத சொற்பனத்திலே தான்தோன்றுகிறதே அன்னுவய (தோன்றல்) யுக்தி. தான் தோன்றினுலும் தூலசரீரம் தோன்ருததே வியதிரேக (மறைப்பு) யுக்தி. லிங்கசரீரம் தோன்ருத சுழுத்தியவஸ்தையில் தான் தோன்றுகிறதே அன்னுவய யுக்தி. தான் தோனறினுலும்


விக்ஷை யாதிய சுத்தமாயை
ஈஸ்வரன்
விஷ்ணு
ருத்திரன்
பிரம்மா
சிவகாரண சரீரம்
ஆவூணசத்தி
முக்குணமுள்ள விட்சேபசத்தி
சிதாபாசன்
சத்துவம்
ரஜசு
தமசு
காமக்ரோதன்
அபஞ்சிகிருத பூதமென்கின்ற சப்த தன்மாத்திரையுள் சூக்கும ஆகாயம்
பரிச தன்மாத்திரையுள் சூக்கும வாயு
ரூப தன்மாத்திரையுள் சூக்கும தேயு
ரச தன் மாத்திரையுள் சூக்கும அப்பு
கந்த தன் மாத்திரையுள் சூக்கும பிருதிவி
தமசு
ரஜசு
சுத்துவம்
ஆகாயம்
வாயு
தேயு
அப்பு
பிருதிவி
பிரா
அபா
உதா
வியா
சமா
20 19 18 17 16
அகங்
சித்தம்
9 8 7 6
பாயு
உபஸ்
பாதம்
பாணி
வாக்கு
25 24 23 22 21
31 உதிரம்
32 மச்சை
சர்மம் 34
மாம்சம் 35

ங்கசரீரம் தோன்றாததே வியதிரேக யுக்தி, சுழுத்திதோன் றாத சமாதியிலே தான் தோன்றுகிறதே அன்னுவயயுக்தி, நால் தோன்றினாலும் சுழுத்திரூபமான காரண சரீரம் தோன்றாததே வியதிரேகயுக்தி. இவ்வாறாக அன்னுவய வியதிரேக யுக்தியினாலும் முஞ்சிப் புல்லின் பக்கமட்டை களைத் தள்ளி நடுவிலிருக்கிற ஆணியையெடுப்பது போல பஞ்சகோசங்களுக்குள்ளே மறைபட்டு ஆந்தரமாயிருக்கி ன்ற ஆன்மாவை இந்த பஞ்சகோசங்களை நியதி செய்து உத்தாரணம் செய்யவேண்டுமென்பது குறிப்பு. (உத்தார ணம்—இரக்ஷிப்பு) இன்னமொருவித அருத்தம்: சுழுத்தி யின்கண் நானொன்றுந் தெரியாமல் சுகமாய்த் தூங்கினே னென்று சர்வத்திரானுடைய வனுபவத்திலும் இருக்கின் றன. அதாவது, மனது அஞ்ஞானத்தி லீன்மாயபிரபஞ்சந் தோன்றாமையால் ஒன்றுந் தோன்றவில்லையென்றும் ஆனந் தமயமாயிருப்பதால் சுகமாய்த் தூங்கினேன் என்றும் சொல்வது முஞ்சிப்புல் என்பது மிருதுவான புல் அதாவது தெற்பை.

க வி.

28. சாலுஞ் சீவர்க ளுக்குச் சரீரங்கள்
ஏலு மூவகை யாகு மிதன்பெயர்
தூல மோடுசொற் சூக்கும மாமினு
மூல காரண மென்ன மொழிகுவர்.

## தூலசரீரத்தில் சூக்குமசரீர மிருக்கும் வகையைக் கூறல்.

இந்த தூலசரீரதத்துவம் ஆறினுள்ளே குடிபுகுந்த சூட்சும சரீரதத்துவம் இருபதும் படத்தில் காட்டியப்படி தத்தம் கோளகைகளிலுள்ள அதிதேவதைகளால் விளங்கப்படுகின்றன. இந்திரியங்களுக்கு அதிதேவதை யென்று பெயர்.

இவ்வதிதேவதைகள் அந்தந்த ஸ்தானங்களிலில்லாமல்; மறைந்தால் அவ்வக் கோளகைக்குரிய விஷயங்கள் புலப்படாது. தூலசரீரதத்துவம் ஆறில் சூட்சுமசரீரதத்துவம் இருபதுகுடி புகுகலாவது! ஜீவன் தத்தம் கருமத்துக்குரிய துவந்துவ(சுகதுக்க)த்தை யனுபவிப்பதற்காக ஈசசங்கற்பத்தினுல் புகுந்ததென்க. அதுவும் தம்தம் பிராரத்துவ கருமம் அனுபவிக்கும்வரை யிருக்கும்.

கவி.

குளகம்.

29. வாக்குடனே சிங்ஙுவையும் வாயினிற்கு மனத்
 துடனே யுதானனிவை கழுத்தி னிற்குந்
 தாக்குபிராணன்புத்தி யிதயனிற்குஞ் சமானனெடு
 சித்தமது நாபி னிற்குந்

சூட்சும பூதங்களின் தமோகுண அம்சமான பஞ்சபூதங்களினின்று தோன்றிய ஸ்தூலதத்துவம்
6ம் அதற்குள்ளாகிய சூட்சுமசரீர தத்துவம் 20ம் சேர்ந்து பூதகாரியமாயுள்ள

# காரிய சரீர பாவனை.



தேச்குபா யுருவ்யானன் குதத்திற் றிகழ்தவக்கு
வியானனகங் கார மூன்றும்
ஆக்குமிர்த வுடலமதில் சர்வவங்க மமர்ந்திருக்கு
மென்றுமறை யறையு மாதோ.

30. உச்சியிலே தேஜஸ—வுங் கருவிழியிற்சட்டசா
முவந்திடுநற் காதுக்குள் சுரோத்திரமூக் குள்ளே
பச்சமிகு மாக்கிராண நான்கும் வேறாய்
பற்றிநிற்குந் தனித்தனியே கழுத்தின்மே
இச்சைமிகுங் கைகால்கள் குய்யம்பாணி
யெழிலானகழலுபத்த மமைந்தநிற்கு
மெச்சுமுடற் றத்துவங்க ளாறினுள்ளே
விளங்குகின்ற சூட்சுமந்தா னிருப தா

விசுவனுவது:—சாக்கிரத்திலுள்ள தேகா
களை நான் எனதென் றபிமானிப்பவன்.

வியவகாரிக ஜீவனுவது:—கர்த்தாவாயிரு
கரிக்கிற படியாலும், தத்துவஞானத்துக்கு பின்
போகிற படியாலும் வியவ காரிகன்.

தைசதனுவது;—ஒரு குகையில் சுவர்ண
டாலெப்படிப் பிரகாசிக்குமோ அப்படிப்பிரகாச
சுமசரீரந்தோடு கூடியிருப்பவன்.

பிராதிபாசிகனுவது:—சாக்கிரத்திலுள்ள தன்
ற்பனத்தில் மற்றொருவனை மாற்றிப்பார்த்தலாலும்

அவ ஞானமின்றி சொற்பனத்தில் தோன்றி சாக்கிரத்தில் கெடுகிறபடியாலும் பிராதிபாசிகன்.

சொற்பன கற்பிதனாவது:—கட்டையைத் தடவிப்பார்த்துக் கள்ளன் என்பதுபோல, சொற்பன சத்தியினால் தன்னை வேறாகத்தோற்றிவைக்கிறபடியால் சொற்பனகற்பிதன்.

பிராக்ஞனாவது:—மிகுந்த ஞானமுடையவனாய் மறதியில்லா திருக்கிற சுழுத்தி யவஸ்தையிலுள்ள பிர...க்தை சூட்சுமவிருத்தியா லறிந்தனுபவிக்கிறவன்.

...மார்த்திகன்:—உற்பத்தி நாசமின்றி என்றுமொரே...ருப்பவன்.

கவி.

குளகம்.

...தகத்தையேதொடர் சீவனுஞ்
...வேவிவ காரிவி சுவனுஞ்
...க்குமஞ் சேர்ந்தி டிற்றைசதன்
...வேபராதி பாதிக னேடினும்,
...னுஞ் சொற்பன கற்பித னுமிதன்
...னு காரியம் யாவையும் மாற்றியே
...ன்னுங் காரணத் தொன்றில் பிராக்ஞனே
டுன்னு மேபர மார்த்திக வுண்மையே.

ஜீவாத்மாவாவது:—தப் தாய பிண்டம்போல, அதாவது காய்ச்சின இரும்புருண்டையைப்போல ஜீவனுடைய சரீரத்தில் சம்பந்தித் திருப்பவன்.

அந்தராத்மாவாவது:—கமல பத்திரோதகம் (தாமரையிலையும் தண்ணீரும்) போல ஒட்டியுமொட்டாம லிருப்பவன்.

பரமாத்மாவாவது:—சூரியனானவன் பிரபஞ்ச விவகாரத்திக்கு சாக்ஷியாயிருப்பதுபோல சுழுத்தி யவஸ்தைக்கு சாக்ஷியாயிருப்பவன்.

ஞானாத்மாவாவது:—பஞ்சகோசங்களையும் பஞ்சகோச விகாரங்களையும் அறிந்து கொண்டு விலட்சணமா யிருப்பவன்.

ஆத்மாவாவது:—தனக் கிரண்டாவதில்லாமல் தானாகவிருப்பது.

கவி.

33 சாக்கி ரத்திற்குச் சாக்ஷிசீ வாத்துமா
ஆக்குஞ் சொற்பனத் துக்கந்த ராத்துமா
தாக்கி டுஞ்சுழுத் திபர மாத்துமா
தாக்கும் நான்கிற் கூடத்தர் ஞானத்துமா.

கூடஸ்தனாவது:—கொல்ல னுலையிலுள்ள அடைக்கல்லினிடத்து சமட்டியினால் ஈட்டி பாலா முதலிய விகாரங்கள் தோன்றி யழிந்தாலும் அந்த விகாரங்களைத் தான்

பற்ருது நிர்விகாரமாய் அடைக்கல் இருக்கிறதுபோல தன்னிடத்தில் மனமானது அவஸ்தாத்திரய பிரபஞ்சங்களை விரிததொடுக்கினுலும அதிற் பற்ருது நிர்விகாரமா யிருக்கிறவன்.

சாக்கிரமாவது:—சர்வேந்திரியங்களினுல் பாகிய ஞானத்துடன் விஷயாகாரமாய் பரிணமித்து கர்த்தத்துவாதியாகாரமாய் ஸ்திரமா யெந்தமட்டும் விவகரிக்கப் படுகிறதோ அந்தமட்டும் சாக்கிரம்.

சோப்பனமாவது:—இந்திரியங்களினுல் பாகியார்த்த ஞானமின்றி தானே சாக்கிரத்தின் வாசனு பரிகல்பித விஷயாகாரமாய்ப் பரிணமித்து கர்த்தத்துவாதி யாகாரமாய் அஸ்திரமாய் எந்தமட்டும விவரிக்கப் படுகிறதோ அந்த மட்டும் சொப்பனம்.

சுழுத்தியாவது:—இந்திரியங்களின்பாகியார்த்த ஞானமும் மனதின் விஷயாகார பரிணுமமும் கர்த்தத்துவாதி வியாபகமுமின்றி புத்தி, தானே விருட்சத்தை யடக்கி வைத்துக் கொண்டிருக்கிற வித்தைப்போல காரணுத்மகமாக எந்தமட்டுக்கு மிருக்கிறதோ அந்த மட்டுக்கும் சுழுத்தி. அன்றியுப் துரியம திரியாதீதமென இரண்டு அவஸ்தைகளுண்டு இவற்றுள் துரியம சாக்கிரத்தில் அகக்கமலமழிந்து மனேவியாபார மிழந்து பரமாத்ம சிந்தனை புரிவதே.

துரியாதீதமாவது:—பிரமானு சந்தான விருத்தியும் கழுவி மனமானது பாலில் கலந்த ஜலம்போல ரமிப்பதே.

தாவரங்களுக்கு சுழுத்தி ஒன்றும், திரியக்குகளுக்கு சொற்பன சுழுத்தி யிரண்டும், மனிதர்களுக்கு சாக்கிர சொப்பன சுழுத்தி மூன்றும், தேவர்களுக்கு சாக்கிரமொன் றும்,உன்மத்தருக்கு துரியமும், சிவயோகிகளுக்கு துரியா தீதமுமாம்.

நனவிற் சுழுத்தியாவது:—இந்திரியங்கள் தத் தம் கோளகைகளிலேயேஇருப்பது. நனவு—சாக்கிரம்||விருத்தி—மனோவிஷயத்தில் செல்லாமல் சொரூபத்தினிடத்திலேயே யடங்கி யிருப்பது.

புருவமத்தி, கண்டம், இருதயம், நாபி, குதம், இவ் வைந்தும், மூலாலவஸ்தை.

கலி.

86. தத்த வத்தைக ளைந்தின்முன் மூன்றுமே
பெத்தர் கட்கும் பினுமிரண் டாகுமே
முத்தர் கட்கு முறைநெற்றி கண்டநெஞ்
சொத்த நாபி குதமிட மோருங்கால்.

## ஜீவேசுர பேதம்.

ஒரு வனத்திலுள்ள மரங்களை தனித்தனியே பார்ப் பது போல ஜீவன் வியட்டி. வனமும் ஜலாசயமும் போல ஏகமாய்ப்பார்ப்பது சமட்டி-ஈஸ்வரன்(ஜலாசயம்சமுத்திரம்)

கவி.

35. சிவ ரீசற்கு செப்பிய பேதங்கள்
மேவு வமை வியட்டி சமட்டியாம்
பூவொரு மரம் போல வியட்டியே
காவ னத்திரள் காணல் சமட்டியே.

## ஈசுரனது சரீராதியைக் கூறல்.

விராட்டாவது:—வியாபகமாயும் விவிதமாயுஞ் சமட்டி ஸ்தூல சரீர உபாதியுடைய சைதந்யம் நானாவிதமாயும் விசேஷமாயும் விளங்குவது விராட்டாம் (விவிதம்—நானா விதம்.)

இரணியகர்ப்பனாவது:—ஒரு குகையினுள்ளே உருக்கி விட்ட சுவர்ணம்போல சூட்சும சரீரப் பிரகாசரூபமாயிருப்பது. இன்னும், ஸமஷ்டி ஸூக்ஷ்ம சரீரமுடைய சைதந்யம் ஞானசக்தி யுடைமையின் இரணிய கர்ப்பன்.

அவ்வியாகிருதமாவது:—வெளிப்படாதது. அதாவது ரூபரகிதமா யிருப்பது.

கவி.

36. தூலம் யாவுந் தொடர விராட்டிவன்
ஏலுஞ் சூட்சத் திரணிய கர்ப்பனே
சால மூலத் தவியா கிருதனென்
றோல மாமறை யெங்கணு மோதுமே.

ஈசுரன் தூலசரீரத்துடனேகூடி சாக்கிராவத்தையைப் பொருந்தும்போது வைசுவானரன். வைசுவானரனுவது சர்வ நராபிமானி, அதாவது உலகத்திலுள்ள எல்லா நரர்களிடத்தும் நானென அபிமானிப்பவன்; இந்த இருவகைக்கும் அதிஷ்டான சைதன்யம் பிரமா.

சூட்சும சரீரத்துடனே கூடி சொப்பனுவஸ்தையை பொருந்தும்போது சூத்திராத்துமா. அதாவது முத்திலுள் சூத்திரம் போன்று ஸமஸ்தப் பிரபஞ்சத்திலும் அநுசூதமா யிருப்பதினுலே சூத்திராத்மாவென்றும் கிரியா சக்தியுடைமையின் பிராணன்என்றும் கூறுகின்றன. இந்த இருவகைக்கும் அதிஷ்டான் சைதன்யம் விஷ்ணு (சூத்திரம்-கயிறு.)

காரணசரீரத்துடனே கூடி சுழுத்தி யவஸ்தையைச் சேரும்போது அந்தரியாமி. அதாவது ஸமஸ்தப் பிராணிகளின் இருதயத்தி லிருந்து கொண்டு ஸமஸ்த பிராணிகளின் கர்மப்பிரேரகத் தனமையா யிருப்பவன். இந்தஇருவகைக்கு மதிஷ்டான சைதன்யம் ருத்திரன். சீவன் தன் மூன்றவஸ்தையிலுந் தன் மூன்று சரீரமாயிருக்கிற இருபத்தேழு தத்துவங்களுடனும் நானென்று கலந்து நின்றாற் போல ஈஸ்வரனுந் தான் மூன்றவஸ்தையிலுந் தன் மூன்று சரீரமாயிருக்கின்ற முப்பத்திரண்டு தத்துவங்களுடனுங் கலந்து நிற்பன்.

கவி.

37. வந்த சாக்கிரத்தில்வைசு வானரன்
தொந்த சொற்பனத் திற்சூத்தி ராத்துமா
அந்த மூன்றுறி லந்தரி யாமியாம்
விந்த சேதனம் விண்டிறை ருத்திரன்.

## ஜீவசேதன முதலியவற்றின் வியாபகத்தைக் கூறல்.

சிதாபாசன் தன்சரீரமாத்திரமே கலந்துநிற்பன். ஈஸ்வரன் தன்னுடைய சரீரமாகிய சகல சரீரங்களோடுங் கலந்து நிற்பன். இந்த இருவகைக்கும் சாக்ஷியாகிய பிரமம் சகல சரீரத்திலும் சகல பிரபஞ்சத்திலும் நிறைந்து எல்லையற்றிருக்கும்.

கவி.

38. ஆகையினுற் ஜீவசிதா பாசன்றன் னுக
மதிலேதான் கலந்துநிற்ப னீசுரனு கமதாம்
ஒகைபெறு சகலசரீ ரங்களினுஞ் சகல
வுலகினுமே கலந்துநிற்ப னிவ்வுபய வகைக்கும்
வாகைபெறு சாக்ஷியதாம் பிரமமதுஞ் சகல
மானசரீ ரங்களினு மன்னுபிர பஞ்சத்
தேகையிலா தேநிறைந்தீ ரைஞ்சுதிசை தனிலு
மெல்லைகடந்திருக்குமென வெண்ணி டுகதெரிந்தே.

## தத்துவ விவகாரங்களைக் கூறல்.

ஜீவனுக்குதூலசரீர வியவகாரத்திற்கு சட்கோசதத்துவம் 6. சூட்சும சரீர தத்துவம் 20. ஜீவன் ஈசுரன் அவித்தை, வித்தை பிரம்மம் 5. ஆ 31.

கவி.

39. மன்னுஜீ வனுக்குத் தூல மகிழ்விவ கார தத்துவம்
அன்னமாங் கோச மாறோ டைகான்கு சூட்சு மந்தான்
இன்னமுஞ் ஜீவனீசனிசைந்திடு மவித்தை வித்தை
நன்னய பிரமத்தோடு நவிலுவர் முப்பத் தொன்றே.

ஜீவனுக்கு சூட்சும சரீர வியவகாரத்திற்கு சூட்சும சரீரதத்துவம் 20. அவித்தை வித்தை சிவன் ஈசுரன் பிரமம் 5 ஆ-25.

கவி.

40. சொல்லுசூட் சுமசரீரத் துயிர்விவ கார தத்வம்
புல்லிய சூக்குமந்தான் புகலுநா லைந்தி னோடு
வல்லதோர் சிவனீசன் மருவிய வவித்தை வித்தை
நல்லதாம் பிரமத் தோடு நவிலுவ திருபத் தைந்தாய்.

ஜீவனுக்கு காரண சரீரவியவகாரத்திற்கு காரணசரீர தத்துவம் 2. ஜீவன், ஈசுரன், பிரமம் 3. ஆ 5. ஜீவவிவகாரத்துக்கு சிவன் ஈசுரன் பிரம்மம்-3. சாக்ஷிவிவகாரத்துக்கு சாக்ஷி.

கவி.

41. மேவுகா ரணசரீர விவகார தத்து வந்தான்
சிவனீச் சுரன வித்தை திகள்வித்தை பிரமமைந்தாய்
ஏவுசீவனுக்கோ சீவ னீசனற் பிரம மூனறும்
ஆவதோர் சாக்ஷிக் குற்ற தாகிய பிரம மொன்றே.

ஈசுரனுக்கு தூலசரீர வியவகாரத்திற்கு சமட்டி தூல சரீரதத்துவம் 6. சமட்டி சூட்சும சரீரதத்துவம் 20-சமட்டி சீவன் அவித்தை 2 ஈசுரன் வித்தை பிரமம் 3. தூல பூதம் 5. ஆ 36.

கவி.

42. ஈசுரன் தனக்குத் தூலத் திசைவிவ கார மொத்தம்
பேசன மயந்தா ஹறு பிறங்குசுக் குமகா லேந்தோ
டீசுரன் ஜீவன் வித்தை யேற்றதோ ரவித்தை சாக்ஷி
ஆசிலேம் பூதஞ் சேர வறைகுவர் முப்பத் தாறே.

சூட்சும சரீர வியவகாரத்திற்கு சமட்டி சூட்சும சரீர தத்துவம் 20-சமட்டி சீவன். அவித்தை 2-சூட்சும பூதம் 5 ஈசுரன் வித்தை பிரமம் 3-ஆ தத்துவம் 30.

கவி.

43. தொடர்தரு மீசன் சூட்சத் துளவிவ கார மொத்தம்
அடர்தரு சூட்ச நாலேந் தாமிதோ டீசன் சீவன்
படர்தரு மவித்தை மாயை பகர்சூக்ம பூத மைந்தோ
டுடனுறை பிரமஞ் சேரவோதுவ ராறைந் தென்றே.

காரண சரீரவிவகாரத்திற்கு. ஈசுரன் வித்தை பிரமம் 3.

ஈசுர விவகாரத்திற்கு. ஈசுரன் பிரமம் 2.

பிரம்ம விவகாரத்திற்கு பிரமம் 1.

கவி.

44. தங்குகா ரணசரீரத் தகைவிவ கார தத்வம்
பொங்கிய வீசன் மாயை பொருந்திய பிரம மூன்றும்
தங்குமா மீச னுக்கீச்சுரன்பிர மம்மிரண்டே
சங்கையில் பிரமத் திற்குச்சாற்றிய சாக்ஷி யொன்றே.

இந்திரிய விவகாரத் திற்குஇந்திரியங்க ளெல்லாஞ் சேர்ந்து 1-சட்கோச தத்துவம் 6-அந்தக்கரணம் 5-வாயு 5-ஜீவன். ஈசுரன் அவித்தை வித்தை பிரமம் 5-ஆக-22.

கவி.

45. மகிழுமிந் திரியத் துக்கு வருவிவ கார தத்வம்
திகழுமிந் திரிய மொன்று நேருசட் கோச மாறும்
புகலுழந்து கரண மைந்தாய் புகல்வாயு சீவனீசன்
திகழ்வித்தை யவித்தை சாக்ஷி சேரிரு பத்தி ரண்டே.

மனோராச்சிய விவகாரத்திற்கு அந்தக்கரணம் 5-சீவன் ஈசுரன் அவித்தை வித்தை பிரமம்-5 ஆக-10.

46. அடர்மனோ ராச்சி யத்துக் கறைவிவ கார தத்வம்
படரந்தக் கரண மைந்து பகர்சீவ னீசன் வித்தை

இடருறு மவித்தை சாக்ஷி யிசையவே யீரைந் தாகும்
தொடருந்தத் துவங்க ளுக்காந் தோற்றமு நிலையுமீதே

## தத்துவவுற்பத்தி யொடுக்கங்கூறல்.

முப்பத்தைந்து தத்துவங்களும் எப்படி முப்பத்தாறுந் தத்துவமாகிய பிரமத்தினின்று முண்டாயிற்றோ அப்படியே ஒடுங்குகிறது-இப்படி யறிந்து தேகாதி பிரபஞ்சக் கவலை கெட்டிருப்பவனே ஜீவன் முத்தன்.

க வி.

47. உதித்ததத் துவங்களெல்லா மொடுங்கிடு வழியே தென்னில், மதித்தநற் பிரமந் தன்னில் வந்ததெப் படியோ வந்த, விதத்தினி லொன்றி லொன்றாய் விழுங்கிடுங் கடைசியாக, கதித்திடும் பிரமந் தானுய்க் கண்டவர் சீவன்முத்தர்.

## முப்பத்தாறு தத்துவங்களுக்கு விபரம்.

பூதம் 5-தூலசரீர தத்துவம் 6-சூட்சும சரீரதத்துவம் 20-மாயை அவித்தை 2 ஈசுரன் ஜீவன்-2 பிரமம். ஆ 36.

க வி.

48. தத்துவ விவரந் தானே தயங்கிய பூத மைந்து
சுத்திய தூல மாறு நாலைந்து சூட்சு மந்தான்
வித்தக மாயா வித்தை விளங்கிய ஜீவ னீசன்
நித்திய பிரமத் தோடு நிகழ்த்துவர் முப்பத் தாறே.

இந்த தத்துவம் முப்பத்தாறில் பொதுவாக அனுபவிப்பது எட்டு, தனித்தனி அனுபவிப்பது இருபத்தெட்டு, ஆக முப்பத்தாறு.

கவி.

49. சாற்றிய சீவருக்கு சமுதாய தத்து வந்தான்
போற்றிய பூத மைந்து பொருந்திய மாயை யீதிற்
றேற்றிய வீச னோடு தாபரப் பிரம மெட்டே
மாற்றிய விருபத் தெட்டும் வழங்கிடும் பிருதக்காக.

அதாவது பிருதிவி தத்துவ மொன்றிறக்கில் யாருக்கும் ஆதாரமில்லை, மழை மறுக்கில் ஜலமில்லை, தேயு இல்லாதிருந்தால் பாகமில்லை, வாயுவில்லா விடில் வாடை (வடகாற்று) தென்றல் (தென்காற்று) உசுவாச நிசுவாசமில்லை, ஆகாசமிறக்கில் இடமில்லை மாயை யிறக்கில் சமயமில்லை, மாயாப் பிரதி பிம்ப மிறக்கில் தெய்வமில்லை, பிரமமில்லாவிடில் அறிவில்லை, ஆகையால்இந்த எட்டும் எல்லாருக்கும் சமுதாயமாம்.

கவி.

குளகம்.

50. அறிவறிற் பிரம மில்லை யைம்பூத மாயை யீசன்
பிறிவிதிற் றரையா தாரம் பெய்சல பான மங்கி
செறியடல் வாயு மூச்சுத் திரிதலா காய மாயை
மறிதரு சமய மீசன் மதங்களின் றெய்வ மாமால்.

51. இந்தவே ழில்லை யாகி லீசுஷுமைமுதல் யாருக்குந்
தொந்தமாம பயனுமில்லை தொடரிவ்வேழ்காரியத்தா
லந்தணன் றெழி லகோந்து மரியவ தாரம் பத்தும்
வந்ததோ ரணைத்தாமதத்தால வழுத்துவாரியமென்றே

பிரதக்காவது:—ஒருவனுக்கு தூலசரீரமிறக்கில் யாவருக்கும் தூலசரீர மிறவாதபடியினுலும் சூட்சும சரீரத்தில் ஒருவனுக்கு அங்கவைகல்யம் வந்தால் யாவருக்கும் வாராதபடியினுலும் முத்தரா யிருக்கின்ற சுகர்வாமதேவர் முதலான பேர்களுக்கு அவித்தையுஞ் ஜீவனு மிறந்து போயிருக்க, மற்றவருக்கெல்லா மவித்தையுஞ் சீவனு மிறவாதபடியினுலும் இந்த 28 தத்துவங்களும் ஒவ்வொருவனுக்கும் பிரதக் கென்பதிற் சந்தேக மில்லை

பிரதக்கு-வெவ்வேறு || அங்கவைகல்யம்-அவயவக்குறைவு.

கவி.

52. ஒருவனுக்குகே தூலவுட லிறந்திடினு மொருவர்க்
கொழியாதா லுஞ்சூக்க வுடலினுக்கோர் குறைவு
மருவினுமற் றெருவனுக்கே மருவாதால் வாம
தேவருடன் சுகராதி மதிமுத்தர்க் கெல்லாம்
இருவிலத்தி லவித்தையுஞ்ஜீ வனுமிறந்தே யிருக்க
வேனையருக் கிறவாத தாலிருபத் தெட்டாம்
அருமைபெறு தத்துவங்க ளவனவனுக் கனிய
மென வறிக வையமிலா தறிவுடையோர் தாமே.

இனி இந்தத் தத்துவம் முப்பத்தாறில் எப்போதும் தானுகக்காணப்படுகிற தத்துவம் 1. எப்போதுந் தனக்கன்னியமாகக் காணப்படுகிற தத்துவம் 7. தானுகவும் தனக்கன்னியமாகவும் அனுபவிக்கப் படுகிற தத்துவம் 28

கவி.

53. சொன்னதோர் தத்து வந்தான் தொடர்முப்பத் தாறி வற்றில், தன்னிற்று ஞகவென்றுந் தயங்குந்தத் துவந்தா னென்று, அன்னிய மாகவெங்கு மவிருந்தத் துவங்களேழு, பின்னுநா லேழுந் தானுய் பிறவுமாய்த் தோற்று மன்றே.

அஃதெங்ஙனமெனின்; அவஸ்தாத்திரய சாக்ஷியாகிய பிரமசைதன்னியம் எல்லா அவஸ்தைகளிலும் தானுக விளங்குகையி னுலும் மற்றத் தத்துவங்கள்போல அன்னியமாக விளங்காமையினுலும் பிரமசைதன்னிய மொன்றுமே தானுக விளங்குகிறது.

கவி.

54. தத்துவ நாலொன்பானிற் றுனுக விளங்கு மொன்று
நத்துமூன் றவத்தை கட்கு நற்சாட்சி யாகியைந்தேண்
மித்தையாந் தத்து வத்தில் விலட்சண மாகியோங்குஞ்
சுத்தமாம் பிரமமென்று சொல்லுவர் தூயோர்மாதோ

பஞ்சபூதம் மாயை மாயா பிரதிபிம்பர் இவ்வேழின் தொழில்கள் வெவ்வேறுனதினுலும் தனக்கந்நியம. பிராமணை க்ஷத்திரியன் முதல்சந்நியாசி யீறுக உள்ள ஜீவர்கள் தூலசரீரத்தைத் தானுகவும்,

என் சரீரம் பருத்தது என்பது முதல் என்சரீரம் பிறந்து இத்தனை நாளாயிற்றென்பதீருக புறம்புபட்டுச்சொலவதாலும் தனக்கு அந்நியமாகவும்,

கவி.

55. மன்னியவெண் தத்துவங்க ணீங்க மற்ற
மகிழ் நாலேழ் தத்துவங்க ளவற்றை ஜீவர்
தன்னதா யன்னியமாய்ச் சொல்வர் தூல
சரீரமாந் தத்துவங்க ளாறை யுந்தான்
துன்னுபருத் தேனிளைத்தே னெனத்தாமாயுந்
தொடர் தேகம் பருத்ததிளைத் ததுவே யென்றும்
அன்னியமாயும் பகர்வரென்று வேத
மாய்ந் தறிந்த மேலவர்க ளறைவர் மாதே.

நான்கண்டேன் கேட்டேனென்பது முதல் இந்தப்பஞ்சத்துக்கு ஜீவித்தேனென்ப திருகதாஞக விளங்குகிற சூட்சும சரீரதத்துவம் 20-ம் மற்றொரு வேளையிலே என்கண் என்காது என்பதுமுதல் என்பிராணன் ஈருக வேருக விளங்குகிறபடியினுலும்.

நானறியேன் அறிவேனென்று தாஞக விளங்குகின்ற அஞ்ஞானமும் சிதாபாசனும் மற்றொருவேளையிலே தனக்குபபுறம்புபட்டு என்னஞ்ஞானம் என்ஜீவன் என்று வேருக விளங்குகிறபடியினுலும் இந்த 28-தத்துவங்களும் தாஞகவும் தனக்கன்னியமாகவும விளங்குகிறதுவேயாம்.

கவி.

56. சூக்குமதத் துவங்களு லேந்தும் கேட்டேன்
றேட்டேனின் றேனயர்ந்தேன முகர்ந்தே னென்றுர்
தாக்குகின்ற மற்றவையு மிதுவே போல
தாமாயுங் கேட்டது தொட்டதாதி யாக

நோக்கவே யன்னியமா யும்ப கர்ந்தது
நகல்ஜீவன வித்தைகண்டேன் காணே னென்று
ஆக்கியவென் னஞ்ஞானஞ் சீவனென்றே
யுரைகுவர் தாமாயுமன் னியமாய்த் தானே.

இப்படிச் சொன்ன குருவைப் பார்த்து சீஷன் சங்கிக்கிற தாவது:—

இந்த 28-தத்துவமுந் தானுனல் சாக்ஷியைப் போல ஒரு தன்மையாகத் தோற்றவேண்டும். பஞ்ச பூதத்தைப் போல தனக்கன்னியமாகக் காணக் கணக்கில்லை. தனக்கன்னியமேயானல் எப்போதும் புறம்பு பட்டே யிருக்கவேண்டுமே யல்லாமல் தானுக வழங்கக் கணக்கில்லை. அவை தானுமாய் தனக் கன்னியமுமா யிருக்கு மென்பது இருட்டாதித்த னென்றுப் போலும் வெள்ளாள தீக்ஷிதனென்றுற்போலும் விருத்தமா மென்கின்ற சங்கைக்கு குருசொல்லுகிறுர். பரமார்த்தமாகத் தானென்கின்றதொரு வகையும் அத்தியாசத்தினலே தானென்கிற தொரு வகையும் ஆக இருவகையுமுண்டு.

சாக்ஷி சைதன்னியத்தைத் தானென்கிறது பரமார்த்த மல்லாமல் உபசாரமல்ல.

தனக்கன்னியமா யிருக்கின்ற இருபத் தெட்டையும் தானென்பது சட்டையைக் கள்வ னென்றுற் போலும் பழுதையைப் பாம்பென்றுற் போலும புத்திர தாராதிகளை தானென்றுற்போலும் மயக்கமேயல்லாமல் உண்மையல்ல,

ஆகையினுல் அஞ்ஞான காலங் தொடங்கி தானல்ல வென்று காணப்பட்ட தத்துவம் 7-இப்படிப்பட்ட விவேகம் பண்ணின பிற்பாடு தானல்ல வென்று காணப்பட்ட தத்துவம் 28.

ஆக இந்த 35 - தத்துவத்தையுங் காண்கின்ற 36-ம் தத்துவமாகிய பேறறிவே தானென் றுணர்ந்து (தனதெதார்த்த வடிவமென் றுள்ளவாறு) நிர்விகர்ப்பசமாதி வாயிலாகவுணர்ந்து அதுதானே பிரமமென்று தெளிந்தவனே ஜீவன் முத்தன்.

கவி.

57. அன்னியதத்து வங்களு லேழுந் தானு ய
 றைவதுதான் கட்டையினைக் கள்ள னென்றும்
உன்னியதோர் பழுததனைப் பாம்பே யென்று
 முறுபுத்ர தாராதி தானே யென்றுஞ்
சொன்னதுபோன் மயக்கமலா துண்மை யில்லை
 தொடரேழுஞ் சேர்த்தையேழ் தத்து வத்தை
முன்னுரைத்த குறிகுணங்க ளுடனே கண்ட
 மூதறிவே தானெனக்கண் டறிந்தோன் முத்தன்.

பிரமமே தானென்றும் 35 - தத்துவங்களும் அந்நியமென்றும் பகுத்தறியாத அஞ்ஞானிகள் அகங்கார கிரந்தியினுல்புத்திரதாராதிகள் தவிக்கின்றதை தாம்தவிக்கிறேம் என்கின்ற மூடகரம் போல 28-னுடைய தொழில் களைபுங்

தன் தொழிலென்று மயங்குகிற படியால் 28-னுஞ் செய்யப்பட்ட புண்ணிய பாவங்களினால் கட்டுப்பட்டு அந்தக் கருமத்தின் படியே ஜனனமரணாதி சம்சாரத்திலே மயங்குவன்.

கவி.

58. இப்படிக் கண்டறி பிரமந்தானே யென்று
மிசைந்த முப்பத் தைந்துந் தனக்கன்ய மென்றுந்
துப்பரவாய்ப் பிரித்தறிய விவேக மில்லான்
றொடர்கின்ற வகங்காரக் கிரந்தி யாலே
செப்பிருபத் தெட்டிலார்ச்சிக்கப் பட்ட
திகளபுண்ய பாவமதிற் கட்டுப் பட்டு
தப்பிலதன் கன்மத்தாற் பிறப்பி றப்பாஞ்
சமுசாரத் தாழ்ந்தவனுப்த் தயங்கு வானே.

பிரமமே தானென்றும் 35-ம் தானல்லவென்றுந் தெளிந்தவன் அகங்கார கிரந்தி யற்றதினால் 28-னுடைய தொழில்களை நான் செய்யவில்லை என்றும் 28-ம புசிக்கினறதை நான் புசிக்கவில்லை என்றுந் திடப்படத்தேறி மயக்கமற்றிருக்கின்ற படியினால் 28-னுஞ் செய்யப்பட்ட புண்ணிய பாவங்களினின்றும விடுபட்டு கர்ம மில்லாதபடியால் ஜனனமரணாதி சம்சாரமில்லாமல் முத்தனாய்ப் பிரமமாகிறான்.

கவி.

59. ஏகமாம் பிரமமது தானே என்று
மிசைந்த முப்பத் தைந்துந்தனக் கன்னிய மென்றுஞ்
சோகமறத் தெளியறிஞ னகங்கா ரத்தின்
றொடர்கிரந்தி யற்றதனா லிருபத் தெட்டின்

சேகரமாந் தொழில்களெனக் கில்லை யென்றுந்
திடப்படவே தெரிமயக் கற்ற தாலே
ஆகியபுண் ணியபாவ கரும நீங்கி
அனுதிமுத்த பிரமமா யிருப்பா னன்றே.

அவஸ்தாத்திரய சாட்சியாவது:—கூடியுங் கூடாமலு மிருப்பது. அவஸ்தா திரயங்களை விட்டு நீங்காம லிருக்கிற படியால் கூடியும், அவஸ்தா விகாரங்களை தானடையாத படியால் கூடாமலு மிருப்பதே சாக்ஷி.

மயக்கமாவது:—பிராந்தி ஐந்து 1. சகத்து சத்தியமெனல் 2. சரீரத்தை நானெனல் 3. கர்த்தா போக்தா வெனல் 4. ஜீவன்வேறு, ஈசுரன் வேறெனல் 5. தான் ஞான சொரூபியா யிருந்தும் இல்லையெனல், இவ்வைந்தும் பஞ்சப் பிராந்தி.

கவி.

60. பந்தமுறுஞ் சகத்துச்சத் தியமே யென்றும்
பகர்கின்ற சரீரத்தை நானே யென்றும்
சந்ததமும் யானகர்த்தா போக்தா வென்றுந்
தான்வேறீச் சுரன்வேறே தானு மென்றும்
சுந்தரமாந் தான்ஞான சொரூபமாகத்
தோன்றியஃ தில்லையெனச் சொல்லா நின்ற
இந்தவைந் தானபஞ்சப் பிராந்தி நீங்கி
யிருப்பவனே ஜீவன்முத்த னென்ன லாமே.

## ஜீவன்முத்தன் நாமங்கள்.

ஜீவன் முத்தன், திடப்பிரக்ஞன், அதிவர்ணாச் சிரமி, குணாதீதன், பகவத்பத்தன், பிராமணன். என ஆறுபெயருண்டு.

### கவி.

இன்னவன்பேர் ஜீவன்முத்தன் றிடப்பி ரக்ஞன்
இசைந்திட்ட வதிவர்ணாச் சிரமி யோடு
சொன்னகுணா தீதனுயர் பகவற் பத்தன்
றாயபிரா மணனென்று சொல்லு மிந்த
நன்னயமா கியவாறு நாமந் தன்னை
நவில்கின்ற வுபநிடத நூல்க ளெல்லாம்
உன்னிமுறை யிடுகின்ற தென்று மேலோ
ரோதினர் மாட்சிமையோ டுகந்து தானே.

## ஜீவன் முத்தன் லக்ஷணம்.

ஜீவசிருஷ்டியும் ஈஸ்வரசிருஷ்டியு முள்ள ஜாக்கிரத்தில் ஜீவசிருஷ்டி யொழிந்தவனே ஜீவன்முத்தன்.

ஜீவசிருஷ்டி காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாச்சரியம் ஆகிய ஆறு.

ஈஸ்வரசிருஷ்டி ஸ்தூலசரீரம் சூக்கும சரீரம் முதலிய சாக்கிரப் பிரபஞ்ச விவகாரம்

(உ-ம்.) ஏரிக்கரை யேறினேன், இரண்டு பாதை சுற்றேன், காக்கைக்கண் பாம்புக்கண், யானைத்துதிக்கை,

மலைமே லேறினேன், பூனைக்கண், உச்சிப்பானு, யாழ்ப் பாணக் கப்பலோட்டுபவன், இவற்றுள் கரையில்செல்பவ னுக்கு உள்ளும்புறமு முள்ளவைகள் தெரிவதுபோலும்.

இரண்டு பாஷை கற்றவனுக்கு ஒவ்வொரு பாஷை கற்ற விருவரும் சொல்லும் விஷயம் தெரிவது போலும்.

காக்கைக்கண் ஒருகண் ணொளியினல் இரண்டுபக்கமு மறிதல் போலவும்

பாம்புக்கண் ஏககாலத்தில் ரூபத்தையும் சப்தத்தை யும் அறிதல் போலவும்.

யானைத்துதிக்கை இடுதலேற்றலும் கந்தமு மறிதல் போலவும்.

மலையேறினவன் மலையிலுள்ள பொருள்களையும்பூமியி லுள்ள பொருள்களையு மறிவது போலவும்.

பூனைக்கண் இரவும்பகலுந் தெரிதல் போலவும்.

உச்சிப்பானு உதயகிரியையும் அஸ்த கிரியையும் அறி தல் போலவும்.

யாழ்பாணத்துக்கு கப்பலில் செல்பவனுக்கு இருகரை யுந்தோற்றல் போலவும்.

ஜீவன் முத்தன் பிரபஞ்சத்தையும் அதன் விருத்தி களையு மறிந்துகொண்டும் பிரமாகார சிந்தனையாய் சிரவண மனன நிதித்தியாசனத்தி லிருப்பவனே.

சிரவணமென்பது:—நான்கு வேதங்களையும் ஆறுலிங்கத்தினாலும் அர்த்தவிசாரம்செய்து பிரமதாத்பரியம்காணுவதே.

இன்னும் சர்வ சம்சயத்தினையும் நிவர்த்திப்பதுவாம்.

அந்த வுத்தியினாலே அனவரதம் சிந்தித்தலேமனனம்

இன்னும் மனத்தின் சம்பாவனையி (சம்சயத்தி) னை நிவர்த்திப்பதுவாம்.

இருவகைக் கேள்வியு மொத்து மனது ஏகாக்கிரமாவதே நிதித்தியாசனம்.

இன்னும் விபரீத பாவனையினை நிவர்த்திப்பது மாம். இன்னும் அனாத்மாகார விருத்தி நீங்கி ஆத்மாகார விருத்தி தைலதாரைபோல் இடைவிடா திருப்பதுவாம்.

தியானிப்பவனையும் தியானத்தையு மிழந்து தியானிக்கப்படுகிற வஸ்துவாயிருக்கிற சித்தமே சமாதி.

ஆறுலிங்கமாவது; உபக்கிரமம் உபசங்காரம் இரண்டும் ஒன்று. அப்பியாசம் 2. அபூர்வதை 3. பலம் 4. அர்த்தவாதம் 5. உபபத்தி 6. இவற்றுள் உபக்கிரமம் பிரபஞ்சவுற்பத்தி. உபசங்காரம். பிரபஞ்சமொடுங்குதல். இவ்விரண்டின் மூலமாகிய பிரமமே நாமென்பது. அப்பியாசம் பிரமாணங்களுக் கெல்லாம் எட்டாததே. அபூர்வதை. அனர்த்த நிவர்த்தி ஆனந்த பிராப்தியே பலம்.

ஈசுரனுக்கு பஞ்சகிருத்தியம் கற்பித்த லர்த்தவாதம்.

மண்ணைத்தவிர, கடாதிகளில்லை யென்பது போலும் பொன்னைத்தவிர பூஷணாதிகளில்லை யென்பதுபோலும்பிர மத்தைத் தவிர பிரபஞ்சமில்லை யென்பது உபபத்தி,

அர்த்தவிசாரம்:—உள்ளபடி யறிவது. அதாவது மகா வாக்கிய சிரவணம்.

மகாவாக்கியமாவது (38.)

1. பிரக்ஞானம். ஆனந்தம். பிரமம்,
2. அகம் பிரம்மா அஸ்மி,
3. தத்துவம் அசி.
4. அயம் ஆத்மாபிரமம். ஆகமகாவாக்கியம் 4. இவற்றுள்.

1. பிரக்ஞானம் ஆனந்தம் பிரமம்:—என்னும் மஹா வாக்கியத்தில் பிரக்ஞான பதத்திற்கு ஜீவனும் பிரம பதத்திற்கு, ஈஸ்வரனும்,வாச்சியம்.இவ்விரண்டு பதங்களின் சேதனபாகத்தின் இலக்ஷணை ஆனந்தம்.

2. அகம் பிரம்மா அஸ்மி:—யென்னும் மகாவாக்கியத்தில் அகம்பதத்திற்கு ஜீவனும், பிரமம பதத்திற்கு ஈஸ்வரனும், வாச்சியம். இவ்விரண்டு பதங்களின் சேதன பாகத்தின் இலக்ஷணை அஸ்மி.

3. தத்தோமசி:— என்னும் மஹா வாக்கி யத்தில் துவம்பதத்திற்கு ஜீவனும், தத்பதத்துக்கு ஈசுரனும், வாச்

சியம். இவ்விரண்டு பதங்களின் சேதன பாகத்தின் இலக்ஷணை அசி.

4. அயம். ஆத்மா பிரமம் என்னும் மகாவாக்கியத்தில் ஆத்மபதத்திற்கு ஜீவனும், பிரமம பதத்திற்கு ஈசுரனும், வாச்சியம். இவ்விரண்டு பதங்களின் சேதன பாகத்தின் இலக்ஷணை அயம்.

அதாவது இந்த ஆத்துமாவே பிரமமென்பது. இஃது முறையே சிரவண மனன நிதித்தியாசன சமாதியாம்.

1. தற்போத ஞானம் 2. சாக்ஷிஞானம் 3. சிவஞானம் 4. பிரமஞானம். துவம்பதம் தற்பதம் அசிபதம் நிசபதம்.

இன்னும் பஞ்சப் பிரயோசனமாவது. ஞானரக்ஷை, தபசு, விசமவாத மில்லாமை, துக்க நிவர்த்தி சுகாவிற்பாவம்.

ஞானரக்ஷை யாவது:-பிரமானு சந்தானத்தில் மனம் கரைதல். அப்படிக் கரைந்த மனது ஏகாக்கிரமாக நிற்றலே தபசு.

ஆபால (உயர்ந்தவர் முதல் தாழ்ந்தவர் வரையுள்ள) பண்டிதரெல்லாம் வந்து வணங்குதலே விஷம் வாதமில்லாமை. பஞ்சக்கிலேசம் நீங்குதலே துக்கவிர்த்தி. ஆனந்த முண்டாதலே சுகாவிற்பாவம் இந்தப் பஞ்சப் பிரயோசன முடையவனே ஜீவன் முத்தன்.

கலி.

62. பொங்கியதோர் ஞானரக்ஷை தபசினோடு
புகல்விஷம் வாதமதி லாமை யுந்தான்
தாங்கியதோர் துக்கத்தி னிவர்த்தி மேலாய்ச்
சாற்றியசுற் சுகாவிற்பா வத்தி னோடு
துங்கமிகு மைந்துபிர யோச னத்தைத்
தொடர்ந்திதனின் சுகமதனைக் கண்டு நின்றோர்
எங்குநிறை கின்றபரி பூர ணத்தை
யெய்திய நற்சீவனமுத்த ரென்ன லாமே.

இன்னும் பஞ்சக்கிலேசமாவது; அவித்தை. அசிமிதை இராகம், துவேசம், அபினிவேசமென 5.

இவற்றுள், அவித்தை யாவது; ஆத்மா காரத்தை அனாத்மாகார மாக்குதல்.

அசிமிதை யென்பது; புத்தி (பிரகிருதி) யே ஆத்மா வென்றும் ஆத்மா ஏகனனேக னென்றும் சாங்கிய மதத்தின் கோட்பாடு.

இராகம்—பற்றுதல் (இச்சை.)

துவேசம்—விடுதல் (கோபம்.)

அபினி வேசமாவது-மரணபயம்-இச்சை.

இந்த ஐந்து கிலேசமும் விடுபட்டு (நீங்கி) மேலே சொல்லிய பஞ்சப் பிரயோசன முடையவனே ஜீவன் முத்தன்.

கவி.

63. அவித்தை ராகத் துவேச மசிமிதை
பவித்த தேக மரண பயமெனுங்
குவித்த வைந்து சிந்தாகுல மானவை
நிவிர்த்தி யானவனே முத்த னேமியில்.

ஜீவன் முத்தியாவது; கர்த்துருத்துவ, போக்த் துருத்துவம் நீங்குவதே.

இன்னும் பிரபஞ்சப் பிரதீதியு (தோற்றத்து) டனே அத்துவித (பிரம) சொரூபமா யிருப்பதே.

திடப்பிரஞ்ஞன்:—சற்குருவி னனுக்கிரகத்தால் ஜீவப் பிரமங்களின் ஒருமையை யறிந்து சமாதி கூடி கலங்கா தறிவாகாரமா யிருப்பவன்.

அதிவர்ணச்சிரமி:—நான்கு வருணங்களையும் நான்கு ஆச்சிரமங்களையுங் கடந்து இவைகள் தூலதேக கற்பனை யென்று தள்ளியதற்கு சாட்சியாக விருக்கிற வறிவாகார மா யிருப்பவன்.

குணாதீதன்:—திரிகுணங்களின் றன்மைகளைக் கடந்து அவஸ்தாத்திரயங்களுக்கு விலக்ஷணமா யிருப்பவன்.

பகவத்பத்தன்:—சகல பிரபஞ்ச வஸ்துக்களிலும் சம மாய் பிரமத்தைப் பார்க்கின்ற தியான யோக மனதை யுடைய யோகியானவன்; தான் அவ்வவ்வஸ்துக் களிலெல் லா மிருப்பதாகவும் பார்ப்பவன்.

பிராமணன்:—ஞான யோகத்தால் பிரமத்தை யறிந்து அவ்வடிவமாக நிலைத்தவன்.

விதேகமுத்தனாவது:—நிற்விகர்ப்ப சமாதியி லிருப்பவன். விதேகமுத்தியாவது, பிரபஞ்சப் பிரதீதியின்றி யத்துவித சொரூபமாயிருக்கிற ஜீவன் முத்தியின் பரிபாகமே விதேகமுத்தி.

## முத்தரிருவகை.

வராகோபநிஷத்து நாலாமத்தியாயத்தில் சுகர்முத்தர் வாமதேவர்முத்தர் அவர்களைத்தவிர முத்தி யடைந்தவர்களில்லை (இவர்களுடைய மார்க்கத்தைத் தவிரவேறு மார்க்கமில்லை யென்பது,) எந்தலோகத்தில் சுகர் மார்க்கத்தை எந்த தைரிய சாலிக ளனுபவிக்கிறார்களோ அவர்கள்சத்தியோ (இந்தத்தேகம் போனவுடனே) முத்தராகின்றனர். இந்தலோகத்தில் வாமதேவ மார்க்கத்தை எப்போது மனுசரிக்கின்றவர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பை யடைந்து சத்துவ குணத்தோடு கூடி யோக மார்க்கத்தினாலேயும் சாங்கியம் (ஞானம்) களினாலேயும் கருமங்களினாலேயும் கிரமமுத்தர்களாகின்றனர். சுகர்மார்க்கம் வாமதேவமார்க்கம் என்று இரண்டுவகை தேவனால் ஏற்படுத்தப் பட்டன. சுகர்மார்க்கமானது பட்சிமார்க்கம் (குறிப்பிட்ட விடத்துக்கு பட்சிகள் பறப்பதுபோல இந்தத் தேசம்போனவுடன் முத்தியடைவது) என்றும், வாமதேவமார்க்கமானது எறும்புமார்க்கம் (குறிப்பிட்ட விடத்துக்கு எறும்பு

போக வேண்டுமானால் கிரமக்கிரமமா யூர்ந்து போவது போல்) இந்ததேகத்தைத் விட்டபிறகு இதைவிட வுத்தமமான ஜென்மத்தையடைந்து பின்னு முத்தமமான ஜென்மத்தையடைந்து இப்படியே இன்னும் பலஜென்மங்களையடைந்து முடிவில் பிரமலோகஞ் சென்று பிரம்மாவுடனே முத்தியடைவர்.

விதிவாக்கியங்களி னாலாவது நிஷேத வாக்கியங்களினாலாவது மகாவாக்கிய விசேஷத்தினாலாவது தமது ஆத்மசொரூபத்தையறிந்து நிர்மலமானவர்கள் சுகர்மார்க்கத்தினாலே பரமபதத்தை (மோட்சத்தை) யடைகிறார்கள்.

இயமம்முதலிய ஆசனங்களினாலுண்டாகிய ஆயாசமாகிய அடாப்பியாசத்தினாலே அடிக்கடி அநேகதடவைகளிலுண்டான அணிமாதிசனுக் குட்பட்டவனாய் நல்ல பயனையடையாமல் மீண்டும் நல்லகுலத்திற் பிறந்து முந்திய ஜென்ம வாசனையினால் மீண்டும் யோகாப்பியாசம செய்து அநேக ஜென்ம அப்பியாசத்தினாலே வாமதேவ மார்க்கத்தினால் விஷ்ணுவினுடைய பரமபதமாகிய முத்தியையடைகிறான்.

பிரமப் பிராப்தியைக் கொடுக்கத் தக்கதாகவும் மங்களகரமான தாகவும் இந்த விரண்டு மார்க்கங்க ளிருக்கின்றன.

இவற்றிலொன்று சத்தியோ முத்தியையும் மற்றொன்று கிரமமுத்தியையுங் கொடுக்கத்தக்கன.

கலி.

64\. நந்து பந்தத்தை நாடிய சீவர்கள்
தத்துவ முப்பத் தாறையுஞ் சேரவே
பத்தி யோடு விசாரணை பண்ணியே
முத்தி யாகிய மோட்ச மடைவரே.

## விதேக கைவல்லிய மடையுங் கிரமம்.

மேல் எக்காலத்திலும் எத்தேசத்திலும் யதொரு சரீரமும் அடையாதே சச்சிதாநந்தப் பிரஹ்மசொரூபத்தி லிருப்பதே விதேக கைவல்லியம்.

அந்த விதேக கைவல்லியமடையுங் கிரமமாவது:— முமூட்சுக்கு நித்தியகர்மாநுஷ்டானத்தால் தர்மோற்பத்தி யும், தர்மோற்பத்தியால் பாபக்ஷபமும், பாபக்ஷயத்தால் சித்தசுத்தியும், சித்தசுத்தியால்சமுசார தோஷதரிசனமும், சமுசார தோஷ தரிசனத்தால் விஷய விரக்தியும், விஷய விரக்தியால் மோக்ஷா பேக்ஷயும், மோக்ஷா பேக்ஷையல் பாகிய கர்ம பரித்தியாகமும், பாகிய கர்ம பரித்தியாகத் தால் யோகாப் பியாசமும் யோகாப் பியாசத்தால் பிரத் தியகாத்மப் பிரீதியும், பிரத்தியகாத்மப்பிரீதியால்தத்துவ மசிவாக்கிய விசாரமும், தத்துவமசிவாக்கிய விசாரத்தால் அத்வைத ஞானமும் அத்வைத ஞானத்தால் அவித்தியா நாசமும், அவித்தியாநாசத்தால் துவைதப்பிராந்தி நஷ்ட மும், துவைதப்பிராந்தி நஷ்டத்தால் சுகதுக்கபரித்தியாக மும் சுகதுக்கபரித்தியாகத்தால் இராக்தத்துவேஷஹாணியும்

இராகத்துவே ஷஹானியால் விதிநிஷேத நிரஞ்சன (நீக்க)மும், விதிநிஷேதநிரஞ்சனத்தால் புண்ணிய பாபக்ஷயமும், புண்ணியபாப க்ஷயத்தால் தேகாபாவசித்தியும், தேகாபாவ சித்தியால் சர்வபாப விமோசனமும் உண்டாம். சர்வ பாபவிமோசனத்தால் சர்வோத்கிருஷ்டமான பரமஸ்தானமும் புநராவிருத்திரகிதமும் (மீட்சியின்றியதும்) சகல சாஸ்திரமுடிவாய் நாமசாதிக்கிரியா வாசனைகள்புகாததும் மனோவாக்குகளுக்கெட்டாததுமான நித்தியாநந்த சொரூபமா யிருத்தலாகிய விதேக கைவல்லியமுண்டாம். இதுவே சுருதிஆசாரியப் பிரசாதசித்தி; இதுவே சகல சாஸ்த்திரார்த்தநிர்ணயம்.

## குருஸ்துதி.

1. சங்கதானந்த ரூபாய சந்திராய மகாத்மனே
கைவல்ய கலனு கல்பதரவே குரவே நமః

2. சைசதந்யம் சாஸ்வதம் சாந்தம் வியோமாதீதம்
நிரஞ்சனம் நாதபிந்து களாதீதம் தஸ்மைஸ்ரீகுரவே நமஹா

3. எல்லா முடையான் குருவாகி யீங்கெம
தல்ல லறுத்தானென் றுந்தீபற
அவன்றொ டொழுவா மென்றுந் தீபற

4. அநேகவிதலக்ஷண விஸ்தாரத்துடனே கூடிபிரானின்ற மகாமாயாமோகத்தை என்னேரமு மெடுத்து விழுங்குகிற தேவேலையாயிருக்கின்ற ஸ்ரீசங்கராசாரிய குருமூர்த்திகளினது பாதார விந்தங்களுக்கு நமஸ்காரம்.

பொங்குரு மறிவானந்த பூரண மயமேயிங்கு
அங்குரு வாகவன்பர்க் காரண பொருளளித்து
சங்குரு தன்மைபோலத் தன்ய னுக்கிவைத்த
எங்குரு நமச்சிவாயக் கிணையடி யெந்தலைக்கே.

# நாஜீவவாதக் கட்டளையின்

## விசேடவிருத்தி யுரை.

சம்பூர்ணம்.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி, | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 15 | 7 | அகண்டாகாரவிர்த்தியின் | அகண்டாகாரவிர்த்தியின்றி |
| ,, | 21 | மகத்துவத்திலும் | மகதத்துவத்திலும் |
| 18 | 3 | தத்தாத்ராய | தத்தாத்ரய |
| ,, | 6 | நாவி | நாலி |
| 22 | 6 | பிரஹமாதம | பிரஹமாத்ம |
| 23 | 10 | பதிலுபகாரம் | பதிலபகாரம் |
| 24 | 13 | பகவ[illegible]னுக்கு | பகவானுக்கு |
| ,, | 17 | வர[illegible]க்கு | வாஞசுரனுக்கு |
| 26 | 9 | ஐந்திணைக்கருப் பொருள் | ஐந்திணைக்கரும்பொருள் |
| 27 | 22 | வைணவர்களில் | வைணவரகளால் |
| 29 | 10 | நான்குபாவ | நானகபாவ |
| ,, | 23 | துக்கக்ஷணத்தையும் | துக்கலக்ஷணத்தையும் |
| 30 | 6 | இந்நான்குசுபாப | இந்நான்கபாவ |
| 31 | 1 | ஏதைக் | ஏதெதைக் |
| ,, | 4 | ஏகமேவாத்துவிதம் | ஏகமேவாத்துவிதப் |
| 33 | 6 | தபசு | தமசு |
| 35 | 1 | போய்ந்தொளிரு | யோய்ந்தொளிரு |
| 36 | 6 | சாந்த் | சாந்த |
| 39 | 3 | ங்குவதெ | க்குவதே |
| 40 | 1 | பசுபாச | பதிபசுபாச |
| ,, | 5 | றுணர்வாம் | றுணர்வாய் |
| 40 | 18 | நரன் | நான் |

| பக்கம். | வரி. | திருத்தம். | பிழை. |
|---|---|---|---|
| 41 | 5 | தமோகுண | தமோகுண |
| 43 | 6 | சேர்ந்த | சேர்ந்து |
| 48 | 15 | பருதைப்போல | பருதையைப்போல |
| 49 | 1 | சாவய | சாவயவ |
| ,, | 5 | சாவயமு | சாவயவமு |
| ,, | 6 | நிரவய | நிரவயவ |
| ,, | 8 | நிரவயமு | நிரவயவமு |
| 50 | 7 | ஈசுரபிரதி | ஈசு[illegible]ரதி |
| 51 | 6 | அந்தக்காரண | அந்தக்கரண |
| 52 | 3 | வீயதோர் | வீயதோர் |
| ,, | 4 | மாயகறபினே | மாயகற்பனே |
| ,, | 5 | சர்வஞ்சனி | சர்வஞ்ஞனி |
| 54 | 16 | சர்வஜனனுகிய | சர்வஞ்ஞனுகிய |
| ,, | 21 | சிலாகிய | சிலாக்கிய |
| 55 | 15 | சிவப் | சிவப்பு |
| ,, | 7 | வித்தையி | வித்தையினுல் |
| 56 | 1 | மலினஜலப்பிரதி பிரம்மமாவது | மலினசலம் பிரதிபிம்பமாவது |
| ,, | 7 | கலங்களீ | கலங்கனீ |
| 57 | | கவிகுளகம் | கவி [illegible]ல் |
| ,, | 8 | திருஷ்டாந்தங்களில் | தருஷ்டாந்தங்களின |
| 58 | 12 | கருவோ | கருவே |
| ,, | 16 | கபாக்கிய | கபோக்கிய |
| 59 | 1 | மறைதல் | மறைத்தல் |
| 92 | 8 | யோக | போக |

| பக்கம் | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ,, | 22 | விட்சேபத்தி | விட்சேபசத்தி |
| 63 | 20 | சந்தது | சந்தத |
| 64 | 8 | ஒற்றிற் | ஒனறிற் |
| ,, | ,, | பேயதோ | யேயதோ |
| ,, | 10 | தூயார் | தூயோர் |
| ,, | 16 | குறைகளை | குணங்களை |
| ,, | 21 | பேக்ரகிய | போக்கிய |
| 67 | 1[illegible] | விளம[illegible]ங்கள் | விளம்சங்கள் |
| 72 | 10 | வி[illegible] | வித்திற் |
| 75 | 21 | தான் | நான் |
| 83 | 5 | சட்டசா | சட்சா |
| 84 | 15 | பாரதி | பிராதி [யே |
| ,, | 19 | மாத்திகவுண்மையே | மார்த்திகனுண்மை |
| 93 | 6 | பிரமம்மிரண்டை | பிரமரெண்டே |
| 106 | 17 | பிமம் | பிரம |
| 107 | 4 | பிமம | பிரம |
| ,, | 18 | விஷம் | விஷம |
| ,, | 19 | துக்க விர்த்தி | துக்கநிவிர்த்தி |
| 108 | 2 | விஷம் | விஷம |
| ,, | 3 | தாங்கிய | தங்கிய |
| ,, | 6 | தொடங்ர் | தொடர்ந் |
| 112 | 14 | பேக்ஷயல் | பேக்ஷயால் |

49-வது பக்கத்தில் கடைசியாக சேர்க்கவேண்டியது பின்னுபின்னமென்றால் பிராமணனுஞ்சூத்திரனும் ஒன்றென வருமானதால் பின்னு பினனமு மன்று

T. சாரதா புத்தகசாலை,

நெ 23-பாலையப்பன் தெரு, மின்ட் போஸ்டு, மதராஸ்.

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

# ஞாந இரத்நாவளி

இதில் (1) நமது பூமியே புண்ணிய பூமி, (2) * எனது குருநாதர், * (3) * வேதாந்த தத்துவம், (4) * கிழக்கும் மேற்கும், (5) * கடிதங்கள் 1-ம் பாகம், (6) * கடிதங்கள் 2-ம் பாகம், (7) * எதிரொலிகள், இவ்வேழும் உயர்ந்த பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது. ஸ்வாமிகள் படத்துடன் இரண்டு பாகங்கள் இதன் விலை ரூபா 3-

* இக்குறிப்பிடடுள்ள புத்தகங்கள் தனித்தனி விலை அணா 8

நீங்கள் கர்மயோகத்தின் இரகசியத்தை

அடையவேண்டுமோனால்,

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் கர்மயோகம்

ஒன்றே (வாசிக்கச்சிறந்தது)

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் அமெரிகாவில் செய்த உபந்நியாசங்கட்கெல்லாம முதன்மையானதும் உபநிஷத்துக்கள், பகவத் கீதை முதலான சுருதி ஸ்மிருதிகளில் கூறப்பட்ட 'கர்மயோகம்' என்ற விஷயத்தை ஸ்ரீ ஸ்வாமிகள் எட்டு உபந்நியாசங்களால்மேல் நாட்டினருக்கு ஆங்கிலத்தில் உபதேசித்தனர். இந்நூல் இதுகாறும் தமிழ் உலகத்தில் வெளி வராதது. இது ஆங்கிலத்தில் மிகப் பிரசித்திப் பெற்றுள்ளது.

உயர்ந்த பைண்டுடன் ஸ்வாமிகள் படமும் கூடியது ரூபா 1.

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் அருளிய

# தற்கால இந்தியா

[விலை பத்து அணா.]

**T.** சாரதா புத்தகசாலை,
நே. 23-பாலையப்பன் தெரு, மிண்ட் போஸ்டு, மதராஸ்.

---

## ஸ்ரீ ஸ்வாமி விவேகானந்தர் வேதாந்த இரஹஸ்யம்
(திருத்தமான 2-ம் பதிப்பு)

இச்சிறந்த வேதாந்த இரஹஸ்யம் என்ற இந்நூலை வாசிப்பவர்கள் சகலசாஸ்திரங்களையும் வாசித்தாலுண்டாகும் பயனை அடைவார்கள் என்பது உண்மை இச்சிறந்த நூல் ஆங்கிலத்தில் மிகவும் பிரக்யாதி வாய்ந்த ஞானயோகத்தி லிருந்து பெரும்பாகம் தற்சமயமே தமிழில் வெளிவந்துள்ளன: ஸ்ரீ ஸ்வாமி விவேகானந்தராலேயே மதிப்புரை பெற்றவரும், உபகாரச் சம்பளம் பெற்றுவரும் ஜஸ்டிஸ் திருமயிலை பாரதபூஷணம் டாக்டர் எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் எழுதிய முன்னுரையுடன் கூடியது இதில் ஸ்வாமிகள் படமும். டாக்டரவர்கள் படமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூபா 2

---

புதிய நூல்! இதுவரையில் தமிழில் வெளிவராதது!

ஸ்ரீ ஸ்வாமி விவேகானந்தர்

## ஞானயோக இரஹஸ்யம்

☞ ஸ்ரீ ஸ்வாமிகள். செல்வத்தையும் அதிகாரத்தையும் தூலபோகத்தையும் பெரிதென எண்ணும் மேல் நாட்டிலுள்ள ஆங்கிலேயர்கட்குக் கர்ம, பக்தி, யோகம், ஞானம் என்னும் நான்குவித இரகசியங்களை உபதேசித்தார் அதில் மூன்றுபாகங்கள் தமிழ் மொழியில் வெளிவந்துவிட்டன. நான்காம் பாகத்தில் சில பிரசங்கங்கள் ஏற்கனவே நாம் வெளியிட்ட மேற்காட்டிய வேதாந்த இரஹஸ்யம் என்ற நூலில்வந்துவிட்டன, மற்றப் பிரசங்கங்களையும் தமிழில் வெளியிடுமாறு நண்பர்கள் பலர் கூறியவண்ணம் பிரசங்கத்திரட்டை வெளியிட்டுள்ளோம். வேதாந்த இரஹஸ்யத்தை ஆர்வமுடன் வாசித்த சகோதரர்கள் இதனை வாங்கி வாசித்து இன்புறுவார்கள்.

இதன் விலை ரூபா 2 4 0

---

## ஸ்ரீஸ்வாமி விவேகானந்தர் அருளிய எதிரொலிகள்
(ஆசிரியர் ஸ்ரீ சுப்பிரமணியசிவம்) விலை அணா எட்டு.

T. சாரதா புத்தகசாலே,

நே. 23-பாலேயப்பன் தெரு, மின்ட் போஸ்டு, மதராஸ்.

## ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் எழுதிய கடிதங்கள்

(முதற் பாகம் இரண்டாம் பாகம்.)

நமது பாரத தேசத்திலே இப்பொழுது தோன்றி யிருக்கும் தேசிய உணர்ச்சிக்கும் பௌருஷத்துக்கும் அடிவித்தாய் அவதாரபுருஷராய்த் தோன்றிய ஸ்ரீ சுவாமிகள் உலகு முழுமையும் த... குடும்பமாகவும், முக்கியமாகத்தமதுபுண்ணிய பூமியாகிய நமதுபாரதகண்டத்தினரைத் தமது நெருங்கிய பந்துக்களாகவும் பாவித்துத் தாம் ஆங்கிலத்தில் மேல்நாட்டிலும் கீழ்நாட்டிலு மிருந்து நண்பர்கட்கு எழுதிய கடிதங்களின் மொழிபெயர்ப்பாகும் இந்நூல். இக்கடிதங்களில் உலகினருடையவும், முக்கியமாகப் பாரத புத்திரர்களுடையவும் க்ஷேமத்தைககருதி, அநேக கேள்விகளைக் கிளப்பி ... மன்றியில், அநேக நியாயங்களையும் வெளியிட்டிருக்கின்றார், இக்கடிதங்களின் முதலாவது பாகத்தைப் படித்த சகோதரர்களுக்கு ஒரு விளம்பரம் எழுதி இதனை அறிமுகப்படுத்துவது அநாவசியமாம் அதிலும் ஸ்ரீ ஸ்வாமிகளின் நூல்களுக்கு விளம்பரம் எழுதவேண்டியது. அநாவசியமே! இந்நூலின் பெருமை வாங்கி வாசித்தார்களே யுணர்வார்களாக. சுவாமிகள் படத்துடன. விலை ரூபா 1 0 0

இந்தியாவின் இணையிலா மஹான்யார்?

## எனது குருநாதர்

(ஸ்ரீ பகவான் இராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரின் அவதார அற்புதம்)

ஸ்ரீ ஸ்வாமிகள் படத்துடன் விலை அணு 8.

## ஸ்ரீ ஸ்வாமி இராமதீர்த்த பரமஹம்ஸ விஜயம்

[இரண்டாம் பாகம்]

இதன் விலை சுவாமிகள் படத்துடன் உயர்ந்த பயிண்டு விலை ரூபா 3.

T. சாரதா புத்தகசாலை,
நே. 23-பாலையப்பன் தெரு, மின்ட் போஸ்டு, மதராஸ்.

## ஸ்ரீ ஸ்வாமி இராமதீர்த்த பரமஹம்ஸ விஜயம்.

(இதுவரையில் வெளிவராத இந்நூல் இப்போது
தமிழில் வெளிவந்திருக்கிறது.)

நமது தேசாபிமான சிரேஸ்டர் ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தரைப் போல் அமெரிக்கா ஐரோப்பா, ஜப்பான் முதலான அந்நிய நாடுகளுக்கு விஜயஞ்செய்து, நமது வேதாந்த ஜயபேரிகையை முழங்கச் செய்த பாஞ்சால நாட்டு அத்வைத கேஸரியாகிய ஸ்ரீ ஸ்வாமி இராமதீர்த்த பரமஹம்ஸ (எம். ஏ.) ரின் அற்புதசரித்திரமும் அவரது ஆத்மஞானக் கொள்கைகள், உபதேசங்கள் முதலியவைகளைத் தமிழ் நாட்டார் மிகத் தெளிவாக அறிந்து கொள்ளும் வண்ணம் அற்புதமான பிரசங்கங்கள் இதில் அடங்கியுள்ளன.

ஸ்வாமிகள் படத்துடன் உயர்ந்த பயிண்டு
[முதற்பாகம்] விலை ரூபா 1 4 0

## ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

### அமெரிக்கா உபதேசமாகிய அருள்மொழிகள்.

ஸ்ரீ ஸ்வாமிகள் ஆசார்ய கோடிகளிலே ஒருவராக அவதரித்து ஆத்மஞான ஒளியை எங்கெங்கும் வீசி, "அவனியே ஆத்மா, ஆத்மாவே அவனி," என்று எதிருரையாடுவோர், எவருமில்லாது, பரத் கண்டத்தில் மாத்திரமன்று, வேறு பன்னாடுகளிலும் சென்று பறை யறைந்து திக்விஜயம் செய்து, உண்மை யொன்றே பொருளென உரைத்து, கடைசியாய் உண்மையில் உண்மையாகக் கலந்துகொண்ட ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தருக்குதமது ஜன்ம பூமியும் மகரிஷிகளின் நாடாகியும் உள்ள இந்தியாதேசமாகிய இப்பரதக்கண்டத்தின் மீதும், அவருக்கிருந்த அன்புக்கு ஓர் அளவே யில்லை, தேசாபிமான சிம்ஹமெனத் திகழ்ந்து, தேசத்திலே ஒரு புதிய உணர்ச்சியை உண்டாக்கினார். உறங்கிக்கிடந்த ஜனங்களைத் தட்டி எழுப்பிவிட்டார். உண்மையை உரைத்தார். ஆண்மக்கள் ஆகவேண்டுமென்றார், ஸ்வாமிகள் படத்துடன் உயர்ந்தபயிண்டு ரூபா. 1 8 0

## T. சாரதா புத்தகசாலை,

நே. 23—பாலையப்பன் தெரு, மின்ட் போஸ்டு, மதருஸ்.

"சுயராஜ்யயுத்தத்தின் காரணமாக முதல் முறை 6-வருட காலம் சிறைவாசத்தில் அடைக்கப்பட்டிருந்தபொழுது ஸ்ரீஜத் ஸ்வதந்திராநந்தர் என்னும் சுப்பிரமணிய சிவம் இயற்றிய குருசிஷ்ய சம்பாஷணையாகிய சிறந்தவேதாந்த வசனநூலெது?

# சச்சிதாநந்தசிவம்

[நூலாசிரியரால் திருத்தப்பட்ட 3-ம் பதிப்பு]

[இந்நூல் குரு சிஷ்ய சம்பாஷணை ரூபமான அநுபவ வேதாந்த பொக்கிஷம்.]

இதிலடங்கிய விஷயங்கள்:— குருஸ்துதி. [illegible]ா ஷ்டகம். மூன்று பதிப்பின் முகவுரைகள் [illegible]ப்பணம், லக்ஷ்மீ நரஸிம்ஹ ஸ்தோத்ரம், 1. சுப்மே லக்ஷியம், 2. ஜீவ விளக்கம், 3. முமுக்ஷுத்துவ கஷ்டங்கள், 4. குருபக்தி விசேஷம், 5. வேஷதாரி குருக்கள், 6 சற்குருதர்சனம், 7. நம்பிக்கையே பிரதானம், 8. வெறும் நம்பிக்கையும் வீண்போகாது, 9. உத்தம உபதேசம், 10. விவர்த்தவாத வெற்றி, 11. "உடைமை" யை ஒழி, 12. சரீரம் ஒருமலமூட்டை, 13. மாயா விளக்கம், 14. மனநிரோதமே வேண்டும், 15. குருவே நாதர், 16. சரீரதிடம் அவசியம், 17. மஹான்கள் இருவகை, 18. ஜாதிக்கும் மோக்ஷத்திற்கும் சம்பந்தமேயில்லை, 19. வாசனா சக்தி, 20. ஜாதி தர்மரகசியம், 21. உயர்வு தாழ்வு இல்லை, 22. அரியதொ[illegible] உண்மை, 23. ஆனந்தசொரூபமே ஆத்மா, 24. புறத்துறவு அவசியமாயினும் போதாது, 25. சித்திகள் அற்பமாம், 26. க்ஷேத்திரங்கள் அவசியமாம், 27. பக்தியும் ஞானமும் ஒன்றே, 28. இராஜயோகசித்தி, 29. பரிபக்குவ பரீக்ஷை, 30. இராஜயோக அநுபவம், 31. வித்தையும் அவித்தையும் ஒன்றே, 32 இன்மையாம் கர்மசக்தி, 33. பலனைக்கருதாதே, 34. வெறும் படிப்பு வீணே, 35. மாயையின் மயக்கம், 36. ஜீவகாருண்யம், 37. சுற்றுதல் நிற்க, 38. ஜிதேந்திரிய மகிமை, 36 ஆச்ரம பேதங்கள், 40. சந்யாச மகிமை. விலை ரூபா 1 2 0

T. சாரதா புத்தகசாலை,
நெ. 23-பாலையப்பன் தெரு, மின்ட் போஸ்டு, மதருஸ்.

# ஆத்மஞான இரத்தினம் என்னும்

1004-உபதேச மொழிகள்.

[சுவாமி விவேகானந்தரால் அருளிச்செய்யப்பட்டது. ஆசிரியர் ஸ்ரீமான் சுப்பிரமணிய சிவம்;

"ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளுடைய மொழிகளும் ஞானங்களும் ஆகிய விலை மதிப்பிட முடியாத சுரங்கத்திலிருந்து எடுக்கப்பட்டமுக்கியமான சில ஞானப்பொருள்களை இந்த ஆத்மஞான ரத்தினம் என்னும் நூல் அடக்கிக்கொண்டிருக்கிறது. இந்தஅருமையான நூலில் பல உண்மைகள் பொலிந்து விளங்குகின்றன என்று பொதுவாகக் கூறவேண்டியிருக்கிறதன்றி, எந்த விதமான உண்மைகள் இதில் அடங்கியிருக்கின்றன என்று கூற முடியவில்லை. ஒவ்வொரு புத்தகசாலைக்கும், இந்த நூலைச் சிரோமணியாக வைக்கவேண்டுமென்பது நமது விருப்பம். தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் இந்த நூலில் காணப்படும் உண்மை உரைகளை மனப்பாடம் பண்ணிக்கொள்ளுதல் நலம், இதனைத் தமிழ் நாட்டார் பொன்னேபோல் போற்றுவாராக.

இதன் விலை ரூபா 2.

---

ஸ்ரீ சங்கரபகவத் பாதாசாரிய ஸ்வாமிகள் அருளிய

## அத்வைத உபதேச பஞ்சரத்னம்

("கிரணவளி" என்னும் வியாக்யானத்துடன்) இதன் விலை 0-6-0

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

---

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் எழுதிய

## கிழக்கும் மேற்கும்

[ஆசிரியர் சுப்பிரமணிய சிவம்.]
[விலை அணா எட்டு.]

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்
படத்துடன் விலை அணா 8

## வேதாந்த தத்துவம்

T. சாரதா புத்தகசாலை,
நெ 23-பாலையப்பன் தெரு, மின்ட் போஸ்டு, மதரூஸ்.

# பகவத்கீதை வசனம்.

பாக்கெட் அளவு

## 18-அத்தியாயங்களும்

வெகு சுத்தமாய் படங்களுடன் அடங்கியது.

இதில் வேதாந்த ரஹஸ்யத்திற்கு உபமானமாய் ஸந்தர்ப்பானுசாரமாய் உபநிஷத் வாக்யங்கள் ஆங்காங்கு உபஹரிக்கப் பட்டிருக்கின்றன.

யோகம் ஞானங்களை விளக்கிக்காட்டும் நூல்களில் இஃதே முதன்மை, பெற்றதுவாம். அலையுமனத்தை அகத்தில் அடக்குவதற்கு அரியபெரிய கருவிகளாகும் கற்றோரேயன்றி மற்றோரும் களிப்புடன் வாசிக்கத்தக்கதுவாம். ஏழைகளுக்கும் எளிதில்வாங்கும் பொருட்டே பாக்கெட் சைசில் விலை மிகவும சகாயமாய் ஏற்படுத்தப் பட்டது. இதன் விலை அணு 0 8 0

---

திருநந்திதேவர் ஆதிதிருவள்ளுவநாயனாராகிய திருமூல
தேவருக்கு உபதேசித்தருளிய சித்தாந்தம் வேதா
ந்தமுங்கடந்த நாதாந்தமுடிவான அமுர்த
பஞ்சாட்சர திருவ கிலையென்னும்

ஆருதார

## ஜீவோர்ப்பத்தி சிந்தாமணி

தத்துவதீபிகை.

இதன் விலை 0 4 0

திருமூலநாயினர் இயற்றிய தத்துவக்கட்டளை இதன் விலை 0 1 0

புதியபதிப்பு! வெளிவந்துவிட்டது!!

# வேதாந்தக்
# கட்டளைக் கொத்து:

## இதிலடங்கிய கட்டளைகள்.

| | |
|---|---|
| சிவப்பிரகாசக்கட்டளை | நாகாஜீவவாதக்கட்டளை |
| திருவாலவாய்க்கட்டளை | உபதேச உண்மைக்கட்டளை |
| வேதாந்தத்தத்துவக்கட்டளை | வேதாந்ததசாவத்தைக்கட்ட |
| ஜீவோற்பத்தி சிந்தாமணி | வேதாந்ததசகாரியக்கட்டளை |
| தத்துவதீபிகை | சித்தாந்தக்கட்டளை |
| ஞானக்கட்டளை | சித்தாந்த தத்துவலக்ஷணம் |
| தத்துவாமிர்தக்கட்டளை | |

அறுதிமுத்தனுகிய முதல்வன் ஆன்மாக்களின்கன்மத்திற்கீடாகப் பலசமயங்களை வேதத்தில் வகுத்து வைத்தனர். அவ்வேதங் காரணமாகவே அவ்வச்சமயத்தினர்கட்கு ஏற்பட்டுள்ள சாஸ்திரங்களும் பலவாயின. அவ்வச்சாஸ்திரங்களிற் பிரதிபாதிக்கப்படும் ஆன்மஇலக்கணங்களையும், பாமான்ம இலக்கணங்களையும், தெரிந்து கொள்ளற்குக்கூறப்பட்டுள்ள விஷயங்கள் அவ்வச்சமயங்கட்கேற்றவாறு பரிபாஷா வைப்பினுல் சுலபத்தி லறிதற் கேலாதபடி யிருக்கின்றமையினைக் கருதி அவ்வச்சமயங்களில் வல்லவர்களாகிய பெரியோர்கள் தங்கள் தங்களுக்குறிய காஸ்திரங்களுக்குச் சோபானமாக எளியவசன நடையில்யெழுதி நல்ல காகிதத்தில் அச்சியிட்டிருக்கிறோம்.

| | |
|---|---|
| இதன் விலை ரூபா | 1 0 0 |
| ஷை கிளேஸ் காகிதம் | 1 8 0 |

---

T. சாரதா புத்தகசாலை,

23, பாளையப்பன் தெருவு, மின்ட் போஸ்டு, மதறாஸ்.